ஜூன் 24, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

வன்னிக்கு ஏது விமோசனம்?

சவாரிச் சைக்கிளை சுமக்கும் சோகம்!

இனப்பிரச்சினை

பார்த்தசாரதியின் தீர்க்கதரிசனம்

வீட்டிலும் வெள்ளம் ஆட்கள் வெளியில்!

குடாநாட்டின் சந்து பொந்துகளில் புலிகளைத் தேடும் படையினர்!

அரச நிர்வாகத்தை முடக்கும் எச்சரிக்கைக் கடிதங்களால் உஷார்!

சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் குடாநாட்டில் விடுதலைப் புலிகள் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி இருக்கிறார்கள்.

புலிகள் தங்கள் நடமாட்டங்களையும், நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியிருப்பதை அடுத்து படையினரும் உஷாரடைந்துள்ளனர்.

புலிகளின் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகள் என நம்பப்படும் இடங்களில் படையினர் தேடுதல்களை அதிகரித்துள்ளனர்.

சைக்கிள்களில் நடமாடும் புலி உறுப்பினர்களை நோட்டம் விட்டு பின்தொடர்ந்து அவர்களை மடக்குவதற்காக படையினரும் சிவில் உடையில் சைக்கிள் ரோந்துகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொக்குவில், ஆனைக்கோட்டை, கோண்டாவில் பகுதிகளில் புலிகளின் நடமாட்டத்துக்குப் பெயர்போன குச்சொழுங்கைகளுக்குள்ளும், சந்து பொந்துகளிலும் படையினர் சைக்கிள் ரோந்தில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

புலி உறுப்பினர்களும், படையினரும் நேருக்கு நேர் சந்தித்து மோதிக் கொண்ட பல சம்பவங்கள் அண்மையில் இடம்பெற்றிருக்கின்றன.

கொக்குவிலில் கடந்த 12ஆம் திகதி முற்பகல் சைக்கிளில் வந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் சிவில் உடையில் வந்த ஆயுதபாணிகளை எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்ததில் அங்கு துப்பாக்கி மோதல் ஏற்பட்டது.

கொக்குவில் பொற்பதி வீதி, ஆடியபாத வீதி சந்திக்கு அண்மையில் பிறவுண் வீதியில் நல்லூர்ப் பிரதேச சபையின் உப அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகத்துக்கு வந்த புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர்களே தற்செயலாக படையினரை எதிர்கொள்ள நேர்ந்ததாகவும் அச்சமயம் அவர்கள் படையினர் மீது பிஸ்டல்களால் சுட்ட போதும் அங்கு பொதுமக்களின் நடமாட்டம் அதிகமாக இருந்ததால் படையினர் பெரிய அளவில் பதில் தாக்குதல் நடத்தவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் அப்பகுதியில் புலி உறுப்பினர்களுடன் மோதியோர் சிவில் உடையில் காணப்பட்டதாகவும் அவர்கள் படையினரா அல்லது தமிழ் ஆயுதக் குழுக்கள் எதனையும் சேர்ந்த உறுப்பினர்களா என்பது தெரியவில்லை என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் அநாதரவாகக் காணப்பட்ட இரு சைக்கிள்களைப் படையினர் பின்னர் மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் படையினர் சோதனை நடத்தினர். அங்குள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் திருநெல்வேலி படை முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இந்தப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழ்க் கட்சி ஒன்றைச் சார்ந்த பிரதேச சபைத் தலைவர் ஒருவரை இலக்கு வைத்தே புலிகளின் பிஸ்டல் குழுவினர் அங்கு அடிக்கடி நடமாடி வருவதாக பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்களின் உயிருக்கு மீண்டும் புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

வடபுலத்தில்

இதேசமயம் புலிகள் தங்களின் நிர்வாக சேவைப் பிரிவின் செயற்பாடுகளையும் யாழ்ப்பாணத்தில் மீண்டும் முடுக்கி விட்டிருப்பது போலத் தெரிகின்றது. புலிகளின் யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாள ராகச் செ.பைந்தமிழன் என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார். தற்போது உள்ளூர் அரச நிர்வாக விடயங்களில் புலிகளின் கவனம் திரும்பி உள்ளது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு நீண்டகாலத்தில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய குடிசன மதிப்பீட்டை புலிகள் தலையிட்டு நிறுத்தியிருக்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழர் பிரதேசங்களில் இந்தக் குடிசன மதிப்பீட்டை நடத்துவது தமிழ் இனத்துக்குப் பெரும் பாதிப்புக்களை உருவாக்கும் என்று கூறி, குடிசன மதிப்பீட்டுப் பணி இப்போது வேண்டாம் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், யாழ்ப்பாணத்தில் உள்ள சில அரசசார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்தோரும் அரசிடம் கோரிக்கை விடுத்தும் கூட குடிசன மதிப்பீட்டுக்கான பூர்வாங்கப் பணிகள் குடாநாடு முழுவதும் தூரிதமாக நடைபெற்று வந்தன. இதனையடுத்தே புலிகள் இது விடயத்தில் தலையிட்டிருக்கின்றனர்.

குடிசன மதிப்பீட்டை ஸ்ரீலங்கா அரசின் சூழ்ச்சித் திட்டம் என வர்ணித்துள்ள புலிகள், குடாநாட்டில் அது தொடர்பான நடவடிக்கைகளிலோ, விவரங்களைத் திரட்டும் பணியிலோ ஈடுபடவேண்டாம் என்று யாழ்ப்பாண அரச செயலக அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர்.

நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ. பைந்தமிழன் ஒப்பமிட்டு செயலக அதிகாரிகளுக்கு தபால் மூலம் அனுப்பிய கடிதங்களில், அரசாங்க அதிபரோ ஏனைய அதிகாரிகளோ குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டால் வருந்தத்தக்க சம்பவங்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் அறிவுறுத்தலை அடுத்து குடிசன மதிப்பீடு தொடர்பான சகல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன. பிரதேச செயலகங்களிலும், யாழ்.செயலகத்திலும் குடிசன மதிப்பீடு தொடர்பாக நடத்தப்பட இருந்த சகல பயிற்சி வகுப்புகளும் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு முழு ஆதரவு வழங்கிவரும் ஈ.பி.டி.பி கட்சியும் தற்போதைய சூழ் நிலையில் தமிழர் பகுதிகளில் குடிசன மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்ளக் கூடாது என்று அரசாங்கத்திடம் கேட்டிருந்தது.

நாடளாவிய ரீதியில் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் குடிசன மதிப்பீடு வடக்கு—கிழக்கில் தடைப்பட்டால் அது முழுமை பெறப்போவதில்லை. எனவே குடிசன மதிப்பீட்டை நாடளாவிய ரீதியில் ஒத்திவைக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

— வலிகாமத்தான்

ஆஞ்சநேயர் சிவபக்தர் அல்லர் சைவர்கள் அவரை வழிபடுவதா?

சமயச் சர்ச்சை

இ. நமசிவாயம்
(திருக்கேதீஸ்வரம் அறங்காவலர்)

உலகத்தில் உள்ள சமயங்கள் பல. அவற்றில் இந்து சமயம் பழைமையானது.

இந்து சமயம் என்று சொன்னால் அதில் வேதத்தை ஆதாரமாக ஏற்கும் சமயங்கள் சைவம், வைணவம், சாக்தம் என்பனவாகும்.

இவை மூன்றையும் நடைமுறைச் சமயங்கள் என்று எமது மூதாதையர் காலந் தொட்டு பேரறிஞர்கள் அழைத்து வருகின்றனர்.

இம்மூன்று நடைமுறைச் சமயங்களுக்கும் கோயில் வழிபாடு, கோயில் கிரியைகள், பூசை முறைகள் எல்லாம் உள்ளன.

சைவத்தைப் பொறுத்தவரை சிவாகமங்கள் தான் முக்கியமானவை. அவற்றில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு படிமுறைகள் உள்ளன.

இவை இறைவனை அடைவதற்கான நான்கு வழிகள் என்று கூறுவர். இவை பற்றி சிவாகமங்களே சிறப்பாகக் கூறுகின்றன.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் படிமுறைகள் மூலமே சமய ஆச்சாரியர்கள் நால்வரும் இறைவனின் திருவடிகளைச் சென்றடைந்தனர்.

இவர்களுடைய வாழ்க்கைவரலாறு பெரிய புராணத்திலே விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. 63 நாயன்மார்களுடைய வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட ஒரு புனித நூல் பெரிய புராணம். பெரிய புராணத்தைச் சைவர்கள் போற்றுகின்றனர். 63 நாயன்மார்களில் இருந்தும் வித்தியாசமானவர் மாணிக்க வாசகர். எனினும் சமய ஆச்சாரியர்கள் நால்வருள் அகரம்ஒருவர். இவருடைய வாழ்க்கைவரலாறு திருவாதவூர் அடிகளார் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

பெரியபுராணத்திலோ அன்றி வேறு சைவநூல்களிலோ ஆஞ்சநேயரைச் சிவன் அடியார் என்றோ, சிவபக்தன் என்றோ கூறப்படவில்லை.

எனவே சைவர்கள் ஆஞ்சநேயரைச் சிவ பக்தராக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அப்படி ஏற்றுக் கொள்ளாமல் விடுவதில் எவ்விதத்தவறும் இல்லை.

இன்று பல சைவர்கள் ஆஞ்சநேயரைச் சிவபக்தராக ஏற்றுக் கொள்ளாத போதிலும் அவரை வழிபடவே செய்கின்றனர்.

அது சைவசமயத்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சைவர்கள் அல்லாதவர்கள், ஆஞ்ச நேயர் மீது பக்தி கொண்டவர்கள் ஆஞ்ச நேயரை சிவபக்தனாகத் திணிக்க முயல்வது பெரும் தவறு.

விஷ்ணு அவதாரங்களில் ஒன்றாகவே இராமர் கருதப்படுகிறார். அவர் வைணவர்கள் போற்றும் கடவுள்.

ஆஞ்சநேயர் இராம பக்தர். இராமபக்தரான ஆஞ்சநேயரைச் சைவர்கள் அல்லாதோர் சிவபக்தன் என்று கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

ஏனைய சமயங்களைப் பொறுத்த வரை சைவசமயத்தின் நிலைப்பாட்டை சிவஞான சித்தியாரில் உள்ள பின்வரும் செய்யுள் நன்கு விளக்குகிறது.

''ஓதுசம யங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோ டொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினான் இவை யெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அது சமயம் பொருள் நூல்
ஆதலினான் இவையெல்லாம் அருமறையாகமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக் கீழ் அடங்கும்''

என்னைப் பொறுத்தவரை நான் வைணவன் அல்லன், சைவன். வைணவ சமயத்தை நான் ஏற்றுக் கொள்ளப்போவதுமில்லை. அதற்காக அந்தச் சமயத்தைத் தூஷிக்கவும் மாட்டேன். ஆயினும் ஒன்றை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். உண்மையான சைவர்கள், இராம பக்தரான ஆஞ்சநேயரை வழிபடுவது எந்த விதத்திலும் பொருத்தமற்றதாகும்.

மனைவிக்கு கோயில்

யாரை வழிபடுவது, எவருக்குக் கோயில் கட்டுவது என்பனவற்றுக்கு எல்லாம் இன்று வழி முறையே கிடையாது.

சினிமாப் புகழ் குஷ்புவுக்கு அவருடைய ரசிகர்கள் தமிழ் நாட்டிலே கோயில் கட்டினார்கள் என்று செய்தி வெளிவந்தது.

சினிமாவில் ஆரம்பித்து, அரசியலில் இறங்கி தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவி பெற்றுப் பின்னர் பல்வேறு ஊழல் வழக்குகளில் மாட்டிக்கொண்டு அவதிப் படும் ஜெயலலிதாவுக்கும் (இப்போது மீண்டும் இரண்டாவது முறையாகவும் அவர் முதலமைச்சர்) கோயில் கட்டக் கிளம்பினார்கள் அவருடைய அபிமானிகள்.

இந்தவகையிலே இப்படியும் ஒன்று நடக்கிறது பாருங்கள்.

இறந்து போன மனைவிக்காகக் கோயில் கட்டி, தினமும் பூஜை செய்து வழிபட்டு வருகிறார் ஒருவர்.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அருகே உள்ள காராச்சிகொரை என்ற ஊரைச் சேர்ந்தவர் நஞ்சையகவுடர். தன் மனைவி லட்சுமி அம்மாள் இறந்தபிறகு மனைவியின் நினைவாக கோயில்கட்டி, மார்பளவு சிலை வைத்து, தினம் பூஜை செய்துவருகிறார்.

''அவள் ஒரு பண்ணாரி அம்மன் பக்தை. எனக்கு நாலு ஏக்கர் தோட்டம் இருந்தது. ஆனால், தண்ணீர் இல்லை. ஜோசியர்கள், விஞ்ஞானிகள் எல்லோரும் வந்து பார்த்து விட்டு, இங்கே தண்ணீரே வராது என்று சொல்லிவிட்டார்கள்.

ஒரு நாள் என் மனைவிக்கு அருள் வந்து 'காட்டுக்கு கிழக்குப்புறம் கிணறு வெட்டு. தண்ணீர் வரும்' என்று சொன்னார். அதை நம்பி கிணறு வெட்டினேன். அவள் சொன்ன மாதிரியே தண்ணீர் வந்தது. அதன் மூலம் விவசாயம் செய்து சம்பாதித்து காடு, தோட்டம் வாங்கினேன். அப்போது இருந்தே என் மனைவிதான் தெய்வம்'' என்கிறார், நஞ்சையகவுடர்.

தினசரி காலை, மாலை, பூஜை செய்கிறார். அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை நாட்களில் பொங்கல் வைத்து, படையல் செய்து பூஜை நடத்துகிறார். புரட்டாதி மாதம் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

எப்படி இருக்கிறது அந்தப் பண்ணாரி அம்மன் பக்தை வழிபாடு?

ஜனாதிபதி சந்திப்போடு ஹக்கீமின் "சூடு" தணிந்தது!

வெளியேற்றம் இல்லை; பேரியலுக்கு நிபந்தனை

அரசாங்கத்தின் மீது கொதி யோ கொதி என்று கொதித்துக் கொண்டிருந்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து சுமார் இரண்டரை மணிநேரம் பேசியதோடு அவருடைய சூடு தணிந்து சற்றுச் சாந்த மடைந்து இருக்கிறார்.

எனினும் —

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கி ரஸுக்கும் அதன் சகோதரக் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உட்பூசல் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. இதே வேளை முஸ்லிம் காங்கிரஸின் அரசாங்கத்துடனான உறவு தெறிக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

சிறுபான்மை கட்சிகளான மு.கா, தே.ஐ.மு ஆகியவற்றுக்கிடையில் அரச உயர் மட்டத்தின் மறைகரங்கள் "பிரித்து அழிக்கும்" கொள்கையைச் செயற்படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

ஹக்கீம்

இதனை மு.கா தலைவர் ரவூப் ஹக்கீமே தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார். பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டும் செயலை அரசாங்கத்தில் உள்ள சிலரும், தே.ஐ.முன்னணியில் உள்ள சிலரும் மேற்கொண்டு வருவதாக அவர் வெளிப்படையாகவே குற்றம் சாட்டியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பது இது முதல் தடவை அல்ல. அமைச்சர் பௌசிக்கும் மறைந்த தலைவர் அஷ்ரப்புக்கும் இடையிலான கருத்து மோதல் ஏற்பட்ட போது முறுகல் நிலை தொடங்கிவிட்டது.

அமைச்சரவைக் கூட்டமொன்றின் போது ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா காலஞ்சென்ற மு.கா தலைவர் அஷ்ரப்பிடம் மன்னிப்புக் கோரியதன் மூலம் அப்போது நிலைமை சுமுகமாகியது.

அமைச்சர் அஷ்ரப்பிடமிருந்து கப்பல் துறை வாபஸ் பெறப்பட்ட போதும் முறுகல் நிலை ஏற்பட்டது. கப்பல் துறையை ஜனாதிபதி சந்திரிக் கா குமாரதுங்கா பொறுப்பேற்ற போதும் இறுதியில் சுமுக நிலையை ஏற்படுத்தும் நோக் கில் ஜனாதிபதி அந்தப் பொறுப்பை தொடர்ந்து கவனிக்க அஷ்ரப்பையே விட்டிருந்தார்.

ஹக்கீம் இனவாதியா?

ஆனால் இப்போது தோன்றி யிருக்கும் 'அரசு மு.கா உறவு விரிசல்' மிகவும் உணர்வு பூர்வ மான விவகாரத்தினால் ஏற்பட் டிருக்கிறது.

கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கையின் விளைவாக ஏற்பட்ட இம்முறுகல் நிலை நேரடியாக மக்களுடன் தொடர்புபட்டதாகும். கரையோர மாவட்டம் மு.கா வினால் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்ட விடயம். இதற்கு இணக்கம் தெரிவித்துத்தான் அரசாங்கமும் மு.கா ஆதர வுடன் ஆட்சியை நிறுவியது.

ஆனால் காலப்போக்கில் கரையோர மாவட் டக் கோரிக்கை சூடுபிடித்த போது அரசாங்கம், உறுதியானதும் தெளிவானதுமான முடிவைத் தெரிவிக்கவில்லை.

ஹக்கீம் சாடல்

"கல்முனைக் கரையோர மாவட்டத்தைத் தரமுடியுமா முடியாதா என்பதை அரசாங்கம் வெளிப்படையாகத் தெரிவித்திருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்வதற்குப் பதிலாக என்னையே இனவாதியாகக் காட்டுவதற்கு முயற்சிகிறார்கள். அத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் அரசாங்க அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டுப்பொறுப்பை மீறியுள்ளனர். அத்துடன் பெரும்பான்மை மக்களின் இன உணர்வுகளைத் தூண்டும் வகையிலும் செயற்படுகிறார்கள்" என்று சாடியிருக்கிறார் ரவூப் ஹக்கீம்.

"சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைக்கும். பின்பு மெல்ல அக்கட்சிகளை ஆக்கிரமிக்கும். அக்கட்சிகளின் முக்கியஸ்தர்களைத் தன்பக்கம் இழுத்துக் கொள்ள அந்தரங்கமாகச் சதி செய்யும். இப்படித்தான் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், லங்கா சமசமாஜிக் கட்சிக்கும், ஸ்ரீ மணி அத்துலத் முதலிக்கும் நிகழ்ந்தது" என்று வரலாற்று ஆதாரம் காட்டுகிறார்கள் மு.கா விலுள்ள அரசாங்க எதிர்ப்பு அதிருப்தியாளர்கள்.

கல்முனை கரையோர மாவட்டத்துக்கு எதிராக அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கா குருநாகல் கூட்டம் ஒன்றில் பேசிய பேச்சுக்கும், கல்முனை நகரம் மாநகர தரத்துக்கு உயர்த்தப்படுவது தொடர்பான ஜனாதிபதியின் தீர்மானத்துக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது.

கல்முனையை மாநகர தரத்துக்கு உயர்த்துவது கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கைக்கு இணையாகாது என்பது ஹக்கீமின் வாதம். கரையோர மாவட்டம் தொடர்பான கமிஷன் நியமித்து அதன் அறிக்கைப் பிரகாரமே முடிவு எடுக்க முடியும் என்கிறார் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன. இதற்கு பக்கப்பாட்டுப் பாடுகிறார் அமைச்சர் பௌசி.

இந்நிலையில் 'அரசாங்கத் தரப்பு அமைச்சர்களின் சதி வலைப் பின்னலில் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவியான பேரியல் அஷ்ரப்பும் அவரது சகாக்களும் சிக்கியிருக்கிறார்களே என்று தாம் விசனப்படுவதாக' ஹக்கீம் தெரிவித்தார்.

அரசில் இருந்து மு.கா விலகுமா?

மு.கா — அரச உறவுகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அரசிலிருந்து மு.கா ஏன் வெளியேறவில்லை?

"வெளியேறும் தீர்மானத்தை எடுப்பதற்கு முன் அதற்கு வேறு மாற்று வழிகள் உண்டா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. பொறுப்புடன் கடமையாற்ற வேண்டியிருப்பதால் பொறுமை யுடன் நிலைமைகளை அவதானித்து வருகிறேன். கட்சியின் கய கௌரவத்துக்கும் தன் மானத்துக்கும் இழுக்கு ஏற்படுத்தும் செயல்களும் மறைமுகமாக எம்மை ஓரங்கட்டும் வேலைகளும் தொடருமானால் அரசிலிருந்து வெளியேறவே செய்வோம்"

இப்படி ரவூப் ஹக்கீம் கூறுகிறார். இதிலிருந்து இறுதி முடிவு எடுக்கும் நாள் இன்னும் பின்தள்ளி வைக்கப்படுவதாகவே கொள்ளப் படுகிறது.

புதிய தகவல்கள்

முஸ்லிம் காங்கிரஸ் எதிர்நோக்கும் இருமுனைத் தாக்குதல்களுக்குப் பின்பு புதிய தகவல்கள் சிலவும் வெளியாகியுள்ளன.

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்றவர் முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ். அவர் தலைவர் ஹக்கீமிடம் தமக்குத் தேசியப் பட்டியல் எம்.பி பதவி தரும்படி கோரிக்கை விடுத்திருந்தார் என்று இப்போதுதான் ஹக்கீம் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். கட்சிக்குக் களங்கத்தையும், அகௌரவத்தையும் ஏற்படுத்தும் விதமாக ஹிஸ்புல்லாஹ் நடந்திருப்பதையும் ரவூப் ஹக்கீம் விளக்கியுள்ளார். அவருக்கு ஒரு வருட பரீட்சார்த்த காலம் விதிக்கப்பட்டிருந்தது என்றும் ஹக்கீம் அம்பலப்படுத்தி யிருக்கிறார்.

அத்தோடு பேரியல் அஷ்ரப் சார்பாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா செயற்பட்டார் என்றும் அது குறித்து ரவூப் ஹக்கீமுக்கும் திஸாநாயக்கா விற்கும் இடையில் முன்பே பிரச்சினைகள் இருந்தன என்றும் மு.கா முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பேரியலுக்கு ரகசிய ஆவணம்

"1999 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின் ஆட்சி அமைப்பது தொடர்பாக எஸ்.பி.திஸாநாயக்கா ஹக்கீமுடன் பேச்சு நடத்தினார். ஜெய்க் ஹில்டன் கட்டிடத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் கரையோர மாவட்டம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாடு ஆகியவை பற்றி பேசப்பட்டது" என்கிறார் அவர்.

பேரியல்

"எஸ்.பி.திஸாநாயக்காவின் வேண்டு கோளின பேரில் புரிந்துணர்வு உடன் படிக்கை யினை ஹக்கீம் எழுதியதோடு பிரதி ஒன்றை அவருக்கு அனுப்பியும் வைத்தார். ஆனால் அந்த புரிந்துணர்வு உடன்படிக்கை பிரதியை இரகசியமாக பேரியல் அஷ்ரப்புக்கு எஸ்.பி.திஸாநாயக்கா அனுப்பி வைத்தார். இதுபற்றி பின்பு அறிந்துகொண்ட ரவூப் ஹக்கீம் எஸ்.பி.திஸாநாயக்காவிடம் கேள்வி எழுப்பியதால் அப்போதே இருவருக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்பட்டன. அதன் தொடர்ச்சி தான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது" என்று விளக்கியுள்ளார் அந்த மு.கா முக்கியஸ்தர்.

"புரிந்துணர்வு உடன்படிக்கை பேரிய விடம் சென்ற பின்புதான் அவரிடமிருந்து ஹக்கீம் தரப்புக்கு எதிரான அறிவிப்பு வெளியாகியது. பேரியல— சந்திரிக்கா சந்திப்பை அடுத்து வெளியான அந்த அறிவிப்பில் அரசாங்கத்திற்கு நிபந்தனை அற்ற ஆதரவு வழங்குவதாக பேரியல் அஷ்ரப் தெரிவித்தார் என்றும் அத்தகவல் கூறுகிறது.

பேரியலுக்கு சவால்

ஆனால் அரசுக்கு நிபந்தனைகள் அற்ற ஆதரவு வழங்குவதாகத் தாம் ஒருபோதும் கூறவில்லை என பேரியல் அஷ்ரப் மறுத்திருக்கிறார். இந்த மறுப்பின் காரணமாக அவருக்கு சவால் விடுகிறார்கள் மு.காவில் உள்ள அரச அதிருப்தியாளர்கள்.

நிபந்தனையற்ற ஆதரவு வழங்கவில்லை என பேரியல் கூறுவது உண்மையானால், அரசாங்கத்துடன் ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலை காரணமாக முதலில் பதவி விலக அவர் முன்வருவாரா? இதுதான் பேரியலுக்கு விடப்பட்டுள்ள சவால்.

ஹக்கீமின் நிபந்தனைகள்

நிபந்தனையற்ற ஆதரவு பற்றிய சவால் இருக்கும் நிலையில் பேரியலுக்கு, ரவூப் ஹக்கீம் மறைமுகமான நிபந்தனை விதித்திருக்கிறார்.

கடந்த 15 ஆம் திகதி மு.கா தலைமையகத்துக்கு முன்னால் பேரியலையும், ஹிஸ்புல்லாஹ்வையும் மு.கா அதியுயர் பீடத்துக்குள் சேர்த்துக் கொள்ள கோரி அம்பாறை மட்டக்களப்பு பகுதி ஆதரவாளர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டதை அடுத்து இந்த நிபந்தனை விதிக்கப்படுவதாகத் தெரிகிறது.

செய்தியாளர் மாநாட்டில் ஹிஸ்புல்லாஹ்வை கட்சி பதவிகளுக்கு நியமிப்பதை செய்தியாளர் மாநாட்டில் ரவூப் ஹக்கீம் நிராகரித்தார்.

அமைச்சர் பேரியலை மு.கா பதவி ஒன்றில் நியமிப்பது குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்.

தன்னை பயமுறுத்துவதன் மூலம் வெளிச் சக்திகளின் அனுசரணையுடன் கட்சிக்குள் பதவி பெற எடுக்கும் முயற்சிகளுக்குத் தலை வணங்க முடியாது என்றும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் ரவூப் ஹக்கீம் தெளிவான எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார்.

"பேரியல் அஷ்ரப் புரிந்துணர்வுடன், கடசித் தலைமைத்துவத்துடன் ஒத்து செயல்பட வேண்டும். கட்சி நடவடிக்கைகளில் சிக்கல்களும் முரண்பாடுகளும் ஏற்படாத வகையில் நடந்துகொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

கட்சியின் தன்மானத்தையும், கய கௌரவத்தையும், ஸ்திரத் தன்மையையும் பாதிக்கும் நடவடிக்கைகளில் பேரியல் அஷ்ரப் ஈடுபடக் கூடாது. தற்போது இருக்கும் சூழ்நிலையில் அவர் கயநலவாத சக்திகளின் சதி முயற்சிகளுக்கு பலியாகி இருப்பதை இட்டு நான் விசனப்படுகிறேன். இதனால் நம்பிக்கை அளிக்கும் வகையில் அவர் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கிறேன்" இப்படி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அதே நேரம் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சிலர் மேலும் நிபந்தனை விதி க்க வேண்டும் என்கிறார்கள்.

ஜனாதிபதியின் கைப் பொம்மையாக அவர் விளங்க முயற்சிக்கக் கூடாது. கரையோர மாவட்டத்துக்கு பூரண ஆதரவு தெரிவிக்கவேண்டும். கட்சிக்கு கட்டுப் பட்டு நடப்பதாக உறுதி யளிக்க வேண்டும். தே.ஐ.மு (ரு.ஆ) நடத்திய ரகசிய கூட்டத்தை நிராகரித்து பிரிந்த அறிக் கை விடவேண்டும். அத்தோடு அமைச்சர் என்ற வகையில் மாவலலையை அனர்த்தங்களுக்குப் பூரண நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிபந்தனை களுடனேயே அவரை மு.கா அதியுயர் பீடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என இவர்கள் தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

எதிர் திசைகளில் ஹக்கீம் — பேரியல்

நிலைமை இவ்வாறு இருக்கையில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தே.ஐ.முன்னணியை முன்னெடுத்துச் செல்லும் முகமாக பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாக நம்பகரமாகத் தெரியவருகிறது. தேசிய ஐக்கிய முன்னணிக்கு புதிய யாப்பு ஒன்றை உருவாக்கும் பணி முடியும் தருவாயில் இருப்பதாகவும், விரைவில் தேர்தல் ஆணையாளரை பேரியல் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே நேரம் பேரியல் அஷ்ரப்பை தலைவராக கொண்ட தே.ஐ. முன்னணியின் அரசியல் பீடம் அதிகாரம் அளிக்கப்படாத சிலரினால் கூட்டப்பட்ட செல்லுபடியற்ற கூட்டம் என்று கூறப்படுகிறது. அதனால் தே.ஐ முன்னணியின் அதியுயர் பீடத்தை கூட்டியிருப்பதாகவும் செயலாளர் என்ற வகையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் விரைவில் கூட்டவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

— பாத்திமா ஷாதீரா

GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromind Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

Eurostar
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

தலைநகரில்
Maths / Science & Technology
O/L 2001, O/L 2002

Subject	O/L 2001	Grade 10
Maths	Fri 5.00-7.00	Fri 3.00-5.00
Science	Thu 5.00-7.00	Thu 3.00-5.00

விநியோகி W.L.Rajaratnam
EPI
316, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி: 075-516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)

மலைநாட்டில்
Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

Subject	O/L 2001	O/L 2002	Grade 9
Maths	Sat 1.30-330	Sun 10.30-12.30	Mon / Tue 4.45-5.30
Science	Sat 11.30-130	Sun 8.30-10.30	Mon / Tue 4.45-5.30

விநியோகி W.L.Rajaratnam
EPI
87 / 1A, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொலைபேசி: 072-500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)

என்டெனா பொருத்துதல்

Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478743, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

அவசர திருத்தங்கள்

Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478743, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி

24 ஜூன், 2001

36/2, பிரேட்ரிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏன் இந்த நிலைமை?

அரசாங்கத்துக்கும் அதில் ஓர் அங்கமாகியிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையே இன்று சுமுக நிலை இல்லை. ஒரே அவநம்பிக்கை.

பிரச்சினைகள் தோன்றி முறுகல் நிலை ஏற்பட்டுவிட்டது. நெருக்கடி வலுத்து வருகிறது.

முஸ்லிம் காங்கிரஸுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிவிட்டது. முஸ்லிம் காங்கிரஸை மட்டுமென்ன, முஸ்லிம் மக்களையே அரசாங்கம் ஏமாற்றிவருகிறது.

அரசாங்கத்தின் மீது முஸ்லிம் காங்கிரஸ் இப்படிப் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டுகிறது.

அரசாங்கத்தின் மீது முஸ்லிம் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூடத் தெரிவித்திருக்கிறார்.

அப்படியானால் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகுமா என்று எங்கும் கேள்வி எழுப்பப்படுகிறது.

அது நடக்குமா என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில் அது நடந்துவிட்டால் அரசாங்கம் விழுந்துவிடும். அப்புறம் அரசாங்கத்தின் மீது நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டிய தேவை ஐ.தே.கவுக்கு இருக்காது.

முஸ்லிம் காங்கிரஸின் இணைக் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணி சார்பாக அரசாங்கக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நான்கு எம்.பிக்கள் உட்பட மொத்தமுள்ள 11 முஸ்லிம் காங்கிரஸ் காரர்களும் அரசாங்கத்திலிருந்து விலகினால் அரசுக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும் பான்மையான 113 வாக்குகள் இருக்கமாட்டா.

ஈ.பி.டி.பியின் ஐந்து எம்.பிக்களும் (இவங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நான்கு எம்.பிக்களும் தொடர்ந்து அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தாலும் அரசாங்கத்துக்கு உள்ளது 105 வாக்குகள்தான்.

நிலைமை அப்படியிருந்தும்கூட ரவூப் ஹக்கீமுக்கு விட்டுக்கொடுக்க ஜனாதிபதி தயாராக இல்லை. காரணம் என்ன? முஸ்லிம் காங்கிரஸின் உள்கட்சிக் குழப்பம்தான்.

முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்து குறுகிய காலத்தில் அதைத் தான் விரும்பும் பெரும்பான்மைக் கட்சியை ஆட்சி அமைக்க வைக்கும் வல்லமை படைத்ததாக வளர்த்து எடுத்தவர் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஷ்ரப். அவருடைய மனைவி பேரியல் அஷ்ரப் அமைச்சராக்கப்பட்டாலும் முஸ்லிம் காங்கிரஸில் முக்கிய பதவி எதுவும் அவருக்கு வழங்கப்படவில்லை. பெயருக்குத் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியாக்கப்பட்டிருக்கிறார். இப்படி அம்பாறை மாவட்ட மக்கள் குமுறுகிறார்கள்; கொதிக்கிறார்கள். கொழும்பில் வந்து ரவூப் ஹக்கீமுக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் செய்தார்கள்.

பேரியல் அஷ்ரப்புடன் ஜனாதிபதி நெருங்கிய நட்புறவு வைத்துக் கொண்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய கோரிக்கைகளான கல்முனை கரையோர மாவட்டம், ஒலுவில் துறைமுகம், தென் கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி முதலானவை நிறைவேற்றப்படும் என்று அவருக்கு ஜனாதிபதி உறுதி அளித்திருக் கிறார் என்று கூறப்படுகிறது.

ஆக, ரவூப் ஹக்கீம் அரசிலிருந்து வெளியேற முனைவந்தாலும் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த மற்றவர்கள் எல்லோரும் அவரைப் பின் தொடரத் தயாராக இல்லை என்று ஜனாதிபதி திடமாக நம்புகிறார். எனவேதான் அவருடன் இறுக்கமாகவும் அதேவேளை பேரியல் அஷ்ரப்புடன் நெருக்கமாகவும் இருக்கிறார்.

கட்சிக்காகத் தலைவர்களை தவிர தலைவர்களுக்காகக் கட்சி அல்ல. இந்த உணர்வுடன் மக்களின் விருப்பத்துக்கு இணங்க தகுதியானவர்களுக்குக் கட்சியில் தகுந்த இடங்களைக் கொடுத்து கட்சி அழிந்து போகாமல் அதை முதலில் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். கட்சி இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும். கட்சி சிதைந்தால் மக்கள் சேவை சிறப்பாக நடக்கும். எந்த அரசும் கட்சியை மதிக்கும்.

பார்த்தசாரதியின் தீர்க்கதரிசனம் மெய்யாகிறது!

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகப் பதினாறு வருடங்களுக்கு முன்னர் இந்திய வெளியுறவுக் கொள்கைத் திட்டக்குழுவின் முன்னாள் தலைவர் ஜி.பார்த்தசாரதி கூறிய தீர்க்கதரிசனம் சிறிதும் பிசகாமல் சரியாகி வருகிறது.

இந்தப் பார்த்தசாரதிதான் இலங்கையில் மாகாண சபை ஆட்சிக்கு வித்திட்ட ''இணைப்பு சி'' என்ற ஆவணத்தின் தந்தை.

அதை உருவாக்குவதில் அந்நாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெய வர்த்தனவும் பங்களிப்புச் செய்தார்.

சந்திரிகா

பார்த்தசாரதி தமிழ்நாட்டுக்காரர். இலங்கை விவகாரங்களை நன்கு அறிந்து வைத்திருந்தவர். புதுடில்லியில் நேரு குடும்பத்தோடு மிகவும் நெருக்கமாக இருந்தவர். 1983 ஜூலை இனக்கலவரத்தின் பின்னர் அதே ஆண்டில் இந்தியாவின் அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியின் விசேஷ தூதுவராகப் பார்த்தசாரதி இலங்கை வந்தார். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை இலங்கை அரசுடன் சேர்ந்து வகுப்பதற்காகவே பார்த்தசாரதி வந்திருந்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆலோசனையுடனும் இணக்கத்துடனும் அவர் முன் வைத்தது தான் மாகாண சபைத் திட்டம்.

பார்த்தசாரதி

இந்தத் திட்டத்தில் வடக்கு – கிழக்கு இணைப்புக்கு இடமளிக்கப்படவில்லை. அதுதான் ஒரு குறை. அதை நிவர்த்தி செய்யவேண்டும் என்று தமிழர் விடுதலைக்கூட்டணி இலங்கை, இந்திய அரசுகளை வற்புறுத்தி வந்தது.

இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி சும்மா இருக்கவில்லை. வடக்கு – கிழக்கு இணைப்புக்கு வசதி செய்யும்படி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைக் கேட்டுக்கொண்டார்.

அதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ''நான் என்ன செய்யட்டும், சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே'' என்றார்.

''எதற்கும் சர்வகட்சி மாநாட்டில் வடக்கு – கிழக்கு இணைப்புக்கு வழி செய்யப் பார்க்கலாம்'' என்றும் ஜெயவர்த்தன சொன்னார்.

அதை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டது.

வடக்கு – கிழக்கு இணைப்பு மட்டுமென்ன, எல்லா விஷயங்களுமே சர்வகட்சி மாநாட்டில் குழப்பியடிக்கப்பட்டன.

''இணைப்பு சி'' சமாச்சாரம் அவ்வளவோடு முடிந்தது.

என்றாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி விடவில்லை.

ராஜீவ்காந்தி இந்தியப் பிரதமராகப் பதவி ஏற்றபோது தமிழர் விடுதலைக்கூட்டணி அவரிடமும் இலங்கைப் பிரச்சினையை எடுத்துச் சென்றது.

1986 பிற்பகுதியில் மத்திய அமைச்சர் சிதம்பரம் தலைமையில் பேச்சுவார்த்தைக்காகக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பினார் ராஜீவ்காந்தி.

1987 ஆரம்பத்திலும் பேச்சுவார்த்தை தொடர்ந்தது. அப்போதே இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகள் யாழ் வடமராட்சியில் பலாலி தாக்குதலை ஆரம்பித்தன.

அப்போதுதான் ராஜீவ்காந்தி மனிதாபிமான அடிப்படையில் யாழ் மக்களுக்கு விமானத்திலிருந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டார்.

1987இல் ராஜீவ்காந்தியும் ஜெயவர்த்தனாவும் கைச்சாத்திட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு இந்த நிகழ்ச்சிதான் முன்னோடியாக அமைந்தது.

அந்த ஒப்பந்தம் மூலம்தான் இலங்கையில் மாகாண சபைகள் நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப்பட்டு வட – கிழக்கு மாகாண சபையும் உருவாக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு தற்காலிக இணைப்பு இப்போதும் இருந்தாலும் மாகாண சபை இல்லை.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் இன்று – நடைமுறையில் உள்ளதா என்று கேட்கும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

அவை எல்லாம் வேறு கதைகள்.

மீண்டும் பார்த்தசாரதி விஷயத்துக்கு வருவோம்.

பார்த்தசாரதியின் ''இணைப்பு சி'' ஆவணத்தைப் பேரினவாத சக்திகள் அனைத்தும் எதிர்த்தன. படித்தவர்கள் கூட எதிர்த்தார்கள். குறிப்பாக வித்தியோத பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வண. ராகுல தேரர் மூர்க்கத்தனமாக எதிர்த்தார். ''இணைப்பு சி'' மூலமான அதிகாரப் பரவலாக்கல் நாட்டைத் துண்டாடி விடும் என்று அவர்கள் அபாயச் சங்கு ஊதினார்கள். அவர்களோடு சேர்ந்து வேறு பலர் ஓலமிட்டார்கள்.

பார்த்தசாரதியால் இவற்றை எல்லாம் புரிந்து கொள்ளமுடியவில்லை.

சிறிது காலம் கழித்து தன்னுடைய ஈழத்து நண்பர் ஒருவரைப் புதுடில்லியில் பார்த்தசாரதி சந்தித்தபோது அவரிடம் தனது உணர்வுகளை அவர் மனம்விட்டு எடுத்துக்கூறினார்.

''படித்த சிங்கள அறிஞர்களிடம் கூட இத்தகைய வெறியாட்டம் தலை தூக்கி நிற்கிறதே! சிங்களத் தலைவர்கள் பலருடன் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்கள் தாமே உருவாக்கிய வெறுப்பின் கைதிகளாக இருக்கிறார்கள்'' என்றார்.

இதை அந்த நண்பரே காண்டீபத்தின் காதில் போட்டார். அவர் மேலும் சொன்ன தகவல் இதோ:

1985இல் இறுதியாகப் பார்த்தசாரதியை நான் சந்தித்தேன்.

அப்போது பார்த்தசாரதி நீண்டகாலமாக வகித்து வந்த பொறுப்பு வாய்ந்த பதவியிலிருந்து ராஜீவ்காந்தியினால் நீக்கப்பட்டு விட்டார். றொமேஸ் பண்டாரி அவருடைய இடத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இதில் இலங்கை அரசின் பங்கும் இருந்தது.

பார்த்தசாரதி கண்கலங்கியவாறு சொன்னார்.

''நண்பா (பெயரைக் குறிப்பிட்டு)நான் செய்த தவறு என்ன? தமிழனாகப் பிறந்தது ஒன்றுதான் குற்றம்''

அவர் அல்வாளோடு நிறுத்தவில்லை. இலங்கை இனப்பிரச்சினை பற்றியும் சொன்னார். ''இலங்கையில் இனிமேல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் ஒரே இழுபறிதான். ஒப்பந்தம் எதுவும் உருப்படியாக வராது''

இவை பார்த்தசாரதியின் தீர்க்கதரிசன வார்த்தைகள்.

இன்றைய நிகழ்வுகள் பார்த்தசாரதியின் வார்த்தைகள் உண்மையானவை என்பதை நிதர்சனம் காட்டுகின்றன.

சந்திரிகா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு தடவை பேச்சு வார்த்தை நடத்திவிட்டது.

உருப்படியான பலன் எதுவும் இல்லை.

காண்டீபம்

போர் தொடர்கிறது. அவலங்கள் அதிகரித்து வருகின்றன. சமாதானம் மருந்துக்கும் இல்லை.

இரண்டாவது தடவையாகப் பேச்சு வார்த்தை நடத்த ஆயத்தம் செய்வதாக அரசாங்கம் நாடகமாடி வருகிறது.

முன்னர் நடைபெற்ற பேச்சு வார்த்தைக்கு அனுசரணையாளர் எவரும் இல்லை.

இம்முறை நோர்வே அரசு எரிக் சொல்ஹெய்மை அனுசரணை வழங்குவதற்கு விசேஷ தூதுவராக அனுப்பியது.

அவர் நீண்ட காலமாக அரசினரையும் புலிகளையும் சந்தித்துப் பேசி இருதரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரும் முயற்சியில் பெரு முன்னேற்றம் கண்டுள்ளார்.

அவர் இருதரப்பினரும் "நீளம், ஆழம், அகலம்'' அனைத்தையும் அறிந்து கொண்டுவிட்டார். அதனால் தன்னுடைய சமாதான நாடகம் அம்பலமாகிவிடுமோ என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டுவிட்டது.

சிங்களப் பேரினவாதிகள், மகாசங்கத்தினர் துவேஷம் கொண்ட சில அரசியல் உயர்மட்டப் பிரதிநிதிகள் ஆகியோர் சொல்ஹெய்ம் மீது கூறிய பொய்க்குற்றச்சாட்டுக்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவரை ஓரம்கட்டி விட்டது அரசு.

எவருக்கும் புலி முத்திரை குத்துவதிலும் புலி ஆதரவாளர் என்று குற்றம் சுமத்துவதிலும் அரசு கைதேர்ந்து நிற்கிறது. ஆயின் சொல்ஹெய்ம் மீது பழி சுமத்துவது கஷ்டமா என்ன?

இலங்கை அரசாங்கம் சொல்ஹெய்மை ஓரங்கட்டிவிட்டு நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் தோப்ஜோன் ஜக்லாண்டை வரவழைத்து அவருடன் பேசியிருக்கிறது.

இனிமேல் ''உயர் மட்ட முயற்சி'' தேவைப்படுகிறது. அதனால்தான் ஜக்லாண்ட் வரவழைக்கப்பட்டார் என்று அரசு சமாதானம் கூறுகிறது.

இதைப் புலிகள் வெகுவாகக் கண்டித்திருக்கிறார்கள். உயர்மட்ட அனுசரணை முயற்சி தேவை என்றால் இலங்கை அரசும் நோர்வே அரசும் புலிகளுடன் பேசி அதற்கு ஒழுங்கு செய்திருக்கவேண்டும். ஏனெனில் சொல்ஹெய்ம் முத்தரப்பு இணக்கத்துடனேயே அனுசரணைப் பணிக்கு அமர்த்தப்பட்டார். அந்தப் பணியிலிருந்து அவரை நீக்குவதானால் அனைத்தும் முத்தரப்புமே முடிவு செய்யவேண்டும்.

ஜெயவர்த்தனா

இதில் நோர்வே அரசும் இலங்கை அரசும் தவறு செய்து விட்டன என்று புலிகள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

தமக்கு இரண்டு அரசுகளும் சரியான பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றன என்றும் புலிகள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

சொல்ஹெய்மின் பணியில் அவர்கள் முழு நம்பிக்கை தெரிவித்திருப்பதோடு அவரின் திறமைக்கும் பணிக்கும் பாராட்டும் வழங்கியிருக்கிறார்கள்.

சரி, ஜக்லாண்ட் இனி அனுசரணையாளராகப் பணியாற்றுவதானால் அவருக்கு அதற்கு வேண்டிய நேரம் கிடைக்குமா?

சொல்ஹெய்ம்

சொல்ஹெய்மைப் போல் அவரால் அடிக்கடி இலங்கை அரசினரையும் புலிகள் தலைவர்களையும் சந்தித்துப் பேச முடியுமா?

ஜக்லாண்ட் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் மட்டுமல்ல, அரசாங்கக் கட்சியான தொழில் கட்சியின் தேர்தல் பிரசாரகராகவும் இருக்கிறார். தேர்தல் வெகுவிரைவில் நடைபெற இருக்கிறது. அவரால் இலங்கை விஷயத்துக்கு நேரம் ஒதுக்க முடியுமா?

மொத்தத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தொடர்ந்து இழுபடப் போகின்றன. அரசு உண்மையில் விரும்புவதும் அதுதானே!

பார்த்தசாரதியின் தீர்க்கதரிசன வார்த்தைகள் திரும்பத் திரும்ப காதில் ஒலிக்கின்றன.

போர்ப் பீரங்கிகள் முழங்கத் தொடங்கினால் அதுவும் போய்விடும்.

வன்னிப் பகுதியில் வானம் கறுத்தால் மக்களின் கண்கள் கலங்குகின்றன

வன்னிப் பகுதியில் வாழ்பவர்களில் பலர் யாழ் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள்.

அந்தப் பகுதி நிரந்தர வாசிகளும் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

அவர்களுடைய அவலங்களைச் சொல்லி முடியாது. வானம் கறுத்தால் வன்னிப் பகுதி மக்களின் கண்கள் கலங்குகின்றன. சிறு மழை பெய்தாலே வெள்ளம் வந்துவிடுகிறது. பெருமழை பெய்தால் பிதேசம் முழுவதுமே வெள்ளக்காடாகி விடுகிறது.

பெரும்பாலானவை தற்காலிக வீடுகள். வெள்ளத்துக்கு அவை நின்று பிடிக்குமா?

வீதிகளில் வெள்ளம் ஆறுபோல் ஓடத் தொடங்கிவிடுகிறது. முன் பக்க வர்ணப் படங்களைப் பாருங்கள். வீட்டுக்குள் வெள்ளம். வீட்டில் இருந்தோர் வெளியில் கலங்கி நிற்கிறார்கள். வீதியால் வாகனம் எதுவும் செல்ல முடியாது. சொகுசாக சவாரி செய்திட மோட்டார் சைக்கிளை நான்கு பேர் சுமந்து செல்லவேண்டியிருக்கிறது.

வன்னிப் பகுதி மக்கள் பொருளாதாரத் தடையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உணவுப் பொருள்கள், மருந்து வகைகள், எரிபொருள்கள், சீமெந்து முதலானவற்றின் தட்டுப்பாடு பெரும் அவதி. வன்னிப் பகுதியில் அபிவிருத்தி என்ற பேச்சுக்கே இடமில்லை.

வன்னி இந்த நாட்டுப் பிரதேசம் இல்லையா? வன்னி மக்கள் இந்த நாட்டுப் பிரஜைகள் அல்லரா? ஏன் வன்னி மண்ணுக்கும் மக்களுக்கும் புறக்கணிப்பு? வன்னிக்கு எப்போது விமோசனம்?

அரசின் புதிய போர் வியூகம் ஜானக பெரேராவுக்கு யோகம்!

அன்று உதைத்துத் தள்ளியவரை இன்று தளபதியாக்க முயற்சி

''விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கச் செய்யும் திறமையும் அறிவும் என்னிடம் இருப்பதாக நான் கருதுகிறேன். என்றாலும் நான் இராணுவத் தளபதியாக இருக்கக்கூடாது; அந்தப் பெருமையும் வாய்ப்பும் ஜெனரல் பலகல்லவுக்கே வழங்கப்பட வேண்டும் என்று இது விடயத்தைத் தீர்மானிக்கும் சக்திகளும் மேலே இருக்கும் ஆண்டவனும் தீர்ப்புச் சொல்லியாகி விட்டது.''

ஜனவரி 31 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் விரக்தியுடன் கூறிய வார்த்தைகள் இவை.

ஸ்ரீலங்கா இராணுவத்தில் 34 வருடங்கள் சேவையாற்றிய மூத்த அதிகாரியான ஜானக பெரேரா இராணுவத்தளபதியாகும் வாய்ப்பு இழக்கப்பட்ட பின்னணியில் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

ஆனால் சிங்கள கடும் போக்காளர்களால் மிகவும் மதித்துப் போற்றப்படுபவரான அவரை மீண்டும் இராணுவத்தின் உயர் பதவி ஒன்றுக்கு— இராணுவத் தளபதிப்பதவிக்கு— அழைக்க திரை மறைவில் முயற்சி நடப்பதாகச் செய்திகள் அடிபடத் தொடங்கி உள்ளன.

ஜானக பெரேரா

ஜானக பெரேரா ஓய்வு பெற்றபின்னர் அவர் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டார்.

எனினும் அவர் இன்னமும் அப்பதவியை முறைப்படி ஏற்றுக் கொள்ளவில்லை.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவின் தற்போதைய பதவிக்காலம் அடுத்த மாதம் 16 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

ஆயினும் அவரது பதவிக் காலத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் நீடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிடையில் லெப்டினன்ட் ஜெனரல் பலகல்லவை ஓய்வு பெற அனுமதித்துவிட்டு அந்த இடத்துக்கு கிட்டத்தட்ட அவரை ஒத்த சேவை மூப்புடையவரும் ஏற்கனவே ஓய்வு பெற்றுச் சென்றுள்ளவருமான ஜானக பெரேராவை நியமிப்பதற்கு அரசுத்தரப்புக்குள் சில மட்டங்களில் முயற்சி எடுக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

கடந்த ஆண்டு முற்பகுதியில் விடுதலைப்புலிகள் குடா நாட்டின் மீது படையெடுத்து வந்தபோது யாழ் நகரம் உட்பட பெரும் பிரதேசம் அவர்கள் வசம் விழும் நிலைக்குச் சென்றது. அச்சமயம் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி அவசரமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் சரியாக மூன்று மாதங்கள் முடிவடைந்ததும் ஜூலை 22 ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து மாற்றப்பட்டனர்.

யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்துவிடும் என்று தென்னிலங்கைச் சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவேளை தளபதிகள் இருவர் அங்கு அனுப்பப்பட்ட விடயம் தென்னிலங்கை சமூகத்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தது.

> குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் தலைவிரித்தாடிய 1996 காலப்பகுதியில் அங்கு நிலைகொண்டிருந்த 51 ஆவது டிவிஷன் படையணிக்கு கட்டளைத் தளபதியாக இருந்தவர் ஜானக பெரேரா. அவர் பதவியில் இருந்த காலப்பகுதியிலேயே— 1996 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில்— குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் காணாமற் போயினர்.

தாங்கள் எதிர்பார்த்தது போல் அந்த இருவரின் தலைமையில் படையினர் தீவிரமாகப் போரிட்டு யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகள் வசம் வீழாமல் தடுத்து விட்டனர் என்று சிங்கள மக்கள் நம்புகின்றனர்.

பின்வாங்கி ஓடும் நிலையில் இருந்த படையினருக்குத் தைரியமூட்டி, சண்டையில் ஈடுபட்டு நிலை கொள்வதற்கான மனநிலையை ஏற்படுத்தியது இந்த இரு மேஜர் ஜெனரல்களின் துணிகரமான— சரியான— தலைமைத்துவமே என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூட அச்சமயம் தெரிவித்திருந்தனர்.

ஆனால் குடா நாட்டைப் புலிகளின் அச்சுறுத்தலில் இருந்து மீட்டு எடுத்த கையோடு அவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து திருப்பி அழைக்கப்பட்டபோது அது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

குடாநாட்டைப் பாதுகாப்பதில் துணிச்சலாகச் செயற்பட்ட ஜானக பெரேரா திடீரென யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட சிலநாள்களில், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை பேட்டி ஒன்றில் அவரைக் கடுமையாகச் சாடி இருந்தார்.

குடாநாட்டை மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா பொறுப்பேற்ற பின்னரே இராணுவத்தினர் அங்கு கேந்திர நிலைகளை இழக்க நேர்ந்தது என்றும்—

யாழ் நகரம் உட்பட கேந்திர இடங்கள் புலிகளின் கைகளுக்கு மாறிவிடும் நிலை உருவாகியது எனவும்—

அமைச்சர் அனுருத்த அப் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் இருந்து படையினரை ஆயுத தளவாடங்களுடன் பலாலிக்கு வாபஸ் வாங்குவதற்குக் கூட ஜானக பெரேரா ஆயத்தம் செய்திருந்தார் என்றும் ஜெனரல் அனுருத்த குற்றஞ்சாட்டி இருந்தார்.

அனுருத்தவின் இந்தக் கூற்றுக்கள் ஜானக பெரேரா அரசியல் ரீதியில் பழிவாங்கப்படுகிறார் என்று அப்போது கூறப்பட்டு வந்த குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமாய்க் கூறப்பட்டவை போன்று அமைந்தன.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் என்று கருதும் ஆளும் கட்சியினர் அவரை நம்பிக்கைக்குரியவராக ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர்.

இந்தப் பின்னணியிலேயே இராணுவத்தின் மூத்த அதிகாரியும், ஜனாதிபதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்று கருதப்படுபவருமான மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

பலகல்லவை இராணுவத் தளபதியாக நியமிக்க ஜனாதிபதி எடுத்த முடிவை 'சிஹல உறு மய'வும், தீவிர போக்கு பௌத்த தேரர்களும் கடுமையாக எதிர்த்தனர்.

'ஜானக பெரேராவை இராணு வத் தளபதியாக்கினால் ஆயிரம் இளம் பிக்கு களுடன் போர் முனைக் குச் செல்லத் தயார்' என்று ஜனா திபதிக்குச் சவால் விடுத் தார் ஒரு பௌத்த தேரர்.

இந்தளவுக்கு சிங்களக்கடும் போக் காளர் மத்தியில் இன் றும் செல்வாக்குப் பெற்ற போர் வீரனா கவே ஜானக பெரேரா விளங்குகிறார்.

'அக்கினிச் சுவாலை' போன்ற பெரும் படை நடவடிக் கைகளில் இராணுவம் சந்தித்துவரும் பேரிழப்புக்களை அடுத்து படையின ருக்கு சிறந்த வழி காட்டுதல்களை வழங் கக்கூடிய அனுபவம் வாய்ந்த தளபதிகளின் தேவையை, முக்கியத் துவத்தை அரச உயர் மட்டங்கள் உணர்ந்து கொண்டுள்ளன.

லயனல் பலகல்ல

ஓய்வுபெறும் காலம் வந்து விட்ட ஒரே காரணத்துக்காகத் துணிச் சலும், அனுபவமும் கொண்ட ஜானக பெரேரா போன்ற வர்களின் சேவை இழக்கப்பட்டுவிடக் கூடாது. விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் தோல்வியுற்றதால் யுத்தத்தை மீண்டும் தீவிரமாகத் தொடர வேண்டி இருக்கும். அதற்கு ஜானக பெரேரா போன்ற தளபதிகளின் போர்த் தந்திரோபாயங்கள் படையினருக்கு அவசியம்.

இவ்வாறு அரச உயர் மட்டங்களில் சிலர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் ஜானக பெரேராவை எப்படி மீண்டும் இராணுவ சேவைக்குள் அரசு உள்வாங்கப் போகின்றது என்பது அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

—ஆதர்ஷா தாஸ்

> மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்குவதில் அனுபவம் மிக்க படைத்தளபதியாக விளங்கினார். 1971 இல் ஜே.வி.பி கிளர்ச்சியை அடக்குவதிலும், 1989 இல் தெற்கில் ஜே.வி.பி யினரின் செயற்பாடுகளை பிரேமதாஸ அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கிய போதும் அதில் முக்கிய பங்காற்றியவர் ஜானக பெரேரா. மணலாறு எனப்படும் எல்லைப் புறத் தமிழ் கிராமத்தை முழுமையான சிங்களக் குடியேற்றமாக மாற்றுவதில் தீவிரமாக ஈடுபட்ட படை அதிகாரி என்று தமிழர் தரப்புகளின் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர் அவர்.

விண்ணப்ப திகதி நீடிக்கக் கோரிக்கை

யாழ்.பல்கலைக்கழகப் பட்டதாரிகளும் பங்குபற்றக் கூடியவாறு, இந்த வருட இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையின் விண்ணப்ப முடிவுத் திகதியை மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி யின் யாழ். மாவட்ட எம்.பி. வி.ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் பொது நிர்வாக, அலுவல்கள் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை தரப் பரீட்சைக்கு கடந்த மே மாதம் 25 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அதன் பிரகாரம் பட்டதாரியாக அரச சேவையில் ஐந்து வருட அனுபவம் உள்ளவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றலாம். 30 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகள் திறந்த பரீட்சைக்குத் தோற்றலாம்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற பட்டப் படிப்புப் பரீட்சைக் குரிய முடிவுகள் எதிர்வரும் 26 ஆம் திக திக்கு முன்னர் வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்த மாதம் முடிவுகளை எதிர்பார்க்க முடியாது எனத் தற்போது பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஆகவே நீண்ட இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு இவர்கள் தோற்றக்கூடியதாக விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட வேண்டும்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''வீட்டிலிருந்தபடியே மாசம் பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறது எப்படின்னு யோசிச்சுப் பார்த்ததுல, எனக்குப் பிரமாதமான ஓர் ஐடியா வந்திச்சு...!''

''என்ன ஐடியா?''

''மாசம் பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கிற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதுதான்!''

பிரைட்டன் திருமண மண்டபம்

* மக்களின் நன் மதிப்பை பெற்ற பிரைட்டன் ஸ்தாபனத்தார் தமது முதலாம் மாடியில் புதுப் பொலிவுடன் சகல வசதிகளும் கொண்ட திருமண மண்டபத்தினை திறந்துள்ளார்கள்.
* போதிய வாகன தரிப்பிட வசதியும் உண்டு என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

BRIGHTEN REST
(Approved by Sri Lanka Tourist Board)

அத்துடன் சுவையான உணவு வகைகளை குடும்பத்துடன் வந்து ரசித்து உண்பதற்கு ஏற்ற ஒரே இடம்.

Sangeetha Restaurant
214/2, மெசன்சர் வீதி, கொழும்பு-12.
தொலை பேசி : 543413, 329664
தொலை நகர் : 074-610765

குருக்களின் பவள விழா: பங்குகொண்டோர் பாக்கியசாலிகள்

பவள விழாக்காணும் நவாலியூர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் பாரியார் சகிதம் விழா மேடையில். — படங்கள்: சுகந்தன்

கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கப்பம்பாள் கல்யாண மண்டபம் ராஜபவனி ஒன்றின் வருகைக்காக ஆரவாரத்தோடு காத்துக் கொண்டிருக்கிறது.

ஈழத்தின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கள இசை முழங்க—

புகழ், பெருமை, ஞானம் இவை யெல்லாம் தம்மை மிஞ்சிய தகை சான்றோன் இவன் என அறிந்து, தலை வணங்கிக் கூனிக்குறுகி நிற்க—

பிராமணப் பெருமக்கள் புடைசூழ—

பவள விழாக் காணும் பெருமகனார் நவாலியூர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தமது பாரியார் சகிதம் பவனியாக மண்டப வாயிலை வந்தடைகிறார்.

குளிர்ச்சி பொருந்திய அந்த நிறையரங்கம் குருக்களின் வருகைக்கு மதிப்பளித்து எழுந்து கொள்கிறது. வாடாவரம் வேண்டியோ அன்றி பாதம் படும் பாக்கியம் கருதியோ மலர்கள் மாரியாய் பொழிகின்றன.

அந்தணர்கள், அன்பர்கள், அடியார்கள், தொண்டர்கள், பக்தர்கள் எனப் பலதரத்தினரும் நிறைந்திருந்த அரங்கம் தெய்வலோகமாகவே காட்சியளித்தது.

உயர்ந்த மேடையில் செங்கம்பளங்கள் விரிக்கப்பட்ட ஆசனத்தில் பவளவிழா நாயகர் பாரியாருடன் வந்து அமர்ந்தார்.

மயூரபதி அறநெறிப் பாடசாலை மாணவிகளின் தேவார இசையுடன் அரங்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. வரவேற்புரை நிகழ்த்திய ஆலய அறங்காவலர் பொன் வல்லிபுரம் "இன்று ஒரு பொன்னான நாள். சைவாலயங்கள் இருக்கும் இடமெல்லாம் சென்று கும்பாபிஷேகங்கள், சங்காபிஷேகங்கள், மகோற்சவங்கள், பிரதிஷ்டைகள் செய்த சாமி விஸ்வநாதக் குருக்கள் எழுபத்தைந்து வருடங்கள் என்ன இன்னும் பல்லாண்டுகள் வாழ வேண்டும்" என்று வாழ்த்தினார். அப்போது எழுந்த கரகோஷம் மண்டபத்தை ஊடுருத்துச் சென்று வான் முட்டியது.

"உலகமே இவர் புகழை உரைக்கின்ற போது, அதைவிட நான் பெரிதாக எதைச் சொல்லிவிட முடியும்" என அடையடக்கத்தோடு கருக்கூறினார். தலைமையுரை நிகழ்த்திய வேதாகமமணி பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தினக் குருக்கள்

சென்னை தாம்பரத்தில் இருந்து வருகை தந்த சாவசாதக திலகம் பிரம்மஸ்ரீ தே. க. முத்துக்குமாரசாமி சிவாச்சாரியார் ஆசியுரை வழங்கினார்.

அடுத்து விழா நாயகனைக் கௌரவிக்கும் வைபவம் ஆரம்பமாகியது. வாழ்த்துவோர், கௌரவிப்போர் வற்றாத நதி நீரைப் போல் பெருக்கெடுத்துக் கொண்டே இருந்தனர்.

பொன்னாடைகள் போர்த்தப்பட்டன. பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன. மலர்க்கிரீடம் சூட்டி, "வேத சிவாகம வித்தியா பூஷணம்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

மதிப்புரையினை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்ம கணானந்தாஜி நிறைப்படவழங்கினார்.

வணக்கவுரை நிகழ்த்திய சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ சுயம்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் "விஸ்வம்" என்றால் உலகம், "நாத" என்றால் நாதன் என்று விளக்கி உலக நாதனாக எம் பவள விழா நாயகன் விளங்குகின்றார் என்று விளம்பினார்.

பாராட்டுரை நிகழ்த்திய இந்துமாமன்ற செயலாளர் க. நீலகண்டன் "இனம், மதம், மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இறை பணி செய்த மகான்" எனப் பாராட்டிப் பேசினார்.

இதனை அடுத்து "விஸ்வநாதம்" என்ற பவள விழா மலர் வெளியிடப்பட்டது. வெளியீட்டுரை நிகழ்த்திய கம்பவாரிதி இ. ஜெயராஜ் கம்பன் புகழ்பாடும் வாயால் தமக்கே உரிய பாணியில் அழகு தமிழில் இலக்கிய நயம் சொட்டப் பவள நாயகனின் பெரு வாழ்வை நிறந்த புத்தகமாக்கினார்.

பெரிய பெரிய புள்ளிகள் எல்லாம் பயபக்தியோடு கரம் தாழ்த்தி சாமி விஸ்வநாதக் குருக்கள் பாதம் பணிந்து வணங்கி நூலைப் பெற்றுச் சென்ற காட்சி கண்கொள்ளாக்காட்சி.

ஆடைப் பஞ்சம் ஆனை விழுங்க "ஹலோ" சொல்லி கைகுலுக்கும் வெளிநாட்டு மலர் ஒன்று தமிழ்க் கலாசாரத்தின் பாற் காதல் கொண்டு காஞ்சிபுரம் கட்டி, கூந்தலில் பூச்சூடி, தெரியாத முகங்களுக்கெல்லாம் புன்னகைப் "பூ" கொடுத்தபடி அஞ்சி, அஞ்சி நடந்து சென்று காசி விஸ்வநாதக் குருக்களின் காலில் வீழ்ந்து வணங்கியது. அது அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.

பிரம்மஸ்ரீ க. சுப்ரமணியக் குருக்கள் நன்றியுரை வழங்கினார். அந்த உரையிலே அவர் அனைவரையும் இரவு ஆகாரத்தை அருந்திச் செல்லுமாறும் இரந்து கேட்டுக் கொண்டார். படைக்குச் சிலர் பிந்தினாலும் பந்திக்கு யார் பிந்துவார்கள்? எல்லோருமே முந்துவார்கள். அது அங்கே நிரூபணமாகியது.

கண்ணுக்கு விருந்து, காதுக்கு விருந்து, வயிற்றுக்கு விருந்து காசி விஸ்வநாதக் குருக்களின் பவள விழா. எல்லாவற்றிற்கும் மேலாக பெருமைக்குரியவர் பெருமைப்படுத்தப்பட்டாரே என்ற திருப்தி, ஆனந்தம்.

— க. சிவகுமார்

சிவாச்சாரியார்கள் மற்றும் பெருமக்கள் புடைசூழ பவளவிழா நாயகரும் பாரியாரும் விழா மண்டபத்துக்கு வருகை

கலையமுதம்

மட்டக்களப்பு மணியான மாணவர் இல்ல பவள விழா

மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தின் பவளவிழா நிகழ்வுகள் கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் சிறப்பாக நடந்தேறின.

நிகழ்வுகளின் இறுதிநாளான 7ஆம் திகதி மட்டு நகர் ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையிலிருந்து காலை 9.00 மணிக்கு வாகன ஊர்திகளுடனான பேரணி புறப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட திணைக்களங்களுக்குச் சொந்தமான சுமார் பதினைந்து வாகனங்கள் அலங்கரிக்கப்பட்டு சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படங்களைத் தாங்கியும், ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷனின் 75 வருட கால சமூகப் பணியைச் சித்திரித்தும் சென்றன.

இவ்வாகன ஊர்திகளுக்கு முன்னே சுமார் 60 ஆட்டோக்கள் செல்ல அவற்றைத் தொடர்ந்து ஒலிபெருக்கி பொருத்திய வாகனம், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், பொதுமக்கள், ராம கிருஷ்ண மிஷன் துறவிகள் ஆகியோர் பின் தொடர்ந் தனர். சுமார் இரண்டு கிலோமீற்றர் தூர நீண்ட பவனியாக இப்பேரணி இடம்பெற்றது.

இப்பேரணி நண்பகல் 12.00 மணிக்கு கல்லடி விவேகானந்த மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தை வந்தடைந்ததும், அங்கு பவளவிழா பொதுக் கூட்டம் ஆரம்பமானது.

கூட்ட ஆரம்ப நிகழ்வான மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து, பவளவிழாத் தலைவர் ந. நியாகராசா வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்து சமயப் பெரியார்களான மட்டக்களப்பு ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் சுவாமி ஜீவனானந்த மகராஜ், மட்டக்களப்பு மங்களராம விகாரையின் வண. ரக்வாண சோனாந்த தேரர், காத்தான்குடி அரபுக் கலாபீடம் அதிபர் எம். ஏ. முஹம்மது அப்துல்லாஹ் ஆலிம், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

மாணவர் இல்லத்திற்குப் பொறுப்பான சுவாமி ஜீவனானந்த மகராஜ்

பவள விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்கத்தா ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன் உதவிப் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி சிவ மயானந்தஜி மகராஜ் உரையாற்றுகையில் "சுவாமி விவேகானந்தரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட ராம கிருஷ்ண மாணவர் இல்லம் மட்டக்களப்பில் வேரூன்றி விரிவாக பித்து, வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் சமூக மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு அரும்பணி யாற்றி வருவதை மனதாரப் பாராட்டுகின்றேன்" என்றார்.

"எந்த நோக்கத்திற்காக இம்மாணவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை அடையும்வரை ராம கிருஷ்ண மிஷன் தொடர்ந்து செயல்பட வேண்டும். அத்துடன் இன்னும் பல வருடங்களுக்கு, ஆன்மீக, சமூகப் பணிகளில் முன்னின்று செயற்பட எல்லாம் வல்ல பரம்பொருள் துணை புரிய வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீமத் சுவாமி சிவமயானந்த ஸ்ரீ மகராஜ் பவளவிழா மலரை வெளியிட்டு வைத்தார்.

பவளவிழாவினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் வெற்றி ஈட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பவளவிழாச் செயலாளரும் வாழைச்சேனைப் பிரதேச செயலாளருமான செ. புண்ணியமூர்த்தி நிறைவுரை நிகழ்த்தினார்.

—நேரன்

ராமகிருஷ்ண மிஷன் பவள விழாவை முன்னிட்டு அலங்கார ஊர்திகள் பவனி வருவதை படத்தில் காணலாம்.

புதுமுகத்துவார சப்தரிஷி மண்டல வளாகத்தில் நடைபெற்ற மகாயாகத்தின் போது ஸ்ரீ காயத்திரி சித்தர் ஆர்.கே. முருகேச சுவாமிகள் குத்துவிளக்கேற்றுவதை படத்தில் காணலாம்

ஒலிப்பேழை வெளியீடு

கவிஞரும் பாடகருமான மாத்தளை கமலின் 'பாலஸ்தீன விடுதலைத் தேவன்' ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் முதற் பிரதியை அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் இருந்து ஸிறாஜா ஏன்ரபிளாஸன் உரிமையாளர் அல்ஹாஜ் ஏ.கே.எம். அன்சார் பெற்றுக் கொள்கிறார். இடது புறத்தில் பாலஸ்தீனத் தூதுவர் அத்தல்லா குலிவா காணப்படுகிறார். உள்ளே வட்டப்படத்தில் ஒலிப்பேழையில் பாடியுள்ள செல்வி அன்சிபார் நஜாஸ்.

ஜெயலலிதா வளர்ப்பு மகன் சுதாகரன் பின்னணி என்ன?

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவி ஏற்ற பின்னர் அவர் தமது ஆட்சிநிருவாகத்தை சீரமைத்துக் கொள்வதற்குப் பெரும்பாடு பட வேண்டி இருக்கிறது.

முன்னைய ஆட்சிக் காலத்தில் உயர் மட்ட அதிகாரிகளாக இருந்தவர்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டார். தமக்கு சார்பானவர்களை எல்லாம் பெரிய அதிகாரிகளாக்கி விட்டார்.

தேர்தல் காற்று ஜெயலலிதாவுக்கு சாதகமாக வீசியதால் அவருடைய சேலைத்தலைப்பைப் பற்றிப் பிடித்தவர்களெல்லாம் சட்டசபை உறுப்பினர்களாகி விட்டார்கள். அனுபவ சாலிகள் யாருமே அவர் பக்கம் இல்லை.

எப்படியோ சுழியோடித் தேடி ஜெயலலிதா 24 பேரை அமைச்சர்களாக்கினார். சில அமைசசர்களுக்கு முதல் நாள் கொடுத்த அமைச்சுப் பொறுப்புக்களை மறுநாளே மாற்றி அமைத்தார்.

ஆட்சிக்கு வந்த 20 நாட்களுக்குள் 3 அமைச்சர்களை வீட்டுக்கு அனுப்பினார். 3 புதிய அமைச்சர்களை நியமித்தார். ஆட்சி நிருவாகத்தைக் கொண்டு நடத்துவதில் ஜெயலலிதா பெரும் அவதிக்குள்ளாகியிருக்கிறார் என்பது புலப்படுகிறது.

தமது அமைச்சர்களின் அனுபவக் குறைவு காரணமாக அவர்கள் சிறப்பாகச் செயற்படுவது சாத்தியமல்ல என்று ஜெயலலிதா நினைக்கிறார். எனவே தமது புதிய அமைச்சர்கள், ஏற்கனவே அனுபவம் பெற்ற ஓரிரு அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தி தங்கள் அமைச்சுப் பொறுப்புக்களை நிர்வகிக்க வேண்டும் எனப் பணித்திருக்கிறார்.

இதன் காரணமாக ஜெயலலிதாவின் அரசு மந்த கதியில் தான் இயங்கப் போகிறது. அத்துடன் அமைச்சர்களும் அடிக்கடி வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள்.

ஜெயலலிதாவின் அடுத்த முக்கிய பணி முன்னைய தி.மு.க ஆட்சியாளர்களைச் சிறைக்கு அனுப்புவதாக இருக்கப் போகிறது. கருணாநிதி, ஸ்டாலின் ஆகியோர் மோசடிக் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளப் போகிறார்கள்.

ஜெயலலிதாவின் எதிரிகளுக்கு இது போதாத காலம் தான். ஆனால் இத்தகைய தொரு சூழ்நிலையில் எவருமே எதிர்பாராத விதத்தில் ஒருவர் கைதாகியிருப்பது தமிழகத்தையே அதிரவைத்திருக்கிறது.

ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரன் கைதாகியிருக்கிறார். சின்ன எம்.ஜி.ஆர் என்று தம்மை அழைத்துக்கொண்டு நற்பணி மன்றம் அமைத்து தனக்கென அரசியல் களத்தை உருவாக்கி வருகிறார் சுதாகரன். அவருக்கும் ஒரு கூட்டம் இருக்கிறது.

ஜெயலலிதா

ஆனால் ஜெயலலிதாவோ சுதாகரனைத் தனது வளர்ப்பு மகன் என்று தற்போது அழைத்துக்கொள்வதில்லை. அவர் முன்னை நாள் வளர்ப்பு மகன் ஆகி விட்டார். சிவாஜி கணேசனின் பேத்தியை மணந்து கொண்டவர் சுதாகரன். கோடிக் கணக்கான சொத்துகளுக்கு அதிபதி.

ஜெயலலிதா பதவிக்கு வந்த மூன்று வாரங்களுக்குள் அவரது முன்னை நாள் வளர்ப்பு மகன் கைதாகியிருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. அதிலும் கொலை முயற்சி, போதை மருந்து வைத்திருத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களை சுதாகரன் எதிர்கொள்கிறார்.

கருணாநிதி ஆட்சியில் இந்தக்கைது நடந்திருந்தால் அதையிட்டு எவருமே கலக்கம் அடைந்திருக்கப் போவதில்லை. ஆனால் ஜெயலலிதாவின் ஆட்சியில் சுதாகரனை கைது செய்யும் துணிச்சல் யாருக்கு வந்தது? ஜெயலலிதாவின் அனுமதி இன்றி இந்தக் கைது நடைபெற்றிருக்குமா? இவ்வாறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இதற்கு முன்னர் ஜெயலலிதா ஆட்சி செய்த காலத்தில் அவர் நடந்து கொண்ட விதம் எவருக்கும் தெரியும். கோடி கோடியாகப் பணம் கையாடியவர். தமது வளர்ப்பு மகன் திருமணத்தை கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி

ஆடம்பரமாக நடத்தியவர் என்று புகார்கள்.

அத்தகைய கொடுமைகள் காரணமாக தேர்தலில் தோல்வியைத் தழுவியவர். தி.மு.க ஆட்சியில் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளானவர். ஊழல் வழக்குகளில் சிறைத்தண்டனை பெற்றவர் ஜெயலலிதா.

மீண்டும் வந்த தேர்தலில் போட்டியிட வேட்பு மனு மறுக்கப்பட்டவர். ஆயினும் ''குருச்சந்திர'' யோகத்தினால் தேர்தலில் பெரு வெற்றி பெற்றவர். அந்தக் களிப்பின் உச்சக்கட்ட ஆனந்தத்தை அடைவதற்கு ஆறு மாத காலக் கெடுவை எதிர்பார்த்திருப்பவர்.

ஜெயலலிதாவின் முன்னைய ஆட்சிக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் ஆடம்பர திருமணம் மூலம் ''கின்னஸ்'' சாதனை புரிந்தவர் சுதாகரன். பின்னர் கருணாநிதி ஆட்சிக்காலத்தில் எப்படியோ காலம் கடத்தினார். தன்னை வளர்த்தெடுத்த அன்னை மீண்டும் ஆட்சிப்பீடமேறியுள்ள இவ்வேளையில் சுதாகரன் மீண்டும் அம்பலம் ஏறியிருக்கிறார்.

சுதாகரனைத் தனது வளர்ப்பு மகன் என்று ஒரு காலத்தில் மிகவும் உச்சத்தில் வைத்துப் போற்றியவர் ஜெயலலிதா. பின்னர் அவர் ஆட்சி பறிபோனதால் அவருடைய மாளிகையில் இந்த இளவரசனுக்கு இடம் இல்லாமல் போய்விட்டது.

சுதாகரனுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று ஜெயலலிதா அறிவித்தார்.

ஆயினும் சுதாகரனின் தம்பி தினகரன் அ.தி.மு.க லோகசபை எம்.பி ஆக்கப்பட்டார். அவர்களின் சித்தியும் ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரியுமான சசிகலாவும் தினகரனும் ஜெயலலிதாவை இன்றும் ஆட்டிப் படைப்பவர்களாக இருக்கிறார்கள்.

இத்தகைய தொரு கட்டத்தில்தான் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் பொலிஸில் சிக்கியிருக்கிறார். அதன் பின்னணி நீதி மன்றத்தில் வெளியிடப்படக்கூடும்.

சுதாகரன் சைதாப்பேட்டை நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். ''என் வீட்டில் சோதனையே போடவில்லை. ஆனால் என் வீட்டில் போதை மருந்து இருந்ததாகப் பொய் வழக்குப் போட்டிருக்கிறார்கள்'' என்று நீதிபதியிடம் சுதாகரன் கூறினார்.

''16 கிராம் என்று எழுதிய தாளில் என்னைக் கையெழுத்துப் போடும்படி பொலிஸார் கேட்டனர். கடவுள் அருளால் அதில் கெரோயின் என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்ததை நான் பார்த்து விட்டேன். எனவே கையெழுத்துப் போட மறுத்துவிட்டேன். என்னைப் பழி வாங்குவதற்காக இந்தக்கைது நடைபெற்று இருக்கிறது— இவ்வாறு சுதாகரன் கூறினார்.

தன்னைப் பழி வாங்குவதற்கு யார் முயற்சி எடுத்தார்கள் என்பதைச் சுதாகரன் தெரிவிக்கவில்லை.

ஜெயலலிதா நினைத்திருந்தால் சுதாகரனைப் பொலிஸ் பிடியிலிருந்து மீட்டிருக்கலாம். ஆனால் இந்த விவகாரம் இவ்வளவு தூரம் விஸ்வரூபம் பெற்றதற்குக் காரணம் என்ன என்று அனைவரும் வியப்புடன் நோக்குகிறார்கள்.

— கதாசி

ஒரு விடியலின் தேடல்...

நள்ளிரவில் விழித்துக் கொண்ட
என் ஆத்மாவுக்குள் சப்பாத்துச் சத்தங்கள்
இரும்பு வாகனங்களினதும்
இரும்பு மனங்களினதும்
இருப்பில்லா ஓட்டங்கள்
கோரச் சத்தங்கள்
நாய்களின் குரைப்பொலிகள்
புரியாத பாஷைகள்
மயான மௌனங்கள்
அர்த்தமற்றுப் போன
உயிரின் பெறுமதிகள்
புதைகுழிகள் புதைக்கப்பட்ட
உணர்வுகள்
அவமானங்கள் அடிமனதின் ரணங்கள்
பேரினவாதம் புரியாத தீர்வுகள்
என் எண்ண ஓடங்கள்
அங்குமிங்குமாய் திரைப்படம் போல்
ஓடிக் கொண்டிருக்க
எங்கோவொரு மூலைக்குள்ளிருந்து
ஓர் உணர்வு
விடியல் உண்டு! என்று உணர்த்த
மீண்டும்... தூக்கம்
என் சுதந்திர ஆத்மாவுக்கு
மறுநாள் நள்ளிரவுவரை
விடியல் வருமா...?

'கவி', பருத்தித்துறை

சீதனச்சிறை....

சீதனம் என்றொரு சிறையினிலே!
சிறைப்படும் சீதைகள் ஆயிரமே!
சாற்றிடும் வேதங்கள் பொய்த்திடுமோ?
தர்மத்தை மறந்து நீர் வாழ்ந்திடவோ?

சாதனை செய்பவர் நாங்களன்றோ!
சான்றுகள் பலவுள பூமியிலே!
வேதனை மிகுந்திடும் வாழ்வெதற்கு?
விலங்கினை ஒடித்திட வேண்டாமோ?

சாதிகள் பேசியே தரம்பிரித்தீர்!
தரணியில் நாங்கள் தலைகுனிந்தோம்!
நீதிகள் பேசியே நாமிருந்தோம்!
நித்தமும் எங்களைத் தீயிலிட்டீர்!

சீரிய குணங்களை நாம் பெற்றோம்!
சீதனம் என்றொரு சிறை எதற்கு?
செந்தமிழ் மரபது பிழைத்திடவே!
சிறப்புடன் வாழ்வோம் தமிழினமே!

—ஸ்ரீ. சாந்தரூபன், கொழும்புத்துறை.

நண்பனே....

தென்னைமரங்களை
காணும்போதெல்லாம்
கடலலையில் புரண்டதுவும்
குழிநண்டுபறித்து கும்மாளமடித்து
சிறுதும்பிபிடித்து நூல்கட்டி விட்டு
பௌர்ணமி நிலவில் மாம்பிஞ்சுதிருடி
மணலில் தலைபுதைத்து பாட்டியின்
வடைக்கதைகேட்டு மகிழ்ந்ததுவும்
நேற்றுப்போல் இன்றும்
என்நினைவில்
நீங்காமல் நிற்குதடா!

ஒளிந்து விளையாடியதுவும்
ரோந்து வந்த ஒரு கூட்டம்
நம்பிடரிபரத்தி தோலுரித்து
போனதுவும்
இன்று நினைத்தாலும் சில்லிட்டு
நிற்குதடா மயிர்களெல்லாம்!
அர்த்தம் தெரியாமலே சென்றோமடா
ஆனால் நோக்கொன்றெனத்தானே
கொண்டோமடா
தலைமையின் தவறால் பாதைகள் மாற
தனித்தனியே சென்றோமடா
உன்னைநானும் என்னைநீயும்
குறியிடும்காலம் வருமென
கனவிலும் கண்டேனில்லையடா!

உன் மரணப்படுக்கை
என் சுட்டுவிரல் அசைவால்
துடித்துத்தான் போனேனடா!
அப்போதே நானும் விசைதட்டி
வீழ்ந்திருக்க வேண்டும்!
விட்டு விட்டேன்
இறுதியாக
இன்னொரு பிறவியில்
என் மரணப்படுக்கை
உன் மடியில் விழவேண்டும்
என்பதைவிட எனக்கு
வேறொன்றும் வேண்டாமடா!

—கவிமன்
யாழ். மருத்துவ பீடம்.

அகராதி

சிறைச்சாலை

திறந்த வெளியில்
காணாவுலகத்தை
நான்கு சுவரில்
காட்டும்
திரை அரங்கு!

புனர் வாழ்வு நிலையம்

திருத்த அல்ல
புனர்ஜென்மம்
எடுக்க வழி
அனுப்பும்
ஏவு தளம்!

அனாதை இல்லம்

திக்குத்
தெரியா இளம்
மொட்டுகளின்
திசைகாட்டி!

வயோதிபர் இல்லம்.

குஞ்சு
மிதித்து
நசிந்தகோழிகள்
வாழுமிடம்!

வாக்குப் பெட்டி

நாடாளுமன்ற
உறுப்பினரின்
வாழ்கைத்
தரத்துக்கான
கேள்விப்
பெட்டி.

நாடாளுமன்றம்

தேவையானதை
அரட்டை அடிக்க,
தேவையற்றதை
வாதிட
உதவுமரங்கு?

இணுவைக் கஜன்.

எழுந்து நீ வீசிடு

என்னடா தமிழனே இன்னமும் தூக்கமா?
சன்னமாய் வாழ்வது சிதைகையில் வாட்டமா?
சொல்லடா தமிழனே தமிழ்த்தாயின் மைந்தனே!
கிளர்ந்து நீ எழுந்திடில் இந்நிலை வாழுமா?
சத்தியம் காத்திடும் மானிடம் சாகுமா?
சாத்தியமில்லாக் கொடுமைகள் நடக்குமா?
நித்திலம் எங்கும் ஆயுதம் ஆளுமா?
நித்திரையாகி நீதியும் மாளுமா?

உண்மையின் குரல்வளை இப்படி நசியுமா?
உன்னத வாழ்வுகள் மண்ணோடு மடியுமா?
இத்தனை கேவலம் அரங்கிலே ஏறுமா?
இளைஞர்க்கு இன்று இலையுதிர் காலமா?

இன்றைய இளைஞனே இன்னமும் அச்சமா?
இதயத்தில் உனக்கு உணர்ச்சியே இல்லையா?
உயிருக்குப் பயந்து உள்ளுக்குள் முடக்கமா?
உண்மைக்காய் குரல் கொடு'
உரிமைக்காய் உயிர் விடு!
எழுந்து நீ வீசினால் இந்நிலை நீளுமா?

இலக்கியா,
யாழ்ப்பாணம்.

ஆசனம் தந்திருப்போம்

தனிநாடு வேண்டாம் மக்கள்
பிணி தீர்ந்து போகட்டும்
இனி மண்ணில் பிணங்கள்
வேண்டாம்— சமாதான
மணி ஓசை கேட்கட்டும்.

நேர்மையுடன் வந்த நெஞ்சை
அலரி அலை மதித்ததா?
குத்தரிவாள்
கூர்மையினை அறியாது
காலிடை போட்டு மிதிக்குமா?

பணியுமா குட்டக் குட்ட
மறம் மலிந்த கூட்டம்
இனியுமா பொறுப்பதென
எழுந்தார் பார்
அழிந்ததவர் கொட்டம்.

அணையாத சுவாலையென
ஆணவம் போர் தொடுக்குமா?
பத்தொடு பதினொன்றென
பிணம் பெருத்தால் அடுக்குமா?

'ஷெல்' மழை பொழிந்தோரே
'ஷெல்' உமக்கும் வலிக்குமா?
முன்னவர்க்கு செய்த சதி
இனியும் பலிக்குமா?

பனி நாட்டு வெண்புறாவின்
பணி இனியும் தொடருமா?
சாந்தியுடன் சமாதானம்
சமத்துவம் தான் படருமா?

நரபலிகள் வேண்டுமென்றால்
நாசமாய் போனவரே — சவக்காலை
நடுவினிலே ஆசனம்
நாமுமக்குத் தந்திருப்போம்
மரத்தினில் இருந்து கொண்டே
வேரறுக்கும் நாசம்
எண்ணிப் பார் நியாயமா?

சிற்றுளி

யுத்த பூமி

கார் மேகம் கண்டு ஏர்பூட்டி
சீர்செய்த எம் நாட்டில்
பாரெல்லாம் கேட்கும் — தினம்
யுத்தத்தின் முழக்கங்கள்
தொலைந்துவிட்ட மனிதநேயங்கள்!
கருவில் ஜனிக்கும் குழந்தைக்கு
கருத்தாய் ஓர் தாலாட்டு அன்று — எம்
திருநாட்டிலோ யுத்தத்தின் அனர்த்தத்தினால
உருக்குலைந்த சிசுக்களின் அவதாரம் —
என்ன கொடுமை இது?
சிறுமணித்தீவிற்கு ஏனிந்த சோதனை?

கிஷ்ஜனா நந்தகுமார், ஆரையம்பதி.

அம்மாவின் சைக்கிள் வீடு மகளுக்கு ஓய்வு விடுதி!

உலகில் எத்தனையோ பேர் குடியிருக்க வீடு இன்றி அவதியுறுகிறார்கள். சென்னையிலுள்ள இந்தப் பெண்ணோ ஒரு சைக்கிள் ரிக்ஷாவையே தனது வீடாக்கி விட்டார். ஆண்கள் மேற்கொள்ளும் தொழிலைத் தனது வாழ்வுக்கு ஆதாரமாகக் கொண்டிருக்கிறார் இந்தப் பெண். தனது கைக் குழந்தையை சைக்கிளின் முன் இருக்கையில் இருத்திக் கொண்டு சவாரி செய்கிறார் அம்மா. அம்மாவின் சைக்கிள் வீடு மகளுக்கு ஓய்வு விடுதி ஆகிவிட்டது. அம்மாவுக்குப் பிழைப்பு. மகளுக்குக் களிப்பு.

இரும்புத் திரைக்குள் மார்பளவு சிலைகள்

சோவியத் ஒன்றியம் இரும்புத் திரைக்குள் இயங்கிய காலம் ஒன்று இருந்தது. அங்கு நடைபெற்ற சம்பவங்கள் வெளியில் தெரிய வந்ததில்லை. ஆயினும் இன்றோ சோவியத் நாடுகள் சுயாதிபத்தியம் பெற்ற பின்னர் இரும்புத் திரைக் கெடுபிடிகள் அங்கு இல்லை. ரஷ்ய ஜனாதிபதி புட்டின் நாட்டின் பொருளாதாரப் பின்னடைவைப் போக்குவதற்கு முயற்சி எடுத்திருக்கிறார். சென்ட் பீட்டர்ஸ் சதுக்கத்திலுள்ள கலாபவனத்தில் ரஷ்யாவின் புகழ்பெற்ற சிற்பி அலெக்ஸாண்டர் பாலமின் ஜனாதிபதி புட்டினின் மார்பளவுச் சிலை ஒன்றை வடிக்கும் காட்சி இது.

குரங்கு மனிதனை கண்ட அதிர்ச்சியா?

இந்தியாவின் தலைநகரான புது டில்லியில் ஒரு குரங்கு மனிதன் நடமாடுகிறான் என்ற பீதி பரவியது. இதனால் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். பொலிஸார் பெரும் பிரயத்தனம் எடுத்த போதிலும் அந்தக் குரங்கு மனிதன் அகப்படவே இல்லை. இந்தப் படத்தில் காணப்படும் தாய்க் குரங்கை அதன் குட்டி மிகவும் கலவரத்துடன் கட்டித் தழுவுவதற்குக் காரணம் என்ன? குரங்கு மனிதனைக் கண்ட அதிர்ச்சியினால் ஏற்பட்ட பயப்பீதியா இது?

சூழலை வியாபாரத்தும் முயற்சிக்கு எதிர்ப்பு

சுற்றுப் புறச் சூழலைத் தூய்மைப்படுத்தும் விதத்தில் உலக நாடுகள் மட்டத்தில் சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. சூழலைப் பாழ்படுத்துவதில் உலக நாடுகளிலுள்ள தொழிற்சாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் காரணமாக இந்தத் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கரிய மிலவாயுவின் அளவைக் குறைக்க வேண்டும் என்று உலக நாடுகள் ஒப்பந்தம் செய்திருக்கின்றன. அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தை மீறி வருகிறது என்று குற்றம் சாட்டி லண்டனில் ஒரு எதிர்ப்பு ஊர்வலம் நடந்தது. ஒரு எதிர்ப்பாளர் ஆர்ப்பாட்டக் குரல் எழுப்பும் காட்சி இது.

ஒளிந்திருக்கும் முகம் எது?

ஜூன் 10, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் சத்யராஜுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. கலைப்பிரியன், பெரியநீலாவனை—01.
2. எஸ். பஸ்லுக்ஹக், அக்கறைப்பற்று—05.
3. கு. அனிதா, தலவாக்கலை.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (17.06.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? அக்கா நடிகை எடுத்த பெயரை விட நான் அதிக அளவில் பெயர் எடுப்பேன் என்று ''டும் டும் டும்'' கொட்டக்கூடிய நடிகை இவர்.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
36/2, பிரெப்ரிக்கா வீதி
கொழும்பு — 06.

மசாலா MIX

அந்தரத்தில் மிதந்தும் நிதானம் தவறவில்லை!

மில்லேனியம் எனப்படும் புத்தாயிரமாம் ஆண்டு மலர்ந்த வேளையில் பிரிட்டனில் ''மில்லேனியம் டோம்'' எனப்படும் மாபெரும் கண்காட்சி மண்டபம் நிறுவப்பட்டது. விந்தைகள் மிகுந்த விசித்திர கலா நிகழ்ச்சிகள் இந்த மண்டபத்தில் நடைபெறுகின்றன. ''மில்லேனியம்'' மண்டபத்தில் ஒரு தந்திரக் காட்சியில் கலந்து கொண்ட இந்த ஜோடி அந்தரத்தில் மிதந்தும் நிதானம் தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தோ! வன்னிப் பயணிகள் என்ன பாவம் செய்தார்களோ!

தாமதங்கள், இன்னல்கள், அலைச்சல்கள் அப்பப்பா?

வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வர முடியாமல் பெரும் எண்ணிக்கையானோர் பண்டிவிரிச்சான் பகுதியில் காத்திருக்கிறார்கள்.

அவசர தேவைக்கு வந்த கர்ப்பிணிகள், வயோதிபர்கள் உட்பட பலரும் வாரக்கணக்காக காத்திருந்தே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னியிலிருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரவேண்டியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னியிலிருந்து ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் 700 பயணிகள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரவும் , போகவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

அண்மையில் வவுனியாவுக்கு வந்த பயணிகளில் சிலர் வன்னிக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் பேர் வரை வவுனியாவில் தங்கவேண்டி ஏற்பட்டது.

இதனால் பயணிகள் ஆர்ப்பாட்ட முயற்சிகளில் ஈடுபட்டனர், முறைப்பாடும் செய்தனர். இதனையடுத்து அவர்கள் திரும்பிச் செல்ல ஏற்பாடும் செய்யப்பட்டது.

ஆனால் இதே நேரத்தில் இன்னொரு பகுதியில் பயணிகள் பலர் பயணத்தைத் தொடர முடியாமல் நாள் கணக்கில், வாரக்கணக்கில் அலைச்சல் படுவதையும், அவலப்படுவதையும் எவரும் வெளிக்கொணரவில்லை.

ஏனென்றால் அது படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி என்பதும், பாதிக்கப்பட்டவர்கள் முறையிடவோ எதிர்ப்புத் தெரிவிக்கவோ முன் வரவில்லை என்பதும் அவர்களுக்காகக் கதைக்க எவருமில்லை என்பதும்தான்.

இந்தப் பயணத்தின் அவலங்கள் பற்றி பலரிடம் பேசிப் பார்த்தோம். கிடைத்த தகவல்களின் தொகுப்பு இது.

வன்னியில், அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரவேண்டுமானால் புலிகளிடம் பாஸ் பெற வேண்டியது அவசியம். எனவே வன்னியில் புலிகள் அமுல்படுத்தியுள்ள நடைமுறைகளின்படி பாஸைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு பாஸ் வழங்கப்படும்போது குறிப்பிட்ட நபர் எந்த திகதிக்கு பின்னர் பயணம் செய்யலாம் என அந்த பாஸிலே திகதி குறிப்பிடப்பட்டிருக்கும். பாஸ் எடுத்து 5 நாட்களின் பின்பே இந்தப் பயண திகதி குறிப்பிடப்பட்டிருக்கும்.

பயணம் செய்பவர் பாஸிலே குறிப்பிடப்பட்ட திகதிக்குப்பின் தனது சொந்த இடத்திலிருந்து புறப்படுவார். புறப்பட்டு பள்ளமடுவை வந்தடைவார். புலிகள் ஆயுதத்துடன் நடமாடக்கூடிய எல்லைப்பகுதியாக பள்ளமடு இருக்கிறது.

பள்ளமடுவில் பாஸில் முத்திரை குத்திக்கொண்ட பயணிகள் தொடர்ந்து பயணம் செய்து 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பண்டிவிரிச்சானை வந்தடைவர். அங்கே பயணிகள் தங்குவதற்கென பெரிய கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கேதான் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்காக ஆயிரக்கணக்கில் மக்கள் தங்கியிருப்பர்.

பயணத்திற்கான டோக்கன் அவர்களுக்கு அங்கே வழங்கப்படுகிறது. பண்டிவிரிச்சானில் உள்ள கொட்டகையில் கடமையாற்றும் சில ஊழியர்கள் வந்து சேரும் ஒழுங்கில் பயணிகளின் பெயரைப் பதிந்து– அவர்கள் எப்போது பயணம் செய்ய முடியும் என்ற விவர மடங்கிய டோக்கனை வழங்குவார்கள்.

ஒவ்வொரு செவ்வாயும், வெள்ளியும் 700 பயணிகள் பயணம் செய்ய முடியுமானாலும் அதில் அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நோயாளிகள், மரண வீடு போன்ற அவசிய காரணங்களுக்காகப் பயணம் செய்வோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளித்த பின்னர் ஏனையவர்களுக்கான டோக்கன் வழங்கப்படும்.

இவ்வாறாக டோக்கன் வழங்கப்படும் போது ஆயிரக் கணக்கான பயணிகள் பயணம் செய்யக் காத்திருக்கும் நிலையில் டோக்கன் வழங்குவோர் வந்த ஒழுங்கின் படியே பயணத் திகதியைக் குறித்துக் கொடுப்பர். இதன்படி ஒரு பயணி ஒரு மாதம் மட்டில் தாமதித்தே

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வரும் பயணிகளின் பொதிகளைச் சோதனையிடும் படையினர்.

பயணத்தைத் தொடரக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் பலர் டோக்கன் எடுத்துக் கொண்டு தமது சொந்த இடங்களுக்குப் போய்ப் பின்னர் பயணத்திற்கு முந்திய திகதியில் திரும்ப வருவதும் உண்டு. ஆனால் திரும்பவும் போய்வர ஏற்படும் ஆயிரக் கணக்கான பணச் செலவைக் கருதியும், படையினர் 700 பேரை விடக்கூடுதலான பயணிகளை எடுக்கமாட்டார்களா? என்ற நப்பாசையிலும் சிலர் பண்டிவிரிச்சானிலேயே தங்கி விடுவதும் உண்டு.

இவ்வாறாக வாரக் கணக்கிலும் – மாதக்கணக்கிலும் தாமதிக்க வேண்டிய பயணிகள் பயணம் குறிக்கப்பட்ட திகதிக்கு ஒரு நாள் முன்பாக மீண்டும் பண்டிவிரிச்சானில் உள்ள தங்குமிடக் கொட்டகைக்கு முன்னால் ஆஜராகி விட வேண்டும்.

பயண நாளான செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கே புறப்பட்டு தம்பனைக்கு செல்ல வேண்டும். தம்பனைக்கு அடுத்த பகுதியான பிரமளானங்குளப் பகுதியிலேயே இராணுவ முன்னரங்கப் பகுதி இருக்கிறது.

அந்தப் பகுதிக்குச் சென்று அங்கு மரநிழல்களின் கீழ் கியூவிலே பயணிகள் காத்திருக்க வேண்டும். கியூவில் நிற்பதில் பலத்த சண்டைகளும் ஏற்படுவதுண்டு. நானா நீயா முன் னால் நிற்பதென்று பலத்த போட்டி ஏற்படும். நெருக்கியடித்து கியூவிலே இணைந்து கொண்டாலும் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டும்.

சுமார் 10 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வந்து சேருவர். அதுவரை கொளுத்தும் வெய்யிலில் காத்திருக்க வேண்டும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இராணுவப் பகுதிக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் வந்து சேர்ந்த பின் இரு பகுதியினரும் வானொலித் தொடர்பு மேற்கொண்டு ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி என்று தெரிந்தவுடன் பயணிகளை வரிசையாக படையினர் பகுதி நோக்கிச் செல்ல அனுமதிப்பர்.

செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பயணிகளைச் செல்ல அனுமதித்தவுடன் பயணிகளிடையே பெரும் போரே மூண்டு விடும். கியூவிலே இருந்தவர்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் இடித்து நெருக்கிக் கொண்டு முன்னே போக எத்தனிப்பர். பயண நாட்களில் 700 பேரை மட்டுமே பயணத்துக்கு அனுமதிக்கும் நடைமுறை இருந்தாலும் – படையினரும் ஒரு நாள் விட்டு ஒருநாளில் 700 பேருக்கு மேலும் பயணிகளை அனுமதிப்பதால் பயணிகளும் பயண நாட்களில் 100 பேர் வரையில் அதிகமாகவே வருவது வழக்கம்.

அவ்வாறான நிலையிலேயே இந்த அடிபிடி ஏற்படுகிறது. இதனால் எல்லையிலேயே இராணுவத்தினரால் போடப்பட்டுள்ள முள்ளுக் கம்பிமேல் விழுந்துபலர் காயமடைவதும், நெரிசலில் சிக்கி மூச்சடைத்து மயங்கி விழுவதும் உண்டு.

இவ்வாறு அடிபிடிபட்டு இராணுவத்தினரிடம் சென்றதும் அனைவரையும் சோதனைசெய்தபின் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிப்பர். அங்கு வைத்தே வவுனியாவுக்கான வதிவிடப் பாஸை பயணிகளுக்கு வழங்குவர்.

அங்கு நிற்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பயணி களிடம் அடையாள அட்டைகளை வாங்கி வைத்துக் கொண்டு அவர்களைச் சாக்கினால் மறைக்கப்பட்ட இடங்களுக்குக் கூட்டிச் சென்று வன்னியில் புலிகளின் நடமாட்டம், புலிகளின் முகாம்கள் பற்றிய மற்றும் வன்னி நிலவரங்கள் தொடர்பாக சாம,தான, பேத தண்டங்களை எல்லாம் பாவித்து விசாரிப்பர்.

அதன்பின் அனைவரும் அங்கே காத்துநிற்கும் பஸ்களில் ஏற்றப்பட்டு வவுனியாவுக்கும், மன்னாருக்கும் அனுப்பப்படுவர். புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்படுவோரில் சந்தேகத்திற்கிடமான இளவயதினரின் அடையாள அட்டை பறிமுதல் செய்யப்படும். மறுநாள் வவுனியாவில் உள்ள கோழிக்கூட்டு முகாம் எனப்படும் இடைத்தங்கல் முகாமில் அடையாள அட்டையைப் பெற்றுச் செல்லும்படி அவர்கள் பணிக்கப்படுவர்.

இவ்வாறாக பல்வேறு இன்னல்கள், தாமதங்கள், அலைச்சல்களின் பின்பே வன்னியிலிருந்து பயணிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்கின்றனர்.

பலர் வருவதற்கு காத்திருக்கின்றனர்.

இவர்களனைவரும் இதற்கொரு விடிவு கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

– வன்னி மைந்தன்

ராசி பலன்

24.06.2001 முதல் 30.06.2001 வரை
பொ.சந்திரன்.

மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.
இராசிநாதன் செவ்வாய் வார இறுதியில் தன் சொந்த வீட்டுக்கு வக்கிரகதியில் வருவதால் ஓர் அளவு நன்மை ஏற்படும். கல்வியில் ஆர்வம் இருக்கும். பணத்தட்டுபாடு இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். அயலவர் அன்பாய் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாண வாய்ப்புகள் தடைப்படலாம். திருமண வாய்ப்பும் தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

இடபம்: கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.
இராசியிலும் இருமருங்கிலும் கிரகங்கள் இருப்பது புதுவலு சேர்க்கும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் உதவியாய் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாண வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். திருமண வாய்ப்புகள் அனுகூலமாக இருக்கும். தொழில் துறையில் சில பின்னடைவுகள் ஏற்படலாம்.

மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.
இராசிநாதன் புதன் செலவுத் தானத்தில் சனியுடன் கூடி இருப்பது சற்று சங்கடமான காலம்தான். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். உற்றார், உறவினர் அன்பாய் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். திருமணப் பேச்சில் இழுத்தடிப்பு இருக்கும். தொழில் துறையில் சில பிரச்சினைகள் தோன்றலாம்.

கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.
இராசிநாதன் இராசியிலும் இரண்டாம், மூன்றாம் இராசியிலும் சஞ்சாரம் செய்வது நல்ல பலனைத் தரும். கல்வியில் ஆர்வம் இருக்கும் பணத்தட்டுப்பாடு இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறை முன்னேறும். புதிய தொழில் வாய்ப்பு கிட்டும்.

சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.
இராசிநாதன் சூரியன் இலாபத்தானத்தில் குருவோடு இருப்பது விசேஷம். கல்வியில் ஆர்வம் இருக்கும். பணத்தட்டுப்பாடு இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக.இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமணப் பேச்சு சாதகமாக அமையும். தொழில் துறை முன்னேறும். கூட்டு முயற்சி, பங்கு வியாபாரம் முன்னேறும்.

கன்னி: உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.
இராசிநாதன் சனியோடு கூடினாலும் பாக்கிய ஸ்தானத்தில் இருப்பது விசேஷம். கல்வியில் ஆர்வம் இருக்கும். பணம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்று. திருமணப் பேச்சுக்கள் நல்ல முன்னேற்றம் காணும். தொழில்துறை முன்னேறும். பதவி உயர்வு உண்டு. அதிஷ்டம் உண்டு.

துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.
இராசிநாதன் சுக்கிரன் இராசியை நோக்குவது நல்ல அம்சம். குருவும் இராசியை நோக்குவது விசேஷம். கல்வியில் ஆர்வம் இருக்கும். கையில் பணம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். சொந்தக்காரர் விலகி இருக்கக் கூடும். பிரயாண வாய்ப்பும் உண்டு. திருமணப் பேச்சும் வெற்றிகரமாக அமையும். தொழில் துறையில் சில தடங்கல் இருப்பினும் முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை.
இராசிக்கு சனி பார்வை உண்டு. தாமதம் இருப்பினும் சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களின் பார்வை நன்மை செய்யும். கல்வியில் ஆர்வம் குறையும். பணத்தட்டுப்பாடு இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் அன்பாய் இருப்பர். பிரயாணத்தடை இருக்கும். திருமணப் பேச்சு தாமதமாகலாம். தொழில் துறையில் சில பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி வரும்.

தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.
இராசிநாதன் இன்பத்தானத்தில் இருப்பதும் இராசியை நோக்குவதும் விசேஷம். நல்ல பலனை எதிர்பார்க்கலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். பணத்தட்டுப்பாடு இருக்கும். வீடு வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். பிரயாண வாய்ப்பு உண்டு. தடைப்பட்ட திருமணம் கைகூடும். தொழில்துறை முன்னேறும்.

மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.
இராசிநாதன் சனி புண்ணிய ஸ்தானமான ஐந்தாம் வீட்டில் புதனோடு இருப்பது நலம். கல்வியில் ஆர்வம் இருக்கும். பணம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்று. பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். திருமணப் பேச்சு தடைப்படலாம். தொழில்துறை முன்னேற்றம் காணும்.

கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.
இராசிநாதன் சுகஸ்தானத்தில் புதனோடு இருந்து இராசியை நோக்குவது விசேஷம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். உறவினர் விலகியே இருப்பர். தேக ஆரோக்கியம் நன்று. பிரயாணம் அமையலாம். திருமணப் பேச்சு நல்ல முறையில் அமையும். தொழில்துறை நல்ல முன்னேற்றம் காணும்.

மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.
இராசிநாதன் குரு, சுகஸ்தானத்தில் இருப்பது ஓர் அளவுக்கு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினர் விசுவாசம் இல்லை. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் முன்பு இருந்த சிக்கல் விலகி முன்னேற்றம் அடையும். பொதுவாக அமைதியான வாரம்.

அமைச்சர் எஸ்.பி.க்கு வந்த தேசிய அரசு ஞானோதயம்!

ஐ.தே.க. குழுவை உள்ளிழுத்து மு.கா.வை வெளியேற்றும் திட்டமா?

நாட்டில் காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. திடீர் மழை, திடு திப்பென பலத்த காற்று, எப்பொழுது வெய்யில் எறிக்கும், எப்பொழுது மழை கொட்டும் என்பதை சொல்ல முடியாத நிலை.

நாட்டு அரசியலும் இன்று இப்படித்தான் உள்ளது. அரசைக் கவிழ்ப்போம் என்று ஐ.தே.க கூறி வருகிறது. பதவிக் காலம் முடியும் வரை ஆட்சியில் இருப்போம் என்கிறது பொ.ஐ.மு. அரசில் தொடர்ந்து இருப்பதா, இல்லையா என்று முஸ்லிம் காங்கிரஸ் தடுமாறிக்கொண்டிருக்கிறது.

இந்த நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில் மற்றொரு கோணத்தில் புதிய அரசியல் சிந்தனை ஒன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புதிய சிந்தனையானாலும் விடயம் என்னவோ பழையது தான். ஆனால் இன்று அந்த சிந்தனை எழுந்ததற்கான அவசியம் என்ன?

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற இந்த சிந்தனை அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்காவின் மூளையிலேயே உதித்துள்ளது. சில நாட்களுக்கு முன் குருநாகலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றினார். அப்போது தேசிய அரசாங்கம் அமைக்கும் அவசியத்தை அவர் அடித்துக் கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனை கடந்த காலங்களிலும் அங்குமிங்குமாக வெளிப்பட்டது. சிறுபான்மைக் கட்சிகளைக் கொண்டு இரண்டு பெரிய கட்சிகளும் மாறி மாறி கூட்டு அரசாங்கங்களை அமைத்தும் உள்ளன.

இருந்தாலும் இரண்டு பெரிய கட்சிகளையும் கொண்ட ஓர் அரசாங்கம் இதுவரை அமைக்கப்பட்டது கிடையாது. அவ்வாறான ஓர் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதற்கான காலம் கனிந்து விட்டது என்றே அமைச்சர் திசாநாயக்கா கருதுகிறார்.

குருநாகலையில் நடந்த கூட்டத்தில் அவர் கூறியது இதுதான்.

''நாட்டின் எதிர்கால பரம்பரைக்காக வலுவான பொருளாதாரத்துடன் கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். இந்த நோக்கத்துக்காக தேசிய அரசை நிறுவுவதற்கான காலம் வந்துவிட்டது.

''சில சிறுபான்மைக் கட்சிகள் தேசிய நலனைப் புறம் தள்ளிவிட்டு தமது குறுகிய நோக்கங்களை அடையப் பார்க்கின்றன. இதற்காக அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கின்றன. மதத்துக்காக, குலத்துக்காக, இனத்துக்காக நிர்வாக மாவட்டத்தை அடிப்படை வாதிகள் கோருகிறார்கள்.

''இவர்களை விரட்டி அடித்துவிட்டு நாட்டை நேசிப்போரைக் கொண்ட தேசிய அரசை நிறுவ வேண்டும்.

1977 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா கொண்டு வந்த அரசியல் சட்ட மூலத்தினால் எதிர்காலத்தில் எந்த ஒரு கட்சியும் தனித் துப் பலமான அரசை அமைக்க முடியாது.''

இப்படி சிறுபான்மைக் கட்சிகள் மீது சீறிப் பாய்ந்துள்ளார் அமைச்சர் திசாநாயகா.

அதனால் தான் விரும்பும் தேசிய அரசில் சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்த்துக்கொள்ள அவர் விரும்பமாட்டார். அரசிடம் கோரிக்கை களை முன்வைக்கும் எல்லா சிறுபான்மைக் கட்சிகளையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியை அல்லது அதன் ஒரு பிரிவினரை சேர்த்துக் கொண்டு அரசு அமைக்கப்படுவதே அவரது விருப்பமாகத் தெரிகிறது.

எஸ்.பி.திஸாநாயக்கா

தேசிய அரசை அமைப்பதற்கான அத்திபாரத்தைப் போட ஜனாதிபதி சந்திரிகாவிடம் தானும் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். அரசில் உள்ள வேறு பலரும் இக்கோரிக்கையை விடுத்திருப்பது தெரிகிறது.

கல்முனை தனிமாவட்டக் கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவ ராக இருந்த அமரர் அஷ்ரப் முன்வைத்த கோரிக்கை இது.

1994 ஆம் ஆண்டு தேர்தலின் பின் மு.கா அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. 2000ஆம் ஆண்டு தேர்தலிலும் தனது பங்காளிக் கட்சியாகவே மு.கா. வை அரசு வைத்திருந்தது.

இவ்வளவு நீண்ட காலத்தில் மு.கா.வின் கல்முனை மாவட்டக் கோரிக்கை குறித்து ஜனாதிபதி பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்தது கிடையாது. அரசுக்கு மு.கா காலக் கெடு விதித்த சந்தர்ப்பங்களில் எல்லாம் கூட ஜனாதிபதி மு.கா. தலைவர்களை அழைத்துப் பேசத் தவறவில்லை.

அரசின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்திகளாக சிறுபான்மைக் கட்சிகளே இருந்து வருகின்றன. அவ்வாறான ஒரு நிலையில் முஸ்லிம் காங்கிரஸை குறிவைத்து அமைச்சர் திசாநாயக்கா பேசியிருப்பது ஏன்?

மு.காவின் நிர்ப்பந்தத்துக்கு இனியும் பொறுத்திருக்க முடியாது என்பதை அவர் அப்பட்டமாகக் கூறிவிட்டார். ஜனாதிபதியின் ஆசீர்வாதம் இல்லாமல் அவர் இதைப் பேசியிருப்பாரா?

ஜனாதிபதி இது குறித்து உடனடியாக உடன்பாடு தெரிவிக்கவில்லை மறுப்பும் கூறவில்லை. இருந்தாலும் தேசிய அரசு குறித்து ஐ.தே.க வினர் சிலர் ஜனாதிபதி யைச் சந்தித்து பேசியிருப் பதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஐ.தே.க வினர் சிலர் தேசிய அரசு அமைக்கப்படுவதில் ஆர்வம் காட்டினாலும் ஐ.தே.க தலைமைப்பீடம் தேசிய அரசு யோசனையை நிராகரித்துள்ளது. அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வருவதில் ஐ.தே.க தலைவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். சந்திரிகா அரசை விமர்சித்தும் வருகின்றனர்.

அமைச்சர் திசாநாயக்கா தேசிய அரசு குறித்து பேசிய தினத்தில் ஐ.தே.க தலைவர் ரணில் கல்கமுவ தொகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றினார். ''இன்று நாட்டில் இருப்பது புதுமையான தொரு அரசாங்கம். மக்களுக்கு மூன்று வேளை சாப்பாடு வழங்குவதற்குப் பதிலாக மக்களிடம் உள்ள இறுதி சதத்தையும் சுரண்டும் அரசே இருக்கிறது. இந்த அரசை விரட்ட வேண்டும்'' என்றெல்லாம் அவர் கண்டித்துப் பேசியுள்ளார்.

பொதுமக்கள் முன் இவ்வாறு கண்டித்துப் பேசி விட்டு அதே அரசுடன் ஐ.தே.க தலைவர்கள் இணைந்து பங்கெடுக்க முடியுமா? தேசிய அரசில் ஐ.தே.க தலைவர்கள் இணைவது முடியாத காரியமாகவே தோன்றுகின்றது.

ஆனால் சரத்அமுனுகம, விஜேபால மெண்டிஸ் ஐ.தே.க மாற்றுக் குழுவினர் அரசில் இணைந்தது போல மற்றொரு ஐ.தே.க குழுவும் அரசில் இணையாது என்பதைக் கூறுவதற்கில்லை.

அமைச்சர் திசாநாயக்காவின் பேச்சில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று— அரசாங்கத்தை ஆட்டிப்படைக்க நினைக்கும் கட்சி (முஸ்லிம் காங்கிரஸ்) வெளியேற்றப்பட வேண்டும்.

இரண்டு — அரசாங்கத்தை சிறுபான்மைக் கட்சிகள் ஆட்டிப்படைப்பதை முடிவுக்குக் கொண்டு வரத் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

கல்முனை மாவட்டத்தை நிராகரித்து விட்டால் முதல் நோக்கம் தானாகவே நிறைவேறி விடலாம்.

ஐ.தே.கவைப் பிளவுபடுத்தி ஒரு குழுவை இணைத்து விட்டால் இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றலாம் என்பது அரசின் திட்டமாக இருந்தால் அமைச்சர் திசாநாயக்காவின் பேச்சு அதற்குப் பயன்படலாம்.

— எட்வர்ட்

இறந்தவர்களை டாக்டர் உயிர் பெறச் செய்யலாம்!

கேள்வி : இறந்துபோன ஒருவரை உயிர்ப்பிக்க முடியுமா?

பதில் : ஆம். ஒருவருடைய இதயத்துடிப்பும் சுவாசமும் நின்று போனால் அவர் இறந்து போனதாகக் கருதப்படுகிறார். சுவாசமும் இதயத்துடிப்பும் நின்று ஒருசில நிமிடங்களின் பின்பே உடற்கலங்கள் சேதமடைகின்றன. உடற்கலங்கள் சேதமாவதற்கு முன் சில மருந்துகளினதும் உபகரணங்களினதும் உதவியுடன் இதயத்துடிப்பையும் சுவாசத்தையும் மீண்டும் ஏற்படுத்தலாம். அவ்வாறு ஏற்படுத்தப்படின் அவர் தொடர்ந்தும் உயிர் வாழ முடியும். இவ்வாறு செய்வதற்கு உடலின் அங்கங்கள் நல்லநிலையில் இருத்தல் வேண்டும். இம்முறை மூலம் உயிர்ப்பிக்கப்பட்ட பலர் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கே : முப்பத்து நான்கு வயதைப் பூர்த்தி செய்யும் எனக்கு வயிற்று எரிவு, வயிற்றுப் பொருமல் என்பன கடந்த மூன்று வருடங்களாக இருந்து வருகின்றன. இதற்கான மருந்துகளை உட்கொள் ளும்போது தற்காலிக சுகம் தென்பட்டாலும் பூரண சுகம் கிடைக்கவில்லை. இந்த நோயை நிரந்தரமாகக் குணப்படுத்த முடியாதா?

ப : நீங்கள் குறிப்பிட்டுள்ள அறிகுறிகள் பொதுவாக இரைப்பையில் அல்லது சிறுகுடலின் முற்பகுதியில் ஏற்படும் புண்ணினால் அல்லது அழற்சியினால் ஏற்படுகின்றன. இவற்றுக்குக் காரணம் இரைப்பையில் ஏற்பட்டுள்ள ஒருவகை நுண்ணங்கிகளின் தொற்றுதல் ஆகும். இந்த நுண்ணங்கிகளை கொன்று ஒழிப்பதன் மூலமே இந்த நோயைப் பூரணமாகக் குணப்படுத்த முடியும். இதற்கான மருந்துகள் தற்போது கிடைக்கின்றன. உங்கள் நோயை உறுதிப்படுத்த சில சோதனைகள் தேவைப்படலாம். எனவே நீங்கள் ஒரு மருத்துவரைச் சந்தித்து அவரின் ஆலோசனைப்படி மருந்துகளைப் பாவித்தால் பூரண சுகம் கிடைக்கும். இதற்கு மேலதிகமாக நீங்கள் உறைப்பான, புளிப்பான, சூடான உணவு வகைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் நேரம் தவறாது உணவு அருந்திவருதல் வேண்டும்.

கே : ஒருவரின் ஞாபக சக்தியைக் கூட்டுவதற்கு மருந்து ஏதாவது கண்டறியப்பட்டுள்ளதா?

ப : இல்லை. இது சம்பந்தமாக சில ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இதற்காகவும் சில மாத்திரைகள் கண்டறியப்படலாம். இப்பொழுது டிமென்சியா எனப்படும் நோயினால் ஞாபகசக்தி குறைவடைந்தவர்களுக்கு ஞாபக சக்தியைக் கூட்டுவதற்கு சில மருந்துகள் பாவனைக்கு வந்துள்ளன. சாதாரண மக்களுக்கு ஞாபகசக்தியைக் கூட்ட இவை பயன்படமாட்டா.

கே : 37 வயதைப் பூர்த்தி செய்துள்ள எனது உடல் நிறை 72 கிலோ கிராம் ஆகும். தற்போது இதனைக் குறைப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். எனது நிறையை எவ்வளவுக்குக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லுவீர்களா?

ப : உங்கள் உயரத்தை நீங்கள் குறிப்பிடவில்லை. ஒவ்வொருவரும் இருக்கவேண்டிய சராசரி நிறையின் அளவு அவரின் உயரத்தில் தங்கி உள்ளது.

உடல் நிறைக்கும் உயரத்தின் வர்க்கத்திற்கும் இடையிலான விகிதம் பெண்களுக்கு 18 தொடக்கம் 24 வரையில் இருக்கலாம். ஆண்களுக்கு 20 தொடக்கம் 25 வரையில் இருக்கலாம். ஒருவரினுடைய இந்த விகிதமானது 25 இலும் பார்க்க அதிகமாக இருந்தால் அவர் தனது நிறையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் இதய நோய்கள், நீரிழிவு நோய், உயர் குருதி அழுத்தம், நுரையீரல் சம்பந்தமான நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

கே : கடுமையான மாற்றமுடியாத நோய் ஒன்றினால் பல வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒருவர் தான் இறந்துபோக விருப்பப்பட்டால் அதற்கான உரிமை அவருக்கு இருக்கிறதா? இதற்கு வைத்தியர்கள் உதவி புரிவதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா?

ப : நீங்கள் குறிப்பிட்டிருக்கும் இந்தச் செயலை கருணைக் கொலை (Euthanasia) என்று சொல்லுவார்கள். இது இலங்கையில் சட்டவிரோதமானது. ஆனால் சில நாடுகளில் கருணைக்கொலை என்பது சட்டபூர்வமானதாக மாற்றப்பட்டுள்ளது. மாற்றமுடியாத நோயினால் கடுமையாகத் துன்பப்படும் ஒருவர் வைத்தியரிடம் தன்னைக் கொன்றுவிடும்படி கேட்பதற்கு முக்கிய காரணங்களாவன குடும்பத்திலும் சமூகத்திலும் அவருக்கு போதியளவு கவனிப்பும் ஆதரவும் கிடைக்காததும் அவரின் வைத்தியக் கவனிப்பு சரிவர அமையாததுமாகும். இவை சரியான முறையில் நிவர்த்தி செய்யப்பட்டால் இந்தக் கேள்விக்கு இடம் இருக்காது.

Dr. சி.சிவன்சுதன்
(M.B.B.S, MD)

இலவச மருத்துவ ஆலோசனை

சுடர்ஒளி வாசக நேயர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். இலவச மருத்துவ ஆலோசனைகளை சுடர் ஒளி மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன்.

இரத்த அழுத்தம் பற்றி டாக்டர் சிவன்சுதன் எழுதிய கட்டுரை கடந்த 3ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமானது அல்லவா? அதைப் படித்த வாசக நேயர்கள் பலர் டாக்டரைக் கெட்டியாகப்பிடித்துக்கொண்டார்கள். தங்கள் சந்தேகங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் டாக்டரிடம் மருத்துவ ஆலோசனை கேட்டு உரிமையோடு சுடர் ஒளிக்கு கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். எதிர்பாராது வந்த கேள்விகளில் சிலவற்றிற்கு டாக்டர் இந்த இதழில் பதில் அளித்திருக்கிறார். இந்தச் சேவை இனித் தொடரும். சந்தேக விளக்கமும் வைத்திய ஆலோசனையும் பெற விரும்பும் நேயர்கள் தங்கள் கேள்விகளோடு தங்களுடைய பெயர், முகவரி, வயது, ஆணா, பெண்ணா என்ற விவரங்களையும் எழுதி அனுப்ப வேண்டும். அவை இரகசியமாக வைக்கப்படும். கேள்விகளும் டாக்டரின் பதில்களும் மட்டுமே சுடர் ஒளியில் பிரசுரிக்கப்படும்.

கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:
மருத்துவ ஆலோசனை,
சுடர் ஒளி,
36/2, பிரெட்ரிக்கா வீதி, கொழும்பு—06.

அந்திக் கறையினிலே

என்னைச் சுற்றி தீப்பந்தங்களின் சுடர்கள் துடித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றின் நடுவே நான் நீட்டிநிமிர்ந்து படுத்திருக்கிறேன். நான் இத்தனை வருடங்கள் வாழ்ந்து முடித்ததில் தேடிக் கொண்ட உறவுகள் என்னைச் சுற்றி நிற்கின்றன.

75 வருடங்களுக்கு முன்பு நானும் எனது அப்புவும் சேர்ந்து முற்றத்தில் நட்ட மாமரம் நிழல்பரப்பி நிற்கிறது. நேற்று இரவுகூட நான் குழைமுறித்துப்போட்ட ஆட்டுக்குட்டி பசியில் கத்தும் குரல் கேட்கிறது. எனது பேரக்குழந்தைகள் எனக்கு பந்தம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் எனக்கு வெளியே நின்று நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

''கிழவனுக்கு நல்ல நிறைவான சா தான்'' யாரோ பேசிக் கொள்வது கேட்கிறது. சாவிலும் நிறைவு இருக்குமோ? அவர் எதை நினைத்து இப்படிச் சொல்லியிருப்பார்? பாயில் கிடந்து அழுந்தாமல் நான் செத்துப்போனதைச் சொல்லியிருப்பாரோ? அல்லது நான் கடைசிவரை பிள்ளையின் அனுசரணையுடன் 'நான்' என்ற இறுமாப்புக் குன்றாமல் இருந்து செத்துப்போனதைச் சொல்லியிருப்பாரோ?

சிலசமயம் நான் சாதிக்க வேண்டியவற்றை எல்லாம் சாதித்து என் கடமைகள் எல்லாவற்றையும் முடித்து சந்தோஷமாகச் செத்துப்போனதாக நினைத்துக் கூட அவர் அதைச் சொல்லியிருக்கலாம்.

கொள்ளிவைக்க ஆயத்தமாக நிற்கும் என் ஒரேமகன் இப்பொழுதும் விக்கி விக்கி அழுதுகொண்டிருக்கிறான். அவன் அப்படித்தான் முன்பு சிறியவனாக இருக்கும் பொழுதுகூட பள்ளிக்கூடம் போவதற்கு இதே மாதிரி அழுவான். போயும் போயும் இந்த தொண்ணூறு வயதுக் கிழவன் செத்துப் போனதற்கு அழுகிறானே!

அவனுக்கு ஆறுதல் சொல்ல நினைக்கிறேன். முடியவில்லை. எனது வாய் எனக்கே அந்நியமாகிப் போய் அதற்கு வாய்க்கரிசியும் போடப்பட்டிருக்கிறது.

நான் பூரணமாக வாழ்ந்து முடிந்தாகி விட்டது. பேரப்பிள்ளைகளின் சந்தோஷங்களையும், ஏன் பூட்டப்பிள்ளை ஒன்றையும் கூட பார்த்துவிட்டேன். இனியும் ஏன் வருத்தம் துன்பம் என்று பாயில் கிடந்து அவதிப்படவேண்டும்? எனக்கு இனி விடுதலை. இதற்குப் போய் இவன் அழுதுகொண்டிருக்கிறானே?

என்னுடைய இந்த ஒரே மகனைப் பார்த்து சில நாட்களுக்கு முன் நான் பேசிய வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன.

''டேய்! என்னுடைய சவத்திலையும் முழிக்காதை. எனக்கு நீ கொள்ளியும் வைக்கப்படாது''

எதற்காக நான் இப்படிச் சொல்ல வேண்டி வந்தது? என்னை இவ்வாறு சொல்ல வேண்டிய கட்டத்திற்கு அவன் கொண்டு வந்தான். இப்பொழுது மட்டும் ஏன் விக்கி விக்கி அழுதுகொண்டிருக்கிறான். ஊர் உலகத்திற்காகவா? இல்லை. அவனை எனக்குத் தெரியும். அவனின் 'பொய்' அழுகையையும் 'மெய்' அழுகையையும் வித்தியாசப்படுத்தவும் எனக்குத் தெரியும். இந்தக் கிழவன் இறந்துபோனான் என்பதற்காகத்தான் அழுது கொண்டிருக்கிறான். பாசம் என்று சொல்லுவது வெளிப்பூச்சல்ல. அது அவனை அறியாமலேயே அவனின் ஊனிலே உறைந்துபோயிருக்கும் ஓர் உள்ளுணர்வு.

இவன் சின்னவனாக இருந்த காலம் எனக்கு அப்படியே ஞாபகம் இருக்கிறது. சரியான குழப்படி. சொல்லே கேட்கமாட்டான். மண்ணில் படுத்து உருளுவான். மண்ணை அள்ளி தலையில் போடுவான். எல்லாவற்றையும் எறிந்து உடைப்பான். புத்தகம் கொப்பிகளைக் கண்டால் கிழிப்பான் அல்லது கிறுக்கிவைப்பான்.

''ஏன்டா இப்படிச் செய்தனி?'' என்று கேட்டால் பிஞ்சு மொழியில் அதற்கும் ஒரு விளக்கம் சொல்வான். ஆனால் எனக்கு ஏனோ கோபம் வருவதில்லை. அவன் புத்திதெரியாத பிள்ளை. இவற்றை எல்லாம் சகித்துக்கொள்ள வேண்டியது எனது கடமை என்பது எனக்குத் தெரியும்.

அதேபோல நானும் தளர்ந்துபோய் புத்தி சற்றுத் தடுமாறிப் போய் இருக்கும் நேரத்திலே கதைப்பவற்றையும் செய்பவற்றையும் அவன் அமைதியாகத் தாங்கிக் கொண்டால் என்ன? இந்த 90 வயதுக் கிழவனைக் கண்டிக்க இவன் யார்? இதற்காகத்தான் அன்று இவனை ஏசவேண்டி வந்தது.

என்னுடைய மகனுக்கு ஓயாத வேலைதான். பாவம், அமைதியாக வீட்டில் உறங்கக்கூட அவனுக்கு நேரம் போதாது. ஆனால் நானும் ஒரு காலத்தில் இதேபோல ஆயிரம் விஷயங்களைப் பேசி பல அலுவல்கள் பார்த்தவன்தான். அப்படிப்பட்ட என்னைப் பார்த்து ''உங்கடை அலுவலை மட்டும் பார்த்துக் கொண்டு தேவையில்லாத விஷயங்களில் தலைபோடாமல் இருங்கோ'' என்று சொன்னானே. அது எப்படி முடியும். எத்தனையோ விஷயங்களையும் காரியங்களையும் செய்து பழகிப்போன இந்த மனிதன் வீட்டிற்குள்ளே முடங்கிப் போய் இருக்கிறானே.

என்னுடைய உலகம் இந்த வீடும் அதன் சுற்றுவட்டாரமுமாய் ஒடுங்கிப்போய் இருக்கும் போது அந்த அலுவல்களைப்பற்றி பேசாமல் எதைப்பற்றிப் பேசுவது? இவனுக்கு இப்போது விளங்காதுதான். ஆனால் விளங்கும் காலம் ஒன்று வரும். இவனுடைய மகன் இவனுக்கு விளங்கப்படுத்துவான்.

''கிழவனுக்கு வயது போனாலும் கடைசிக் காலம் மட்டும் கர்வம் கொஞ்சம் கூட குறையவே இல்லை''

யாரோ பேசுவது கேட்கிறது. கவனித்துப் பார்க்கிறேன். முன்வீட்டுக் கந்தையர்தான் வாய் நிறைய வெற்றிலையுடன் யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறார்.

முந்தநாள் இதே கந்தையர் என்னைச் சந்தித்து ''உங்களைப் போல நல்ல மனிதர் ஊருக்கை யார் இருக்கினம்?'' என்று கேட்டது ஞாபகம் வருகிறது.

வயதுபோனால் கர்வமும் சேர்ந்தே போக வேண்டும் என்று யார் சொன்னது? கிழவன் என்றால் பிறர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு இருந்து சாகவேண்டியதுதான் என்று நினைக்கிறார்களா?

நான் அப்படிச் சொல்லாமல் விட்டிருக்கலாம். மகனுடன் இறுதியாகச் சில வார்த்தைகள் பேசவேண்டும் என்ற ஒரு துடிப்பு என்னுள் இருந்து கொண்டிருக்கிறது. நான் பேசத்துடிக்கும் இந்த வார்த்தைகள் அவனின் இதயத்திற்கு கேட்கும் என்று நம்பி பேசிப்பார்க்கிறேன்.

''தம்பி! உன்னிலே எனக்கு கோபம் இல்லை. சொல்லிலே சொல்ல முடியாத அன்பு மட்டும்தான் இருக்கிறது. நீ என்னுடையவன் என்ற உரிமையில் நான் எல்லை மீறிப் பேசியவை உண்மையில்லை.

''நீ ஓயாமல் உழைத்துக் கொண்டேதான் இருக்கிறாய். எனக்காக, உன் குடும்பத்திற்காக, ஏன் இந்த ஊருக்காகவும் உழைத்துக் கொண்டுதான் இருக்கிறாய்.

''இப்படி உன்னால் முடியுமாக இருக்கும் காலத்திலேயே உன்னைப் பற்றியும் கொஞ்சம் சிந்தித்துப் பார். பிற்காலத்தில் உன் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள். இது காலத்தின் ஒரு கட்டாயத் தேவை.

''பெரியவர்கள், மூத்தவர்கள் என்று ஏட்டிலும் எழுத்திலும் தான் முக்கியத்துவம் இருக்கிறது. நடைமுறையில் அந்தக் கௌரவம் கிடைப்பதேயில்லை.

''இவ்வளவு காலமாக எங்களுக்காகவே உழைத்து தேய்ந்துபோன ஒரு உயிர் என்ற உணர்வு இருப்பதேயில்லை. குழந்தைகளைப் போலவே முதியவர்களும் இலகுவில் நோய்வாய்ப்படும் தன்மை உடையவர்கள். ஆனால் குழந்தைகளுக்குக் கிடைப்பதுபோன்ற கவனிப்பும் பாதுகாப்பும் மருத்துவ வசதிகளும் முதியவர்களுக்குக் கிடைக்கிறதா? ஏன்? இவர்களைத் தேவையற்றவர்கள் என்று நினைக்கிறார்களா? உழைப்பை உறிஞ்சி எடுத்தபின் பிழிந்து எறியும் சக்கைகள் என்று நினைக்கிறார்களா?

''உனக்குத் தெரியும் எழுபத்துநான்காம் ஆண்டு உணவுக்குப் பெரிய பஞ்சம் வந்தது. அதில் இறந்து போனவர்களில் பெரும் பங்கினர் முதியவர்கள் என்பது உனக்குத் தெரியுமா? இது எதைக் காட்டுகிறது?

''ஏன் இப்பொழுதுகூட ஆமி வரப் போகிறான் என்றால் நகைநட்டு முதற்கொண்டு எல்லா வற்றையும் எடுத்துக்கொண்டு ஆச்சி, அப்புவை மட்டும் கைவிட்டு ஓடும் கலாசாரம் தொடரவில்லையா?

''உன்னுடைய அந்திக்காலத்தில் உனக்காகக் குரல்கொடுக்க, பாதுகாக்க யாருமே இல்லாமல் போகலாம். நீதான் உனக்குப் பாதுகாப்பு. உன்னைப்பற்றியும் கொஞ்சம் இப்பொழுதே சிந்தி, நான் இப்படியெல்லாம் பேசிக்கொண்டு போவது உன்னை மறைமுகமாகக் குற்றம் சுமத்துவதற்காக என்று நினைக்காதே. நீ உண்மையில் அப்படிப்பட்டவனும் அல்ல. உன் அந்திக்காலத்திலும் எனக்கு அக்கறை இருக்கிறது என்பதுதான் உண்மை.

''சந்ததிக்குச் சந்ததி மனிதன் மாறிக் கொண்டிருக்கிறான். இன்று நீ 'பிழை' என்று நம்பிக்கொண்டிருக்கும் ஒன்றை உன் அடுத்த சந்ததி 'புனிதம்' என்று சொல்லலாம். இந்தக் கொள்கை வேறுபாட்டை சந்ததி இடைவெளி என்று சொல்லுவார்கள், உனக்குத் தெரிந்திருக்கும். இந்த இடைவெளியை சகித்துக் கொள்வது உன் கடைசிக்காலத்தில் கஷ்டமாக இருக்கும். அதுதான் பல பிரச்சினைகளுக்கு அடிநாதமாயும் இருக்கும். எனவே நீ இதை சகித்துக் கொள்ள இப்பொழுதிருந்தே உன்னைத் தயாராக்கிக்கொள். ஏனெனில் நீ தனி மனிதனாக நின்று அடுத்த சந்ததியைத் திருத்த முடியாது.''

நான் மீண்டும் மகனைப் பார்க்கிறேன். இப்பொழுதும் அழுதுகொண்டே இருக்கிறான். நான் பேசியவை அவனது மனதிற்குக் கேட்டிருக்குமா? அன்று நான் பேசியவை என் நெஞ்சிலிருந்து வரவில்லை என்பதை விளங்கிக் கொண்டிருப்பானா?

என்னுடைய மகன். நான் வளர்த்த மகன். அவனுக்கு உலகம் தெரியும். இயற்கையின் நியதிகளும் புரியும். ''எனக்கு நீ கொள்ளிவைக்கப் படாது'' என்று நான் சொன்ன பின்பும் கொள்ளி வைக்க ஆயத்தமாகி நிற்கிறானே. அதிலிருந்து தெரியவில்லையா? அவனுக்கு எல்லாம் தெரியும் என்று.

''தம்பி! எனது ஆவி இங்கிருந்து போக வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குமுன் சில விஷயங்கள் கேட்பேன். செய்வாயா? முற்றத்தில் நிற்கும் மாமரத்தைத் தறிச்சுப் போடாதை, அந்த சிவத்த ஆட்டுக்குட்டியை இறைச்சிக்காரனுக்கு விற்றுப் போடாதை, எனது பூட்டப்பிள்ளைக்கு கர்ணனின் கதை சொல்லி பாதியில் இருக்கிறது. அதை முடித்துவை. செய்வாயா?''

— உரும்பிராய் சிவன்சுதன் —

சுடர் ஒளி சிறுகதை

நிதமும் சமாதானத்தைச் சுமந்து வரும் சுடர் ஒளியே காலத்திற்கு ஏற்ப கணினி பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு எங்கள் அறிவை வளர்ப்பதில்தான் உனக்கு எவ்வளவு கரிசனை?

அ. சிவசங்கரன், முருங்கன்

வரவர சுடர் ஒளி கனதியான விடயங்களைத் தாங்கி வருகின்றது. நவீன கண்டுபிடிப்புகள் மற்றும் தற்காலத்திற்கு ஏற்ற புதிய அம்சங்களை இன்னும் இன்னும் நீ வழங்க வேண்டும். வாரா வாரம் உன் வருகைக்காகத் தவம் இருக்கிறேன்.

வி. சின்னத்துரை, யாழ்ப்பாணம்.

'பக்கத்து வீடு' தமிழகத்தில் நிகழும் அரசியல் நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து தரும் பாங்கு அலாதியானது. 'கதாசி' அவர்களுக்குப் பாராட்டுதல்கள்.

சோலைக்குயில் ஹஸனி, கல்முனை—07.

மக்களின் அவலத்தை எடுத்துரைத்து அவர்களின் நலன் ஒன்றையே குறியாக்கிச்செயல்படும் உன் திறன் கண்டு மெச்சுகிறோம். உன் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள்!

தெ. தர்ஷினி, முறக்கொட்டாஞ்சேனை.

உன்னில் வெளிவரும் அத்தனை கட்டுரைகளும் இன்றைய உண்மையான யதார்த்த நிலைகளை எடுத்துக் காட்டுகின்றன. எம்மவர்களின் துயர நிலைகளை மென்மேலும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து சாதனைகள் பல சாதிப்பாயாக!

ஆர். வன்னிமகன், கொழும்பு—06

உன் சினிமாப் பகுதியின் வண்ணம், பக்கவடிவமைப்பு, உள்ளடக்கங்கள் என எல்லாமே எம்மைப் படிக்கத் தூண்டுகின்றன. பேட்டி காணும் நடிகரின் விலாசத்தையும் சேர்த்தே பிரசுரித்தால் என்போன்ற சினிமா வாசகர்கள் இன்னும் சந்தோஷமடைவார்களே!

நிக்சன், புத்தூர்.

இளம் கவிஞர்களின் உணர்வு வெளிப்பாடுகளான 'காதல்—போர்—சமாதானம்' குறித்த கவிதைகள் கவிதைப் புனலை மென்மேலும் அழகுபடுத்துகின்றன. தமிழ் மக்களின் அவலவாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் சிறுகவிதைகள் 'சுடர் ஒளி'யின் வாசகர்களை இன்னொரு யுத்தத்திற்குத் தயார்படுத்துகிறதோ?

எஸ். மதுரா, நீர்கொழும்பு.

தமிழ் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட சுடர் ஒளி பத்திரிகைக்கு எனது வாழ்த்துக்கள்! வாரம் தவறாமல் உன்னைப் படித்து வருகிறேன். வன்னியில் அறிய முடியாத பல சம்பவங்களை உன் மூலமே படித்து அறியக்கூடியதாக உள்ளது. உனது சேவை மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

ஞா.ஞானம், கிளிநொச்சி.

'தோட்டங்களில் வெருளிகளுக்குச் சீருடை' என்னும் தலைப்பில் பிரசுரமாகியிருந்த செய்தியைப் படித்தவுடன் 'சுடர் ஒளி'யே உன்னைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. முத்தமிடும் ரோஜா இதழ்கள் தொடர்கதை வருடக் கணக்கில் தொடர்ந்து வரவேண்டும், அதுவே என் ஆசை!

எஸ். றகுந்தன், நேரியகுளம்.

வாசகர் இதயம் பேசுகிறது

காதலுக்கு வயதெல்லை கிடையாது இளைய தளபதி பிரபு சொல்கிறார்

இன்றைய தமிழ் சினிமா வாரிசுகளின் ஆட்சியாகி விட்டது. இவர்களுக்கு வழிகாட்டிய தலைமகன் பிரபு. கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலங்களாகத் திரையுலகில் ஹீரோவாகவே நடித்து வருகிறார் என்பதே சாதனையல்லவா?

பிரபு தந்த 'சின்னத்தம்பி'யை மறக்க முடியுமா? இப்போது பிரபுவின் கைகளில் 'மிட்டாமிராசு', 'சூப்பர் குடும்பம்', 'மாம்ஸ்' ஆகிய படங்கள் இருக்கிறது. பிரபு நடித்த 'மிடில் கிளாஸ் மாதவன்' படம் சமீபத்தில் வெளிவந்து நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. பட்ஜெட் பத்மநாபனுக்குப் பிறகு பிரபுவின் மார்க்கெட் மீண்டும் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கிறது என்றே சொல்லலாம்.

சரி இனி பிரபுவுடன் பேசுவோமா?

கே: 'பட்ஜெட் பத்மநாபன்' உங்களுக்கு வெற்றிப் பாதைக்கு வழி அமைத்துக் கொடுத்திருக்கிறது என்று சொல்லலாமா?

ப: ஆமாம். அத்துடன் 'பட்ஜெட்' நாயகன் என்ற பட்டப் பெயரும் போனஸாகக் கிடைத்துள்ளது.

கே: அதற்காக அதேபோன்ற கதைகளிலேயே தொடர்ந்து நடித்தால் மக்களுக்குச் சலித்து விடாதா?

ப: நீங்கள் கூறுவது சரி. ஒரே மாதிரிக் கதைகளை நான் தேர்ந்தெடுக்கப் போவதில்லை. அத்துடன் மக்களுக்கு எது பிடிக்கிறதோ அதைக் கொடுத்தால் தான் நடிகர்களும் தயாரிப்பாளர்களும் சந்தோஷமாக இருக்க முடியும்.

கே: அப்படியானால் உங்களின் படங்களிலும் கவர்ச்சிக் கட்டங்களைச் சேர்ப்பது ஏன்?

ப: நான் கவர்ச்சிக் கட்டங்களைச் சேர்ப்பதில்லை. அது தயாரிப்பாளர்களின் விருப்பம். இருந்தாலும் என் கருத்து என்னவென்றால் ஜனரஞ்சகமான படங்கள் வரவேற்பைப் பெற வேண்டுமென்றால் கதையும் தேவை. கவர்ச்சியும் (சதையும்) தேவை. ஆனால் முக்கியமாகக் கூறவேண்டியது என்னவென்றால் கவர்ச்சியில்லாமல் படம் ஓடினாலும் ஓடும். ஆனால் கதையில்லாமல் படம் ஓடுவது சந்தேகம்.

கே: உங்களின் உடல் எடை தமிழ் சினிமாவின் கதாநாயகர்களைப் பொறுத்த வரை அதிகம் தான். ஆனாலும் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

ப: என்னை வைத்துப் படமெடுப்பவர்கள் எனக்கேற்ற முறையில் நடன, சண்டைக் காட்சிகளை அமைப்பதனால் இதுவரை சமாளித்துவிட்டேன்.

கே: படத்தின் வெற்றி ஹீரோவில் மட்டுமே தங்கியுள்ளதா? அதனால்தான் ஹீரோக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ரஜினி படம், பிரபு படம், முரளி படம் என்று சொல்கிறார்களா?

ப: படத்தின் கதைகள் ஹீரோவைச் சுற்றிப் பின்னப்படுவதனால் இந்த இமேஜ் வட்டம் உருவானது. படத்தின் வெற்றி தோல்வி பணத்தளவில் தயாரிப்பாளரைப் பாதித்தாலும் பெயரளவில் ஹீரோவைத்தான் பாதிக்கிறது. படம் வெற்றியடைந்தாலும் வெற்றி அடையாமல் போனாலும் தயாரிப்பாளர் பெயரைச் சொல்ல மாட்டார்கள். பிரபு படம் சூப்பர் ஹிட், பிரபு படம் தோல்வி என்று தான் சொல்வார்கள்.

கே: என்னதான் சொன்னாலும் இன்னொரு 'சின்னத்தம்பி'யை உங்களால் தரமுடியவில்லையே?

ப: 'சின்னத்தம்பி' ஒருவன் தான். ஒரு 'சின்னத்தம்பி' வெற்றியடைந்தது என்பதற்காக அதற்குப் பிறகு வெளிவரும் அனைத்து படங்களையும் சின்னத்தம்பிகளாகத் தரமுடியுமா? அடுத்த படங்களை நாம் வேறுபட்ட கோணத்தில் பார்க்க வேண்டும்.

கே: நீங்கள் 'பிரதிக்ஷா'விற்கு சிபாரிசு செய்கிறீர்களாம். 'சூப்பர் குடும்பம்' படத்தில் அவர் நடிப்பது உங்களுடைய சிபாரிசினாலாம் தொடர்ந்து 'மாம்ஸ்' படத்திலும் அந்த சிபாரிசு தொடர்கிறதாமே. இதற்கென்ன சொல்கிறீர்கள்?

ப: ஒரு நடிகை நன்றாக நடித்தால் அடுத்த படத்திற்கு அவரை சிபாரிசு செய்வதில் எந்தத் தவறும் இல்லை.

கே: இளம் நடிகர்கள் எத்தனையோ பேர் திரையுலகிற்கு வந்து விட்டார்கள். ஆனால் நீங்கள் இன்னமும் கட்டிப் பிடித்து டூயட் பாடி நடிப்பது பற்றி...?

ப: காதலுக்கு வயதெல்லை கிடையாது. ஆனால் நான் ஒன்றும் காலேஜ் மாணவனாகி கதாநாயகியைக் கலாட்டா செய்ய வில்லையே. வயதுக்குத்தக்க வேடத்தில்தான் நடித்து வருகிறேன்.

கே: கொன்வென்ட் படிப்பு, நுனி நாக்கு ஆங்கிலம் என்று நாகரிகமாக வாழும் உங்களை, வேஷ்டி சட்டையுடன் அசல் கிராமத்தவராகவே காட்டுகிறார்களே!

ப: எல்லாம் நடிப்புத்தானே. அது தவிர, நாகரிகமான இளைஞனாகவும் சில படங்களில் நடித்திருக்கிறேன். நான் கிராமத்தவனாக நடித்த சில படங்கள் சக்கை போடு போட்டதனால், சென்டிமென்டாக கிராமத்தான் வேடம் அமைந்துவிட்டது என்று நினைக்கிறேன்.

கே: தமிழ் சினிமாவில் 'தமிழன்' என்று உங்களையும் விஜயகாந்த் ஸாரையும் சொல்கிறார்களே! ஏன்? வேறு மொழிப் படங்களில் நடிக்காமையா? ஏதும் விசேஷ காரணங்கள் உண்டா?

ப: அப்படி எதுவுமில்லை. மற்றமொழிப்படங்களில் நடிப்பதற்கு ஆர்வம் உண்டு.

— ஷாம்

நவரச நடிகரின் மறுபக்கம்

நவரச நாயகர் என்று பெயரெடுத்த நடிகர் பிரபல நடிகர் ஒருவரின் வாரிசு. இவருக்கு மீசை முளைக்காத வயதிலேயே சினிமாப் பிரவேசம் கிடைத்தது.

பாரதிராஜா என்று மேதிரக்னகயால் அறிமுகமாகும் சந்தர்ப்பம் கிடைத்ததாலோ என்னமோ இன்றுவரை திரையுலகில் தாங்கிப் பிடிக்கிறார்.

'அலைகள் ஓய்வதில்லை'யில் ஆரம்பித்து இப்போது நடித்துக் கொண்டிருக்கும் 'லவ்லி' வரை லவ்லி ஹீரோவாக நடிக்கும் வாய்ப்பை அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

துள்ளும் நடிப்பின் மூலம் ரசிகர் நெஞ்சில் நிலைத்து விட்ட நவரச நாயகனின் மனைவி முதலில் கிள்ளி எறிந்த 'ஸ்ரீ' நடிகை. அம்மணிக்கு நடிகனைவிட வயது அதிகம்தான் என்றாலும் காதல் கண்ணை மறைத்தது.

நடிகை ஆழமாகக் காதலித்தார். ஆனால் நடிகருக்கு நடிகைமேல் ஏற்பட்டது காதல் என்று சொல்வதைவிட அது ஒருவித ஈர்ப்பு என்றே அந்தக்கால கட்டத்தில் பரவலாகப் பேசிக் கொண்டார்கள். நவரச நடிகரிடம் தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தினார் 'ஸ்ரீ' நடிகை. நடிகர் மறுக்கவே நடிகை தற்கொலைக்கு முயற்சி செய்து பிறகு காப்பாற்றப்பட்டார். அத்தோடு ப்ரியமான 'ஸ்ரீ' நடிகைக்கும் நவரச நடிகருக்கு மிடையே இருந்த உறவு முறிந்தது. நடிகர் தன்வழி பயணப் பட்டார். 'சோலைக்குயில்' என்றொரு படத்தில் நடிகர் நடித்தார். கூட நடித்த புதுமுக நடிகையிடம் உள்ளத்தைப் பறிகொடுத்து அவரையே வாழ்க்கைத் துணைவியுமாக்கிக் கொண்டார். சில வருடங்கள் குடும்ப வாழ்க்கையை சுமுகமாக நடத்தினார் நடிகர். ஆனால் மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக தனது துணைவியின் தங்கையை மணஞ் செய்து கொண்டார். இடையில் காணாமல் போயிருந்த நவரச நடிகர் மீண்டும் 'லவ்லி'யில் மீள் பிரவேசம் செய்யப்போகிறார். இனியாவது ஒழுங்காக இருப்பாரா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

லைலாவின் "டேக் இட் ஈஸி" பாலிஸி

அண்மையில் 'தில்' ஷூட்டிங்கில் அகப்பட்ட லைலாவிடம், எதிர்பார்த்த அளவுக்கு 'தீனா' அமையவில்லையே என்று கேட்டதும், ''வெற்றி தோல்வி நிரந்தரமில்லாதது. மக்களின் எதிர்பார்ப்பு எதுவென்று உடனடியாகத் தீர்மானிக்க முடியாது.

என்னைப் பொறுத்தவரை நான் வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படுபவள் அல்ல. டேக் இட் ஈஸி பாலிஸி உடையவள். அதனால் எப்போதுமே கவலைப்படுவதில்லை என்கிறார்.

ரோஜா—பிரபு
படம்—'மிட்டாமிராசு'

மீனா நாயகியாக முன்னணி நட்சத்திரங்கள் எல்லோருடனும் இணைந்து நடித்தவர். சூப்பர் ஸ்டாருடனும் பல படங்களில் இணைந்து நடித்து விட்டவர். ஆனாலும் விஜய்யுடன் இணைந்து நடிக்கவில்லை.

இது ஒரு குறையாகவே இருவருக்கும் இருந்து வந்தது. விஜய் ஒரு பேட்டியில் தனக்குப்பிடித்த நடிகை மீனா எனவும் அவருடன் இணைந்து நடிக்க விரும்புவதாகவும் வெளிப்படையாகத்தெரிவித்திருந்தார்.

அதே போன்று மீனாவும் எல்லோருடனும் இணைந்து நடித்தாகி விட்டது. விஜய்யோடு நடிக்கத் தான் இன்னும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்று கூறியிருந்தார். எப்படி முயற்சி செய்தும் இணைய முடியாத மீனா—விஜய் இப்போது இசை அல்பம் மூலம் இணைய விருக்கிறார்கள். விஜய்யும் மீனாவும் சொந்தக்குரலில் பாடி ஆடும் இந்த இசை அல்பம் விஜய் — மீனா ரசிகர்களிடையே பலத்த வரவேற்பைப்பெறும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

மீனா—விஜய் அல்பம்

அம்மா ஆட்சியில் சுவாசம்

பிரமாண்டத் தயாரிப்பாளர் குஞ்சுமோன் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தீவிர ரசிகர். தி.மு.க ஆட்சியில் காணாமல் போயிருந்தார். இப்போது அம்மா ஆட்சிக்கு வந்ததனால் சந்தோஷத்தில் மிதக்கிறார். நீண்ட நாட்களுக்குப் பின் தயாரித்து வரும் 'சுவாசம்' படவிளம்பரத்திலும் 'அம்மாவின் ஆசிர்வாதங்களுடன் மீண்டும் குஞ்சுமோன்' என்று விளம்பரப்படுத்தி வருகிறார். அம்மாவின் ஆட்சியிலாவது 'சுவாசம்' நல்லபடியாக மூச்சுவிடும் என்று நம்புகிறார்.

ப்ரியங்கா நிரிவேதி —எபி

படம்—'சுவாசம்'

காமெடிக்கலாட்டா

'கிருஷ்ணா கிருஷ்ணா' படத்தில் எஸ்.வி. சேகர், சுகன்யா, விசித்திரா இணைந்து நடித்து வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல, நீண்ட இடை வெளிக்குப் பின்னர் எஸ்.வி.சேகர் — விசு கூட்டணி 'சிஹாமணி ரமாமணி' படத்தில் இணைந்திருக்கிறார்கள்.

படப்பிடிப்பில் எஸ்.வி.சேகர் செய்யும் காமெடிக் கலாட்டாக்களைத் தாங்க முடியவில்லையாம்.

தேவயானி திருமணம் முடித்து செட்டிலாகி விட்டார். அவர் தொடர்ந்து நடிப்பதாகச் சொன்னாலும் சாதாரண ஹீரோக்கள் அவருடன் ஜோடி சேரத்தயங்குவார்கள். அப்படியே ஜோடி சேர்ந்தாலும் அவருக்கேற்ற கதையைத் தேடவேண்டும்.

அடுத்து சிம்ரன். அவரை ரசிகர்கள் கனவுக்கன்னியாகப் போடலாம் என்றால் ராஜ்ய சுந்தரம் குறுக்கே வருவார்!

மீதி இருப்பது ஜோதிகா மட்டுமே! அவருக்கும் நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது. இன்னும்

நிருபராகிறார் விஜய்

'உதயா' படத்தில் பத்திரிகை நிருபராக நடிக்கிறார் இளையதளபதி விஜய். சமூக நலனில் அக்கறை கொண்ட, தாய் நாட்டை நேசிக்கும் புரட்சிகரமான பாத்திரமாம்.

''முகத் தோற்றத்திலும் நடை உடை ஆக்ஷனிலும் புதிய ஒரு பரிமாணம் இதன் மூலம் விஜய்க்குக் கிடைக்க விருக்கிறது'' என்று கூறுகிறார் படத்தின் தயாரிப்பாளர் நடராஜன்.

ஹொலிவுட்டில் ரவீனா

ஆளவந்தானுக்காகத் தன்னை அர்ப்பணித்து நடித்தவர் ரவீனா. தேசிய விருது கிடைத்த கையோடு ஆளவந்தானில் பிஸியாகி விட்டதனால் ஆங்கிலப் படத்தில் நடிப்பதற்காக வந்த வாய்ப்பைக்கூடத் தவிர்த்தார். இப்போது மீண்டும் ரவீனாவிற்கு 'டிரீம் காட்சர்ஸ்' என்ற படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்திருக்கிறது.

புதிதாக வந்த பூக்கள்

சிறிது காலங்களில் அவரும் மும்பைக்கு விமானமேறிவிடுவார். இந்த இடத்தின் நிரப்பு கோட்டம்பாக்கத்திற்கு வந்திருக்கும் புதிய பூக்களைப் பார்ப்போமா?

பூஜிதா— அமைதியான நீரோடை போன்றமுகம். எல்லா உணர்வுகளையும் எளிதாகப் பிரதிபலிக்கக்கூடிய முக அமைப்பு. சொல்லத் துடிக்கும் உதடுகள் போன்றவற்றைத் தனது தேனமாகக் கொண்டு களமிறங்கியிருக்கிறார்.

மௌனிகா—'என் ஆசை மச்சான்' இல் சின்ன வயது ரேவதியாகி 'கருப்பு நிலா நீதான் கலங்குவதேன்' என்று நடித்த குழந்தை நட்சத்திரம் இப்போது 'லவ்சேனல்' மூலம் கதா நாயகியாக அறிமுகமாகிறாள்.

தகுதி மறைவில்

டான்ஸ் மாஸ்டரையும் காதலியையும் போட்டு 'ஐலவ்யூடா' படத்தை எடுத்து வரும் தயாரிப்பாளர் இப்போது ஏனடா சுந்தரத்தை ஹீரோவாகப்போட்டேன் என்று புலம்புகிறாராம். ஷூட்டிங்கின் இடையே நிஜக்காதல் ஜோடி எஸ்கேப்பாகி விடுகிறதாம். காட்சியைப் படமாக்குவதற்கு இவர்களைத் தேடி அதிரடிப்படை லெவலில் ஆட்களை அனுப்ப வேண்டியிருக்கிறதாம்.

**

'ஈரநிலா' படத்தில் இணைக் கதாநாயகியாக நடித்து வரும் இங்கி பிங்கி நடிகை சின்ன வயதில் சரியான சண்டைக் கோழியாம். பேட்டியொன்றில் இதனை அவர் கூறியபோது கூட்டத்தில் இருந்தவர் ஒருவர் ஹீரோவைக் குடுமியில் பிடிக்காமல் இருந்தால் சரிதான் என்று நடிகையின் காது படவே கூறினாராம். பக்கத்திலிருந்தவரிடம் மெரழி பெயர்த்துக்கேட்ட நடிகை அர்த்தம் புரிந்ததும் ஹீரோவைப்பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்தாராம்.

**

ஜோதிமயமான கடைக்குட்டி மகளைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வரும் தாய்க்குலம்.. அப்பிளும் கையுமாகத் திரிகிறார். படப்பிடிப்பின் இடைவெளியில் அப்பிள் பழங்களை நறுக்கிக் கொடுத்துக் கொண்டே மகளைக் கண்காணிப்பாராம்..

ஜோதிகா

திரையுலக மார்க் கண்டேய நடிகரின் ஒரிசு தனித்து நடித்த எந்தப்படமும் பெயர் சொன்ன தில்லை. இப்போது நடித்து வரும் 'நந்தா' வை என்னதான் பெரிதாக எதிர்பார்த்தாலும் விருதுடன் நிறுத்தி விடுமோ என்று பயந்துள்ளனராம்.

அசத்தும் அண்ணாச்சி

'ஏ', 'ஓம்' என்று தனது ஒவ்வொரு படத்திற்கும் ஒற்றைச் சொல்லில் வித்தியாசமாக பெயர் வைக்கும் வழக்கத்தைக் கொண்டவர் கன்னட நடிகர் உபேந்திரா.

இப்போது இவர் பிரபுதேவாவுடன் இணைந்து நடிக்கும் தண்ணீர் பிரச்சினையை மையமாகக் கொண்ட படத்திற்கு 'எச்டூ ஓ' என்று பெயர் வைத்திருக்கிறார்.

முந்தாஜ் முன்னணியில் ராதிகா செளத்ரி

ராதிகா செளத்ரி

முமதாஜ்

திறமையாக நடிப்பதில் போட்டி போட்டால் அந்தப் போட்டி ஆரோக்கியமானதாக இருக்கும். ஆனால் ராதிகா செளத்ரி — முமதாஜ் இருவரிற்குமிடையே இருந்த கவர்ச்சிப் போட்டியில் முன்னணியில் இருப்பவர் முமதாஜ். ராதிகா செளத்ரியோ கவர்ச்சியாக நடித்தும் ஒரு நிலைக்கு வரமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்.

அறுபோது ராம நாராயணனின் இயக்கத்தில் உருவாகும் 'ஆக்கிலக்கபேபி' யில் வளர்ந்து வரும் நடிகர் உதயாவின் ஜோடியாக நடிக்கிறார். மீண்டும் வேட்டையில் நடித்து தான் மீண்டும் திரையுலகில் நின்று பிடிக்க வேண்டும் என்ற நினைவுக்கு இறங்கி வந்துவிட்டார். ஆனால் தனிப்பட்ட ரீதியில் மிகவும் நொந்து போயுள்ளாராம். முன்னாள் ஜாலிக்காகக் குடித்தவர் இப்போது கவலையை மறக்கக் குடிக்கிறாராம். பேத்தாக்குறைக்கு அடிக்கடி மகளைப் பார்க்க சென்னைக்கு வரும் தாய்க்குலம் மகளின் நிலைமை அறிந்து ''என்ன குறை என் மகளிடம்'' என்று எதிர்ப்படுவோரிடம் எல்லாம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாராம். அறிமுகமான 'டைம்' படத்தில் அசத்திய அம்மணியின், இப்போதைய நிலையை எண்ணி அறிமுகப்படுத்திய தயாரிப்பாளர் கலங்கிப்படுகிறாராம்.

அபிராமியின் அபார நடிப்பு

சமீபத்தில் வெளிவந்த 'மிடில் கிளாஸ் மாதவன்' படத்தில் அபிராமி பிரமாதமாக நடித்திருக்கிறார். நடுத்தரக் குடும்பத்து மருமகள் பாத்திரத்தை கனகச்சிதமாக ஏற்று நடித்திருந்தார்.

தியேட்டரில் அபிராமியின் நடிப்பைப் பரர்த்த தாய்க்குலங்கள் ''இந்தப் பொண்ணு அபாரமா நடிச்சிருக்கே என்று வாய்விட்டுப் பாராட்டினார்களாம்.

முத்தமிடும் ரோஜா இதழ்கள்

இதழ் — 6

மு.சிவநேசன்



இதுவரை.....

பஸ்கொள்ளையில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்குகிறான் பொலிஸ் அதிகாரியான வில்லியம்.

அலுவலகத்திலிருந்து வீடுதிரும்பும் அவனது மனைவி சுமரா மகனை அழைக்க காப்பகத்துடன் தொடர்பு கொள்கிறாள். மகனை ஏற்கனவே வீட்டுக்கு அனுப்பிவிட்டதாக காப்பகத்தார் தெரிவிக்கின்றனர். மகன் ருஷன் கடத்தப்பட்டது சுமராவுக்குத் தெரியவருகிறது.

இனி...

அவனது அலறல் காரின் 'ஏஸீ' அடைப்புகளுக்குள் அடங்கிக் கொண்டது. கடத்தியவர்கள் அவனிடம் ஏதும் பேசவில்லை. அவர்களைப் பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. ஒருவன் கறுப்புத் துணியை நீட்டுவது தெரிந்தது. அவனது கண்கள் கட்டப்பட்டன. ஏக்கம் நெஞ்சைப் பிளந்தது. சற்றுத் தூரம் செல்லவும் அவன் மயங்கிப் போனான்.

விழித்தபோது எங்கோ ஒரு புதிய இடத்தில் இருப்பது தெரியவந்தது. அது ஒரு பெரிய அதி நவீன பங்களா. பார்த்த இடமெல்லாம் பளிங்குக் கற்களே ஜொலித்தன. அவனை ஏற்றிவந்த கார் ஹோலுக்குள்ளேயே நின்றுகொண்டிருந்தது. அதன் இலக்கத் தகடுகளை ஒருவன் மாற்றிக் கொண்டிருந்தான்.

ஓர் இளம் பெண் அவனோடு மிகவும் அன்பாகப் பழகினாள். என்றாலும் அவனைத் திருப்திப்படுத்த அவர்களால் இயலவில்லை.

அவனை எங்கேயோ பார்த்த ஞாபகமும் அவனுக்கு இருந்தது. யோசித்தபோது தகப்பனின் கணினியில் அவளது படத்தையும் வீடியோவையும் கண்டது நினைவிற்கு வந்தது. அந்தக் கணினியில் பெரும்பாலும் சந்தேகத்துக்கு இடமான வர்களின் படங்கள் தான் இருக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும். யோசித்ததும் அவனது அச்சம் அதிகரித்தது.

அடிக்கடி குழந்தைகள் கடத்தப்படுவதும் கொல்லப்படுவது மான சம்பவங்கள் பற்றியெல்லாம் அவன் கேள்விப்பட்டிருக் கிறான். வீட்டில் அவனது பெற்றோர் அத்தகைய கேஸ்கள் பற்றியெல்லாம் அலசுவதை அறிந்திருந்தான். நினைக்க உள்ளூரவியர்த்தது. கடத்தியவர்கள் இருவரையும் அவன் பின்னர் காணவில்லை.

அவனது சந்தோஷம் இப்படிக் கலக்கமாக மாறியதும் அதைத் தாங்கும் சக்தியோ சமாளிக்கும் திறனோ சற்றும் இல்லாமல் துவண்டு போய்விட்டான். அந்த நஞ்சுப் பெண் இனிக்க இனிக்கக் கதைப்பதெல்லாம் நடிப்பு என்று மட்டும் விளங்கியது.

''வீட்டுக்குப் போனதும் அப்பாவின் கணினியில் தேடி இவளைக் கண்டுபிடித்துக் கொடுப்பதுதான் முதல் வேலை'' என நினைத்துக் கொண்டான்.

ஒரு வாய்கூட அவன் சாப்பிடவில்லை. அதைப் பற்றி யெல்லாம் அவர்கள் அக்கறைப்படவும் இல்லை. அது அவனது துன்பத்தை மேலும் அதிகரித்தது. தாகம் எடுத்தது. ஆனால் அவர்களிடம் கேட்டுத் தண்ணீர் குடிக்கக்கூட மனம் வரவில்லை.

அவள் கதவைப் பூட்டிக் கொண்டு வெளியே போனதும் அவன் தொலைபேசியை இயக்கிப் பார்த்தான். அதில் டயல்ரோன் கிடைக்க வில்லை. எனவே வீட்டோடு தொடர்பு கொள்ளவும் இயலவில்லை. மறுநாள் மீண்டும் வந்தபோது அவனைச் சாப்பிடும்படி அவள் வற்புறுத்தினாள். ''சாப்பிடா விட்டால் ஊசிமூலம்தான் ஏற்றவேண்டி ஏற்படும்'' என்றும் மிரட்டினாள். ஊசி என்றால் அவனுக்குப் பயம்தான். ஆனால் இப்பொழுது அதெல்லாம் பெரிய பிரச்சினையாகப்படவில்லை.

மாலைச் செய்திக்காக அவள் தொலைக்காட்சியை இயக்கிவிட்டாள். அதில் அவன் காணாமற் போய்விட்ட அறிவிப்பு சிரிக்கின்ற அவனது படத்துடன் ஒளிபரப்பானது. அவன் தனது பெற்றோருடன் கூடியிருக்கும் குடும்பப் படம் ஒன்றும் காட்டப்பட்டது. 'இனி அவர்களைக் காண இயலுமா?' என நினைக்கவே அந்தப் பிஞ்சு மனத்தின் கலக்கம் உச்சம் கண்டது.

அவனது கடத்தலை அந்த பஸ் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தி பொலிஸார் தகவல்களை வெளியிட்டு இருந்தனர். அதைப் பார்த்ததும் அந்தப் பெண் கலகலவென்று சிரித்தாள்.

அவளது சிரிப்பில் அவனது அச்சமும் எரிச்சலும் இரட்டிப்பாகின. தான் இல்லாதபோது அவன் தொலைபேசியை இயக்க முயற்சித்தது பற்றி அவள் விசாரித்தாள். ருஷன் எதுவுமே பேசவில்லை. இவனது மௌனம் அவளுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

''உனக்கு வீட்டுக்குப் போகவேண்டும் என்ற ஆசை இருந்தால் அல்லது வீட்டோடு தொலைபேசியில் கதைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் எங்களோடு ஒத்துழைக்கத்தான் வேண்டும். நாங்கள் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டும். இங்கே கலகலப்பாகப் பழகவேண்டும். எதற்கும் அடம்பிடிக்கக்கூடாது'' என்று மிரட்டினாள்.

வரவர நிலைமை மோசமடைவதை ருஷன் உணர்ந்துகொண்டான். பசிவேறு வயிற்றைக் கிள்ளியது. சாட்டுக்கு கொஞ்சம் சாப்பிட்டான். அதிகம் சாப்பிட இயலவில்லை. சாப்பாட்டை வாயருகே கொண்டு போகும்போது கண்கள் குளமாகின.

அவளுக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்புக்கள் வந்தவண்ணம் இருந்தன. அவனைப் பற்றியே அவர்கள் விசாரிப்பதும் தெரிந்தது. ஆனால் நடக்கப்போவதை அவனால் ஊகிக்க இயலவில்லை. அவன் இருந்த இடத்திலோ இரவு பகல் சரிவரப் புரியவில்லை. வெளியே பார்க்கும் வசதிகள் இல்லை. அந்த ஹோலிற்கு வெளியே செல்ல அவன் அனுமதிக்கப்படவில்லை.

அவன் கடத்தி வரப்பட்டு இரண்டு மூன்று நாட்கள் ஆகியிருக்கும். இரண்டுபேர் அங்கு வந்திருந்தார்கள்.

''இவ்வளவு நாளும் எங்கே தொலைந்தீர்கள்? நான் உங்களைப் பார்த்துப் பார்த்துக் களைத்துவிட்டேன். இந்தச் சிறையில் தனிமையில் நான் தவிக்கிறேன்'' அவள் கதைத்தவாறே அவர்களை வரவேற்றாள்.

''ஏன் கம்பனிக்கு பையன் இருக்கிறானே, அவன் என்னவாம்?'' என்றவாறே அவளது கன்னத்தில் கிள்ளினான் உயரமான ஆள்.

அவள் பியர் போத்தல்களை பிரிஜ்ஜிலிருந்து எடுத்து மேசையில் அடுக்கினாள். மூவரும் மேசையைச் சுற்றி அமர்ந்துகொண்டனர். அவர்களது சம்பாஷணையில் அவனைப்பற்றி எதுவுமே இருக்கவில்லை. 'ஏதாவது விடியோ அல்லது வில்லங்கமோ வரலாம்' என எதிர்பார்த்தவனுக்குச் சப்பென்று இருந்தது.

அவர்கள் இரண்டுபேரும் அவனை அங்கே இங்கே தொட்டுத் தொட்டுக் கதைத்தனர். நேரம் ஆக ஆக அவர்களின் போக்குமோசமாகி ருஷனுக்கு எரிச்சல் ஊட்டியது. அவன் கண்டிராத காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருந்தன. அவன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். அவனைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் நடந்து கொண்டார்கள். அவன் உறங்கிப் போனான்.

* * *

சுமரா பதறியபடி ரிசீவரைக் கீழே வைத்தாள். செலுலார் தொலைபேசியில் வில்லியமைத் தொடர்புகொள்ள முயன்றாள். அது நிறுத்தப்பட்டு இருந்தது. முக்கியமான அலுவல்களில் இருக்கும்போதுதான் அவன் அதனை நிறுத்தி வைப்பது வழமை.

எனவே அடுத்து அலுவலக 'லைனில்' வில்லியமைத் தொடர்புகொண்டாள். ''அவரை இப்பொழுது தொடர்பு கொள்ள இயலாது. முக்கியமான கேஸ் ஒன்று தொடர்பாக பொலிஸ் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றில் அவர் ஈடுபட்டு இருக்கிறார்'' என்று தெரிவித்தார்கள்.

விடயத்தைச் சொல்லவும் முடியாமல் தவிர்க்கவும் இயலாமல் அவள் தவித்தாள். மறுமுனையில் இருந்த ஒப்பரேட்டர் இவனது தவிப்பைப் புரிந்துகொண்டான்.

''வில்லியத்துக்கு ஏதாவது தகவல் தெரிவிக்க வேண்டுமா?'' எனக் கேட்டான்.

''இயன்றளவு விரைவில் என்னோடு தொடர்பு கொள்ளும் படி கூறுங்கள்'' என்று மட்டும் அவள் தெரிவித்தாள்.

சுமராவின் தலைமீது வில்லியமின் கடமைகளைப் பாதிப்பதாக ஏற்கனவே ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. தனது கடமைக்குப் புறம்பாக துப்பறியத் துடிக்கும் வில்லியமின் நோக்கங்களையும் பொலிஸ் திணைக் களம் வரவேற்பதில்லை. இதனால் அவனது கடமைகள் பக்கச்சார்பானவை ஆகிவிடும் என்கின்ற கருத்தும் நிலவியது.

ருஷனை உயிருடன் மீட்டாக வேண்டும். எனவே வில்லியமுடன் கலந்து பேசாமல் பொலிஸுக்குத் தகவல் தர அவளால் இயலாது. ''வில்லியமின் போக்கு இந்த விடயத்தில் எதுவாக இருக்குமோ?'' எனவும் அவள் கலங்கினாள்.

''அவன் பொலிஸ்காரனாகவே செயற்பட்டால் பிள்ளையின் நிலைமை மேலும் மோசமடையக் கூடும்'' என்ற கலக்கமும் பிறந்தது.

கடிகாரத்தின் முள் அசையா மனமின்றி அசைந்து கொண்டிருந்தது. சுமரா பொறுமை இழந்தாள். மயக்கம் வரும் போல் இருந்தது. உடலெல்லாம் வெடவெடவென நடுங்கியது. மீண்டும் வில்லியமோடு தொடர்பு கொள்ள முயன்றாள். அவனது செல்போன் வேலைசெய்ய மறுத்தது.

எனவே மீண்டும் அலுவலக தொலைபேசியில் விசாரித்தாள். வில்லியம் பற்றி எந்தத் தகவலையும் அவர்கள் கொடுக்கவில்லை. ''வில்லியம் எங்கிருக்கிறார் என்பது பற்றி ஏதும் தெரியவில்லை'' என்ற திட்டமிட்ட பதிலே பட்டென்று வந்தது.

— தொடரும்

சுடர் ஒளி தொடர் கதை

பார்த்து கிரகித்து கற்கும் இணையக் கல்வி முறை

இன்றைய விஞ்ஞான உலகில் இணையம் என்பது தனியே தொழில் நுட்பம் சார்ந்த ஒரு புதிய வரவு அல்ல. நமது நாளாந்த வாழ்க்கையின் அத்தனை படிகளையும் அது முழுமையாக மாற்றி விட்டது.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் இணையம் உலகிலுள்ள சகல விடயங்களையும் தான் உள்வாங்கி வீட்டுக்குள்ளேயே எமக்குப் பரிமாறுகிறது.

கணினிமயப்படுத்தப்பட்ட சமூகத்தை மேலும் ஆரோக்கியப் படுத்துவதில் இணையம் பெரும் பங்கு வகிக்கிறது. நாடுகளின் எல்லைகளை எல்லாம் கடந்து விழிப்புணர்வு, மனித நேயம் மிக்க சமுதாயக் கட்டமைப்பை வலுவாக்கிக் கொள்கிறது.

இன்றைய கல்விக்கட்டத்தில் இணையத்தில் இடம்பெறும் தகவல் பரிமாற்றமும், மின் வணிகமும் பேசப்படும் அளவுக்கு நமக்கு வசப்படவில்லை.

ஆனால், கல்வி — வேலைவாய்ப்புப் போன்றவற்றில் எமது சமூகம் கணிசமான உறுதிநிலையை எட்டியுள்ளது.

தொலைத்தொடர்பு, தகவல் பரிமாற்றம், வர்த்தகப் பரிமாற்றம் என்ற பகைட்டங்களையும் தாண்டி — கல்வி என்ற ஸ்தாயியை நோக்கிச் செல்கிறது. கல்விச் சமூகத்துக்குக் கற்றலும் கற்பித்தலும் ஒரு எளிய வகைக்குள் அடக்கப்பட்டுவிட்டன. வெளிநாடுகளில் இ—கல்வி என்ற இன்ரநெட் கூலிங் விரைந்து பரவுகிறது.

இ—கல்வி என்பது, சாதாரணவகுப்பறைக் கல்வி, கணினிக்குள் புகுத்தப்படுவதே. கணினி துணைக்கருவி களைக் கொண்டு இணையத்தின் மூலம் கல்வி பயில்வது.

பார்த்து பயில்வதைவிடக் கேட்டுக் கிரகித்துக் கற்றலே கல்வி என்ற கட்டத்தைத் தாண்டி பார்த்துக் கிரகித்துக் கற்கும் புதிய கல்வித் திட்டம். இதனை ஒன் லைன் லேர்னிங் (Online Learning) எனவும் குறிப்பிடப்படுகிறது.

கரும்பலகை, புத்தகம், ஆசிரியர் என்று ஒரு குறுகிய கல்வி வட்டத்துக்குள்ளிருந்து வெளிவந்து இன்னறைகல்வித் திட்டத்தை எட்டிப் பிடித்து முன்னேற வேண்டிய கட்டாயம் மாணவர்களுக்கு.

இதில் என்ன பெரிய பிரச்சினை என்றால், இந்த இ—கல்வி பாடமுறைமை நடைமுறையில் இன்னும் அறிமுகமாகவில்லை என்பதுதான்.

நடைமுறையிலுள்ள தமிழ்மொழி மூல பாடத்திட்டத் துக்கு இ—கல்வி இடம் கொடுக்குமானால் அதில் ஒரு புரட்சி மூலமான எழுச்சி காணப்படலாம். டொட் கொம் என்று ஆர்ப்பரிக்கும் கணினி வல்லுனர்கள் இதற்கு ஒரு வழி சமைப்பார்களா?

ஜப்பானின் இயந்திர மனிதன்

பதினைந்து வருட அயராத ஆய்வின் பின்னர் ஜப்பானின் ஹொண்டா HONDA நிறுவனம் இயந்திரமனிதன் ஒருவனை வடிவமைத்துள்ளது.

இவன் மனிதர்களைப் போல் இரு கால்களால் நடக்கவும் பேசிப் பழகவும் கூடிய திறன் கொண்டவன்.

இவனா பெயர் அசிமோ. இந்த இயந்திர மனிதன் மேலேறி நடக்க வல்லவன்.

தற்சமயம் இந்த இயந்திரமனிதனை சந்தைக்கு அனுப்பும் நோக்கம் ஹொண்டா நிறுவனத்துக்கு இல்லை. எனினும் என்றாவது ஒரு நாள் அன்றாட வீட்டு வேலைகளுக்கு உற்ற தோழனாக அசிமோ விளங்குவான்.

மதுவில் மயங்கும் ரஷ்ய மாதுக்கள்

ரஷ்ய பெண்மணிகளில் பெரும்பாலானவர்கள் குடிகாரர்களாகவே இருக்கிறார்கள். ரஷ்யாவில் கடந்த ஆண்டு மட்டும் இருபதாயிரம் பேர் போதைப் பழக்கத்தால் தமது உயிரைப் பறிகொடுத்துள்ளார்கள்.

1999ல் இவ்வாறு இறந்தவர்களைவிட இந்தத் தொகை 42 சதவீதம் அதிகமானது ஆகும்.

தொடரும் இந்த விபரீதம் ரஷ்ய அரசைப் பெரும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

ரஷ்யாவில் இயங்குகின்ற பெண்கள் அமைப்புக்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

வெறியன்

அது இங்கிலாந்தின் ஒரு மலைப்பிரதேசம். நேரம் இரவு ஒன்பது மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த ரம்மியமான மலைப்பிரதேசத்தில் தமது 'மொறிஸ் மைனர்' காரில் உல்லாசமாக உலாவந்து கொண்டிருந்தது ஓர் இளம் ஜோடி. அண்மையில்தான் அவர்கள் திருமணமானார்கள். தேனிலவைக் களிப்பதற்காக அந்த மலைப் பகுதிக்கு வந்திருந்தார்கள்.

மைக்கேல் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான். அவனது மனைவி ஸ்ரோறி இனிய குரலில் ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருந்தாள். காதல் நினைவுகளில் சிறகடித்தவாறு அந்த மலைப்பகுதியைச் சுற்றி வந்து கொண்டிருந்தவர்களது உல்லாசம் எதிரே தோன்றிய ஒரு மனிதனால் சட்டென்று தடைப்பட்டது.

முகத்தின் முக்கால்வாசிப் பகுதியை முக மூடியால் மறைத்திருந்த அந்த மனிதனது கையில் துப்பாக்கி ஒன்று மின்னிக் கொண்டிருந்தது. காரின் வழியில் குறுக்கே நின்று கொண்டிருந்த அவன் காரை நிறுத்துமாறு சைகை செய்தான். பயத்தில் உறைந்துபோன மைக்கேல் பிறேக்கை பலம் கொண்ட மட்டும் அழுத்தினான்.

கார் கிறீ.... றீச் என்ற சத்தத்துடன் நின்றது. நெருங்கி வந்தான் அவன். காரின் ஜன்னல் வழியே நீண்ட அவனது துப்பாக்கி மைக்கேலின் நெற்றியில் பொதிந்தது.

''நான் ஒரு கிரிமினல். இந்த இடத்திலிருந்து உடடினயாக வேறு ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டும். அதற்கு ஒத்துழைப்புத் தந்தீர்களானால் என்னால் உங்களுக்கு ஒரு தீங்கும் நேராது'' கர்ண கடூரமாக அவனது வாயிலிருந்து வார்த்தைகள் தெறித்தன.

காரின் பின்புற ஆசனத்தில் ஸ்ரோறிக்கு அருகில் அமர்ந்து கொண்டான் அவன். ஸ்ரோறி பயத்தில் வெலவெலத்துப் போனாள். அவளது அச்சத்தைப் பார்த்த அந்த ஆசாமி பெரிதாக நகைத்தான். அவனது நகைப்பு பிசாசின் அட்டகாசச் சிரிப்புப் போல இருந்தது.

மைக்கேலின் பிடரியில் அவனது துப்பாக்கி அழுத்திக் கொண்டிருந்தது. அந்த மனிதனின் உத்தரவுகளுக்கு அடிபணிவதைத் தவிர அவனுக்கு வேறு வழியிருக்கவில்லை. 'ஏதாவது வாய்ப்புக் கிடைத்தால் ஆசாமியை மடக்கி விடலாம்' என்று நினைத்தான் மைக்கேல்.

துப்பாக்கி முனையிலேயே தான் கூறும் இடங்களுக்கெல்லாம் காரைச் செலுத்தச் சொன்னான் அந்த மனிதன். சில இடங்களில் உணவுப் பொருள்களையும் மதுபானங்களையும் வாங்கிக் கொண்டு வரும்படியும் மைக்கேலை ஏவினான். அந்தச் சந்தர்ப்பங்களில் அவனது துப்பாக்கி ஸ்ரோறியைக் குறிவைத்த வண்ணம் இருந்தது.

'சிறிது சந்தேகம் வந்தாலும் ஸ்ரோறி பலியாகி விடுவாள்' என்ற பயம் மைக்கேலை ஆட்கொண்டதால் அவன் அதிரடிச் செயல்களில் இறங்க முற்படவில்லை.

''நகருக்கு வெளியே காரைச் செலுத்து'' அந்த மனிதனின் வாயிலிருந்து அடுத்த உத்தரவு பிறந்தது.

நகருக்கு வெளியே காரைக் கொண்டுவந்து சேர்த்தபோது பின்புறம் ஸ்ரோறி முனகுவது மைக்கேலுக்குக் கேட்டது. தனது பிடரியைத் தொட்டுக் கொண்டிருந்த துப்பாக்கியும் இப்போது அந்த இடத்தில் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட மைக்கேல் மெதுவாகத் திரும்பினான்.

அங்கே ஸ்ரோறியை முத்தமிட முனைந்து கொண்டிருந்தான் அந்த மனிதன். அதைப்பார்த்த மைக்கேலுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அருகிலிருந்த பயணப்பையை எடுத்து அந்த ஆசாமியைத் தாக்கத் தொடங்கினான்.

விளைவு விபரீதமானது. அந்தக் கயவனின் துப்பாக்கி சரமாரியாக குண்டுகளைக் கக்கியது. நான்கு குண்டுகளைத் தலையில் ஏந்திக் கொண்ட மைக்கேல் சுருண்டு விழுந்தான். காரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நிறுத்தினான் அந்த மர்ம மனிதன்.

ஸ்ரோறி ஓலமிட்டு அழுதாள். ''அவரைச் சுட்டுவிட்டாயே படுபாதகா...!''

''நான் என்ன செய்ய? அவன்தான் என்னை முதலில் தாக்கினான்...''

''அவரை உடனே ஒரு டாக்டரிடம் கொண்டு போகவேண்டும் தயவு செய்து கருணை காட்டு...''

அவனது காலைப் பிடித்துக் கொண்டு கதறினாள் ஸ்ரோறி.

பதிலாக அவனது வாயிலிருந்து பயங்கரமான சிரிப்புத்தான் வந்தது.

காரின் முன் இருக்கைக்கு வந்த அவன் உயிர் பிரியும் தறுவாயில் இருந்த மைக்கேலை இழுத்து வெளியே போட்டுவிட்டு காரைச் செலுத்த ஆரம்பித்தான். அலறித் துடித்த ஸ்ரோறியைத் துப்பாக்கியால் தாக்கினான்.

''அடம்பிடித்தாயானால் உனக்கும் இதே கதிதான்.''

நகருக்கு வெளியே வெகு தொலைவுக்கு வந்து சேர்ந்ததும் காரை நிறுத்தி விட்டுப் பின் இருக்கைக்கு வந்தான். ஸ்ரோறி பயத்தில் நடு நடுங்கினாள். அவளது ஆடைகளைக் கிழித்தெறிந்தான். அவளைப் பார்த்து ''என்னை முத்தமிடு'' என்று கூறி இழித்தான்.

* * *

மறுநாள் காலையில் தற்செயலாக அப்பகுதிக்கு வந்த வழிப்போக்கன் ஒருவன் ஆடை எதுவும் இன்றி துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மயங்கிக் கிடந்த ஸ்ரோறியைக் கண்டான். உடனடியாக அவன் பொலிஸாருக்கு அறிவித்தான். அம்புலன்ஸுடன் பொலிசார் உடனடியாக அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது மைக்கேலின் சடலமும் கண்டெடுக்கப்பட்டது. பலத்த துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகியிருந்தாலும் ஸ்ரோறி பிழைத்துக் கொண்டாள்.

கொலையாளியை அடையாளம் காட்டக் கூடிய ஒரே சாட்சி அவள்தான் என்று பொலிஸார் கருதினாலும் ஸ்ரோறியால் அவனைப்பற்றிய அடையாளங்களைத் துல்லியமாகக் கூற இயலவில்லை.

முகத்தின் முக்கால் பாகத்தை முகமூடியால் மூடியிருந்த அந்தக் கொலையாளியின் கண்கள் நீல நிறமானவை என்பதை மட்டுமே அவளால் உறுதியாகக் கூறமுடிந்தது. அவனது குரலையும் தன்னால் தெளிவாக அடையாளம் காண இயலும் என்றும் அவள் தெரிவித்தாள். ஸ்ரோறி

தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் கொலையாளியின் முகத் தோற்றம் வரையப்பட்டுப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. அவன் கடத்திச் சென்ற மைக்கேலின் கார் பற்றிய விவரங்களும் பத்திரிகைகளில் வெளியாகின.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து அநாதரவாக விடப் பட்டிருந்த மைக்கேலின் கார் கண்டுபிடிக்கப் பட்டது. வெற்றுத் துப்பாக்கி ரவைகளைத் தவிர கொலையாளியை இனங்காண்பதற்கான ஆதாரங்கள் எவையும் காரினுள் கிடைக்கவில்லை.

* * *

சில தினங்களுக்குப் பின்னர் ஹொட்டேல் ஒன்றுக்குச் சொந்தமான சொகுசு பஸ்ஸினுள் மறைத்து வைக்கப் பட்டிருந்த துப்பாக்கி ஒன்றை அந்த பஸ்ஸின் துப்புரவுப் பணியாளன் கண்டெடுத் துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தான்.

மைக்கேலைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி அதுதான் என்பது பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிய வந்தது. வெற்றுத் தோட்டாக் களும், ஸ்ரோறி மற்றும் மைக்கேலின் உடல்களில் பொதிந்திருந்த குண்டுகளும், துப்பாக்கி இறுதியாகப் பயன்படுத்தப் பட்டது எப்போது என்பதற்கான தடயங்களும் அதை உறுதி செய்தன.

இந்த விடயம் மைக்கேலின் கொலை சம்பந்தமான விசாரணைகளை மேற் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ப்ரொக் மென்னின் கவனத்துக்கு வந்தது.

உடனடியாக ஹொட்டேலுக்குச் சென்று தனது விசாரணைகளை ஆரம்பித்தார் அவர்.

அந்த ஹொட்டேலின் உரிமையாளன் மார்க் டெல்ஹம் என்ற இளைஞன். சம்பவதினத்தன்றும் அதற்கு முன்னும் பின்னுமான நாட்களிலும் அந்த ஹொட்டேலில் தங்கியவர்களைப் பற்றியும், ஹொட் டேலின் பஸ்ஸில் பயணம் செய்த வர்கள் பற்றியும் அவனி டம் விசாரித்தார் இன்ஸ்பெக்டர் ப்ரொக்மென்.

பெயர்ப்பட்டியல் களிலிருந்த மூன்று நபர்கள் இன்ஸ் பெக்டரின் கவனத்தை ஈர்த்தார்கள். மூவரும் முன்னாள் குற்ற வாளிகள். அவர்களில் ஒருவனான ஈஸ்டர் இப்போதும் அங்கு தங்கியிருப்பதாகத் தெரிவித்தான் டெல்ஹம்.

உடனடியாக ஈஸ்டர் கைது செய்யப்பட்டான். அவன் தங்கியிருந்த அறையைச் சோதனையிட்டபோது எந்தவித தடயமும் சிக்கவில்லை. அத்தோடு சம்பவதினம் இரவு அந்த ஹொட்டேலை விட்டு அவன் வெளியே செல்லவில்லை என்பதாக ஹொட்டேல் பணியாளர்களும் சாட்சியமளித்தார்கள்.

ஸ்ரோறியாலும் அவனை அடையாளம் காண இயல வில்லை. ''இவனாக இருக்க முடியாது. அந்தக் கொலை காரன் இளைஞனாகவும், நீலக் கண்களை உடையவனா

கவும் இருந்தான். அதைவிட அவனது குரலை நான் இலகு வாகக் கண்டுபிடித்து விடுவேன்'' என்றாள் ஸ்ரோறி.

எனவே மற்ற இரண்டு சந்தேக நபர்களும் தங்கியிருந்த அறைகளைச் சோதனையிட முடிவு செய்தார் இன்ஸ்பெக்டர். அவ்வறைகளிலும் தடயங்கள் ஏதும் சிக்கவில்லை.

''தம்மைத் தேடுகிறார்கள் என்பது தெரிந்தால் அவ்விருவரும் தலைமறைவாகி விடுவார்களே! அவர்களைப் பிடிப்பது எவ்வாறு?'' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டார் அவர்.

''பிடித்தேயாகவேண்டும். கொலை வெறியும் காமவெறியும் கொண்டு அலையும் ஒரு கொடூரக் கொலைகாரனை வெளியே விட்டு வைப்பது ஆபத்து'' என்று அவர் மனம் துடித்தது.

''நாளைஸ்ரோறியையும் அழைத்துக்கொண்டு ஹொட்டேலுக்குச் செல்லவேண்டியதுதான். அவள் பார்வையில் எவராவது அல்லது ஏதாவது தடயம் சிக்குகிறதா என்று பார்க்கலாம்'' என்று தீர்மானித்துக் கொண்டார்.

* * *

மறுநாள் காலையில் இன்ஸ்பெக்டரின் ஜீப் ஹொட்டேலின் முன் வந்து நின்றபோது அவரை வரவேற்க வெளியேறிவந்தான் ஹொட்டேலின் உரிமையாளனான டெல்ஹம்.

இந்தக் கொலைச் சம்பவத்தினால் தனது ஹொட்டேலுக்கு அவப்பெயர் ஏற்படப்போகிறதே என்ற கவலை அவன் முகத்தில் தேங்கிக் கிடந்தது.

''ஹலோ மிஸ்டர் டெல்ஹம்!''

''ஹலோ இன்ஸ்பெக்டர். வெல்கம்...''

டெல்ஹமின் குரலைக் கேட்டதும் சட்டென்று ஜீப்பினுள் இருந்து வெளிப்பட்டாள் ஸ்ரோறி. அவள் கண்கள் பளிங்குபோல் மின்னிக் கொண்டிருந்தன.

''அந்தக் குரல்... அந்தக் குரல்...'' என்று முணுமுணுத்தது அவள் உதடு.

டெல்ஹமைக் கண்டதும், ''இவன்தான் கொலை காரன்! இவன்தான் என் மைக்கேலைக் கொன்ற வன்... இவன்தான்...'' என்று கத்தத் தொடங் கினாள் அவள்.

அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்றிருந்த டெல்ஹமை இன்ஸ்பெக்டரின் இரும்புக் கரங்கள் வளைத்துக் கொண்டன.

டெல்ஹம்தான் கொலையாளி என்று அவர் சிறிது கூட ஊகித்திருக்கவில்லை. ஏனெனில் பார்ப்பதற்கு அவன் அமைதியானவனாகவும் நோஞ்சானாகவும் இருந்தான். அத்தோடு அவனது கண்கள் நீல நிறமல்லாமல் மண்ணிறப் பூனைக்கண்கள் போன்றே இருந்தன.

ஆனாலும் அவனது குரலையும் தோற்றத்தையும் வைத்து ஸ்ரோறி அவனை அடையாளம் கண்டு கொண்டதை தட்டிக் கழிக்கவும் அவரால் இயல வில்லை.

தன்னைப் பலாத்காரப்படுத்திய கொலைகாரனின் உடல் அடையாளங்கள் சிலவற்றை விசாரணைகளின் போது ஸ்ரோறி கூறியிருந்தாள். அவை அனைத்தும் டெல்ஹமுக்குப் பொருந்துவனவாக இருந்தன. ஆனால் அந்த 'நீலக்கண்' விடயம் தான் உறுத்தியது.

கைது செய்யப்பட்ட டெல்ஹம் முதலில் எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் பொலிஸாரின் கடுமையான விசாரணைகளின் பின்னர் பல உண்மைகளை வெளியிட்டான்.

இயல்பிலேயே வக்கிர எண்ணம் கொண்ட அவனுக்குள் காமவெறியும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்திருக்கிறது. தனது ஹொட்டேலுக்கு வரும் பல இளம் பெண்களைக் கடத்திச் சென்று பலாத்காரம் செய்திருப்பதையும் பொலிஸாரிடம் அவன் ஒப்புக் கொண்டான்.

இவ்வாறான செயல்களில் ஈடுபடும்போது தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டு செல்வதாகவும், கண்களுக்குக் கலர் 'லென்ஸ்'களை அணிந்து கொள்வதாகவும் அவன் தெரிவித்தான்.

முடிவு தெரியாமல் முடங்கிக் கிடக்கும் இளம் பெண்கள் கொலை தொடர்பான பல கேஸ்களிலும் அவன் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது.

வெறி பிடித்த மிருகமாக அலைந்து கொண்டிருந்த டெல்ஹமுக்கு விசாரணைகளின் முடிவில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

விளைவு விபரீதமானது. அந்த மர்ம மனிதனின் துப்பாக்கி சரமாரியாக குண்டுகளைக் கக்கியது. நான்கு குண்டுகளைத் தலையில் ஏந்திக் கொண்ட மைக்கேல் சுருண்டு விழுந்தான். காரை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்து நிறுத்தினான் அந்த மர்ம மனிதன்.

உங்கள் குழந்தை சாதனையாளன்தான்!

குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை. முதல் மூன்று வருடங்கள் குழந்தையின் வளர்ச்சியில் மிக முக்கியமான பொன்னான பருவம் ஆகும். இந்தக் காலத்தில் வளர்க்கப்படும் வளர்ப்பே குழந்தையின் எதிர்காலத்துக்கான சிறந்த அடித்தளமாக விளங்குகின்றது.

* ஒரு வயதில் குழந்தையின் உணவில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். சிறிது சிறிதாகக் கெட்டியான உணவுகளை அதிகரியுங்கள். நல்ல சத்தான உணவுகளைக் கொடுங்கள்.
* விளையாடுவதற்கு நிறைய பொம்மைகளைக் குழந்தைக்கு வாங்கிக் கொடுங்கள். விளையாடி முடிந்ததும் விளையாட்டுப் பொருட்களை உரிய இடத்தில் வைக்கப் பழக்குங்கள். இது நாளடைவில் தன் பொருட்களை உரிய இடத்தில் வைக்கும் வழக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தி விடும்.
* குழந்தை நடக்கத் தொடங்கி விட்டால் எல்லா இடங்களிலும் சிறுநீர் கழிக்கும். எனவே இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை நீங்களே அழைத்துச் சென்று சிறுநீர் கழிக்கப் பழக்குங்கள். நாளடைவில் குழந்தை தானே அதைச் செய்யத் தொடங்கி விடும்.
* ஒன்றரை வயதுக்குள் புட்டிப் பாலை நிறுத்தி விடுங்கள்.
* இந்த வயதில் குழந்தை பிடிவாதம் பிடிக்கும். அப்போது அதை பொறுமையாகக் கையாளுங்கள்.
* குழந்தையை வழிபாட்டு இடங்களுக்கு அழைத்துச் சென்று இறை வழிபாட்டில் ஈடுபடுத்துங்கள்.
* வீட்டுக் கதவுகளைத் தாழ்ப்பாள் போட்டு வையுங்கள்.
* மாலை வேளைகளில் குழந்தையை வெளியே அழைத்துச் செல்லுங்கள். அவர்களுடன் நிறையப் பேசுங்கள்.
* இரண்டு வயது முடிவடையும் காலத்தில் சின்னச் சின்ன பொருட்களை எடுத்து வரப் பழக்குங்கள். இது பிற்காலத்தில் தன் வேலைகளைத் தானே செய்ய தயார்ப்படுத்தும்.
* அயல்வீட்டுப் பிள்ளைகளுடன் விளையாட்டுப் பொருட்களை பகிர்ந்து விளையாட விடுங்கள். இது பிற்காலத்தில் மற்றக் குழந்தைகளுடன் நட்புடன் பழகும் பக்குவத்தை வளர்க்கும்.
* இரண்டு வயதில் பெரிய படங்களையுடைய கண்கவர் புத்தகங்களை வாங்கிக் கொடுத்து அதில் உள்ள படங்களையும், விளக்கத்தையும் சொல்லிக் கொடுங்கள்.
* குழந்தை எதையும் இலகுவில் மனதில் பதித்துக்கொள்ளும் காலம் இது என்பதால் வீட்டில் எப்போதும் நல்ல விஷயங்களைப் பேசுங்கள்.
* போதுமான ஓய்வு, நல்ல உறக்கம், சத்தான உணவு ஆகியவற்றை குழந்தைகளுக்கு அளியுங்கள்.
* இரண்டரை வயதிலிருந்து குழந்தை நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டு விடும்.
* நம் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட சின்னச் சின்ன விஷயங்களை குழந்தைக்குச் சொல்லிக் கொடுங்கள். மற்றவர்களுக்குக் கொடுப்பதில் கிடைக்கும் சந்தோஷத்தை பிள்ளைகளுக்கு உணர்த்துங்கள் குழந்தை சாப்பிட்டு மிஞ்சியதை நாய்க்கோ, பூனைக்கோ போடச் சொல்லுங்கள். எதையும் வீணாக்கக் கூடாது எவருக்கேனும் கொடுக்க வேண்டும் என்பதைப் பிள்ளைக்குப் பழக்குங்கள்.
* இனி மெல்ல மெல்ல பாடசாலைக்கு அனுப்புவதற்கு குழந்தையைத் தயார் செய்யுங்கள். பெரியவர்களைக் கண்டால் வணக்கம் சொல்ல, மரியாதை செலுத்தக் கற்றுக் கொடுங்கள்.

இந்த முதல் 3 வருடங்களும் தான் குழந்தையின் பொன்னான காலம். உங்கள் குழந்தை பிற்காலத்தில் சமூகத்தில் ஒரு நல்ல நிலையில் இருப்பதற்குத் தாயாராகிய உங்கள் கவனிப்பு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் வேலைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு குழந்தையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் பங்கு கொண்டு அவர்களை உரிய முறையில் வளர்த்து விடுங்கள்.

இனி என்ன உங்கள் குழந்தை நிச்சயம் ஒரு சாதனையாளன் தான்!

நோய் தீர்க்கும் ஆபரணங்கள்

வெறும் அழகுக்கு மட்டுமே நகைகளைப் பெண்கள் அணிவதாகப் பலர் நினைக்கிறார்கள்.

நகைகளை அணிவதன் மூலம் நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

மனிதஉடலில் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் 730 இரகசிய அக்குபஞ்சர் புள்ளிகள் உள்ளன. அவற்றுள் முக்கியமான சக்தி கேந்திரப் புள்ளிகளைத் தூண்டிவிட்டு ஆரோக்கியமாக இருக்கவே நம் முன்னோர்கள் நகைகளை உருவாக்கி அணிந்திருக்கிறார்கள்.

* தோடு குத்துவது அழகுக்கு மட்டுமல்ல கண்களுக்கு சக்தியளிப்பதற்கும் ஆகும். ஒருவரின் காதில் 124 அக்குபஞ்சர் புள்ளிகள் உள்ளன. சரியான புள்ளியில் காதுகுத்தி தோடு போட்டால், வாழ்நாளில் அவருக்கு கண் சம்பந்தப்பட்ட நோய்கள் வராது.
* கழுத்தில் சங்கிலி, அட்டியல் போன்றவற்றை அணிந்தால் கழுத்தின் பின் பகுதியில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும் 'டாய்சூய்' எனப்படும் புள்ளி தூண்டிவிடப்படும்.
* கைகளில் போடப்படும் காப்பு இதய சக்தி நாளத்தின் புள்ளியையும் ஹோர்மோன் சுரப்பிகளை சமநிலைப் படுத்தும் புள்ளிகளையும், வெள்ளை அணு சுரப்பி மையத்தையும் தூண்டிவிடுகிறது.

இதனால்தான் இந்தியாவில் கர்ப்பிணிகளுக்கு மருத்துவ ரீதியாக ஏழாம் மாதத்தில் வளைகாப்பு செய்யப் படுகிறது. இது தடுப்பூசி போலச் செயற்படுகிறது.

* பொட்டு வைப்பது, ''யின்டாங்'' எனப்படும் புள்ளியின் வேகத்தை அதிகப்படுத்துவதற்காகும். மேலும் பொட்டு வைத்த பெண்களை வசியப்படுத்தவும் முடியாது.
* மோதிரம் அணிவது அனைத்து மதத்தினராலும் திருமணத்திற்குப் பின் செய்யப்படும் ஒரு சடங்காகும். ஏனெனில் நடுவிரலுக்கும், மோதிர விரலுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள புள்ளிகள் பாலுறுப்புகளைத் தூண்டிவிடும். இதனால்தான் திருமணம்வரை மோதிரத்தை மோதிரவிரலில் அணிய விடமாட்டார்கள்.
* கல்லீரல், சிறுநீரகம், மண்ணீரல் ஆகியவற்றுடன் தொடர்புடைய புள்ளிகள் கணுக்காலில் உள்ளன. எனவே கால்களில் கொலுசு அணிவதன் மூலம் அவற்றில் ஏற்படும் நோய்களைத் தடுக்கலாம்.
* அம்மி மிதித்து அருந்ததி பார்த்து போடப்படும் மெட்டி கர்ப்பப்பைக்கு சக்தியளிக்கிறது.

எந்தவிதமான ஆபரணங்களையும் அணியாத பெண்களிடம் மலர்ச்சி இருக்காது.

எனவே உரிய முறையில் ஆபரணங்களை அணிந்து ஆரோக்கியமாகவும், அழகாகவும் வாழ்வோம்.

பெண்

எங்கும் எதிலும் பிளாஸ்ரிக்

நம் எல்லோருடைய வீடுகளிலும் பிளாஸ்ரிக் பொருட்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன. மரத்தளவாடங்களின் இடத்தைக் கூட பிளாஸ்ரிக் பிடித்துவிட்டது.

விலைகுறைவு, நீண்டகாலப் பாவனை என்பவற்றைக் கருத்தில் கொண்டே நாம் பிளாஸ்ரிக் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றோம்.

ஆனால் பிளாஸ்ரிக் பாவனையால் சூழலுக்குப் பெரும் கேடு விளைகின்றது. மழைவீழ்ச்சி குறையும், நிலத்துக்கடியில் உள்ள நீர்வற்றிப் போகும். இது உக்குவதற்கு கிட்டத்தட்ட 10 இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன. பிளாஸ்ரிக்கை எரித்தால் அதிலிருந்து வெளியேறும் புகையை சுவாசித்தால் புற்றுநோய் ஏற்படும்.

எதிர்காலத்தில் மாசடைந்த சூழலில் உங்கள் குழந்தைகள் வாழ்வதை நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லையென்றால் தயவு செய்து பிளாஸ்ரிக்கின் பாவனையை இயன்றளவு தவிருங்கள்.

முதலில் பெண்களாகிய நீங்கள் பிளாஸ்ரிக்கின் பாவனையை வீட்டில் கட்டுப்படுத்துங்கள். பின்பு அது சமுதாய அளவில் விரியும்.

* சமையலுக்குப் பயன் படுத்தும் பொருட்கள் நீண்ட காலமாக பிளாஸ்ரிக் கொள்கலன்களில் இருந்தால், இரசாயனத் தாக்கம் காரணமா அந்த உணவுப் பொருட்கள் காலப்போக்கில் விஷமாக மாறும் அபாயம் உள்ளது.

எனவே உடனடியாக பிளாஸ்ரிக் கொள்கலன்களை, கண்ணாடிக் கொள்கலன்களாக மாற்றுங்கள்.

மேலும் ஊடான உணவுப் பொருட்களை பிளாஸ்ரிக் தட்டுகளில் வைக்கும் போதும் அவை தாக்கம் புரிந்து அந்த உணவுப் பொருட்கள் நஞ்சாக மாறும்.

* வீட்டில் பிளாஸ்ரிக் ஆதிக்கம் செய்யும் இடங்களை கவனித்து (மேசை விரிப்பு, பைகள், திரைச்சீலை, மேசை, கதிரை) அவற்றை மாற்றுங்கள்.
* மலிவாக வாங்கலாம் என்பதற்காக பிளாஸ்ரிக்கைத் தெரிவு செய்யாமல், கொஞ்சம் அதிகமாகப் பணம் கொடுத்து எவர்சில்வர் பாத்திரங்களை வாங்குங்கள்.



எனவே சகோதரிகளே பிளாஸ்ரிக் பாவனையை முதற் கட்டமாக வீட்டில் கட்டுப்படுத்துவதன் மூலம், ஆரோக்கியமான சூழலுக்கு உங்கள் பங்களிப்பைச் செலுத்துங்கள்.

பகிர்ந்து கொள்ளுங்கள்

பெண்கள் வேலைக்குப் போகவேண்டிய கட்டாயத்துக்கு இன்று தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

இளம் பெண்ணாக இருந்தால் பரவாயில்லை. 40 வயதை அண்மித்துவிட்ட ஒரு பெண் வேலைக்குப் போய்க் கொண்டு குடும்பத்தையும் நிர்வகிக்கும் போது அவள் சோர்ந்து களைத்துவிடுகிறாள்.

பெரும்பாலான பெண்கள் 40 வயதிலே முதுமைத் தோற்றம் அடைந்துவிடுவதற்கும் இதுதான் காரணம்.

பெண்கள் வேலையில் எவ்வளவுதான் திறமைசாலிகளாக இருந்தாலும் வேலைகளை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கக் கற்றுக் கொள்வதில்லை.

இதற்குக் காரணம் பெண்களுக்குச் செயல்திறன் இருக்கும் அளவுக்கு மேற்பார்வை செய்யும் திறன் இல்லை என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு அவர்கள் கூறுவதற்குக் காரணம் குறித்த ஒருவேலையைத் தான் செய்யா விட்டால், தன்னுடைய முக்கியத்துவம் குறைந்து போய்விடும் எனப் பல பெண்கள் நினைப்பதும், எதிலும் முழுமையை எதிர்பார்க்கும் மனப்பான்மை சில பெண்களிடம் இருப்பதும் ஆகும்.

இப்படியான மனநிலை உடைய பெண்கள் முதலில் இவற்றைக் களைந்து விட வேண்டும்.

வேலைக்குப் போகாத ஒரு பெண் வீட்டைக் கவனிப்பது போல, வேலைக்குப் போகும் பெண்ணால் வீட்டைக் கவனித்துக் கொள்ள முடியாதுதான்.

இப்படியானவர்கள் பின்வரும் விடயங்களைக் கடைப் பிடியுங்கள்.

* கணவன் வீட்டு வேலைகளில் பங்குகொள்வதில் தவறு இல்லை. எனவே வீட்டு வேலைகளில் கணவனையும் ஈடுபடுத்துங்கள்.
* பிள்ளைகளுக்கு கோப்பி, தேநீர் ஊற்றக் கற்றுக் கொடுங்கள். மேலும் நூடில்ஸ் செய்ய, தோசை சுட, வீட்டைக் கூட்ட இப்படி சின்னச் சின்ன இலகுவான விஷயங்களைக் கற்றுக் கொடுங்கள்.

இவ்வாறு பகிர்ந்தளிப்பதன் மூலம் வீட்டு வேலைகளை இலகுவில் முடித்துவிடலாம். இதனால் வீணான பதற்றத்தை நீங்கள் தவிர்த்து விடமுடியும்.

முரளிக்கு சியட் விருது
ஆஸியிலிருந்தும் கௌரவம்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 2000-01 வருடத்திற்கான சியட் தரப்படுத்தலில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

முதலிடம் மட்டுமல்லாது அடுத்த இரு இடங்களும் இலங்கை வீரர்களுக்கே கிடைத்துள்ளன. இரண்டாம், மூன்றாம் இடங்களில் முறையே மார்வன் அத்தபத்து, சனத் ஜயசூரிய ஆகியோர் உள்ளனர்.

முரளிதரன் கடந்த வருடம் காலியில் நடைபெற்ற தென்னாபிரிக்கா வுடனான டெஸ்ட் போட்டியில் 13 விக்கட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

அதுடன் கடந்த அக்டோபரில் சார்ஜாவில் நடைபெற்ற போட்டியில் 30 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுக்களை வீழ்த்தி புதிய உலக சாதனையையும் படைத்திருந்தார்.

வீரர்களின் தர வரிசையில் முரளிக்கு 111 புள்ளிகள் கிடைத்திருக்கின்றன. இரண்டாமிடத்தில் 55 புள்ளிகளைப் பெற்ற மார்வன் அத்தபத்து உள்ளார்.


முரளி

அத்தபத்து கடந்த வருடம் ஜூன் மாதம் பாகிஸ்தானுடனான டெஸ்ட் போட்டியில் 207 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பெப்ரவரியில் நடைபெற்ற இங்கிலாந்துடனான போட்டியில் 201 ஓட்டங்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணித் தலைவர் சனத் ஜயசூரிய 93 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தை வகிக்கிறார்.

கடந்த வருடம் சார்ஜா நடைபெற்ற ஒருநாள் போட்டியொன்றில் சனத் 189 ஓட்டங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

1997/98ஆம் வருடத்திற்கான சியட் விருது சனத் ஜயசூரியவுக்கு வழங்கப்பட்டது. இவ்விருதைப் பெறும் இரண்டாவது இலங்கை வீரர் முரளி ஆவார்.

வீரர்களின் தரப்படுத்தலில் தென்னாபிரிக்க வீரர் ஜெக் கல்லிஸ் 87 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் உள்ளார். டென்டுல்கர் 85 புள்ளிகள் பெற்று ஐந்தாமிடத்தில் உள்ளார்.

அணிகளுக்கிடையிலான தரப்படுதலில் இவ்வருடம் தென்னாபிரிக்க அணி முதலிடம் பெற்றுள்ளது.

இலங்கை அணிக்கு நான்காவது இடம் கிடைத்துள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலியாவிலிருந்தும் முரளிக்குப் பாராட்டுக் கிடைத்துள்ளது. காலம் சென்ற கிரிக்கெட் ஜாம்பவான் டொனால்ட் பிரட்மனின் தொப்பியொன்று முரளிக்கு வழங்கப்படவுள்ளது.

உலகெங்கிலுமுள்ள மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கு பிரட்மனின் தொப்பி வழங்கப்படுகிறது.

பிரட்மன் சிட்னியில் முதன் முதலாக விளையாடிய சென். ஜோர்ஜ் கழகத்திற்குரிய நிறத்தில் இது தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி, வி.வி.எஸ் லக்ஷ்மன், ஹர்பஜான்சிங், மேற்கிந்திய அணியின் பிரையன் லாரா ஆகிய 5 வீரர்களுக்கு ஏற்கனவே இத் தொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரட்மனின் நூல்களை வெளியிட்ட டொம் தொம்ஸன் இதை முரளியிடம் வழங்கவுள்ளார்.

''முரளி மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர். அவர் பந்தை வீசி எறிவதாக கூறுவது தவறானது. பந்துவீச்சாளர் முனையிலுள்ள நடுவர் டெரல் ஹெயார் முரளி பந்துவீசும் போது அவர் எறிவதைக் கண்டு பிடிப்பது சாத்தியமில்லை.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப்பின் ஒழுக்கத்தில் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன்.''

இவ்வாறு பிரட்மன் தன்னிடம் கூறியதாக தொம்ஸன் கூறுகிறார்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் முரளிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

கடந்த வருடங்களில் சியட் விருது பெற்ற வீரர்கள் விவரம்:

1995/96	பிரையன் லாரா (மே.இ.தீவுகள்)
1996/97	வெங்கடேஷ் பிரசாத் (இந்தியா)
1997/98	சனத் ஜயசூரிய (இலங்கை)
1998/99	ஜெக் கல்லிஸ் (தென் ஆபிரிக்கா)
1999/00	சௌரவ் கங்குலி (இந்தியா)

பிரேஸில் அணிக்கு
புதிய பயிற்றுநர்

பிரேஸில் கால்பந்தாட்ட அணியின் புதிய பயிற்றுநராக லூயிஸ் ஃபிலிப் ஸ்கொலாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பயிற்றுநராக இருந்த எமர்ஸன் லியோ கடந்த 12ஆம் திகதி திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

தென்கொரியா, ஜப்பானில் கூட்டாக நடைபெற்ற கொன்பெடரேஷன் கிண்ணப் போட்டிகளில் பிரேஸில் அணிபெற்ற தோல்விகளைத் தொடர்ந்தே அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

கொன்பெடரேஷன் போட்டிகளில் பிரேஸில் 5 போட்டிகளில் விளையாடியது. இதில் ஒரேயொரு போட்டியிலேயே வெற்றி பெற்றது. மொத்தமாக 3 கோல்களையே அடித்தது.

அரையிறுதியில் பிரான்ஸ் அணியிடம் தோல்வியுற்றது. 3ஆவது இடத்திற்கான போட்டியில் அவுஸ்திரேலியாவிடம் 1-0 விகிதத்தில் தோல்வியுற்றது. லியோ பயிற்றுநராகப் பொறுப்பேற்றதன் பின்னர் மொத்தமாக 10 போட்டிகளில் பிரேஸில் பங்குபற்றியது. இதில் மூன்று போட்டிகளில் மாத்திரமே வெற்றியீட்டியுள்ளது.

ஸ்கொலாரி

எமர்ஸன்

கடந்த 12ஆம் திகதி பிரேஸில் அணி டோக்கியோவிலிருந்து பிரேஸில் நோக்கிப் புறப்பட்டது. அப்போது விமானம் ஏறுவதற்குச் சற்று முன்பதாக லியோவின் பதவி நீக்கம் பற்றி அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

லியோ பிரேஸில் அணியின் முன்னாள் கோல்காப்பாளர் ஆவார். 1974, 1978 உலகக் கிண்ணப்போட்டிகளில் பிரேஸில் சார்பாக விளையாடியவர்.

இதேவேளை உலகக்கிண்ணப் போட்டிகளிலும் பிரேஸில் இம்முறை நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

பிரேஸில் மாத்திரமே ஒவ்வொரு உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ள அணியாகும். ஆனால் இம்முறை முதல் தடவையாக உலகக் கிண்ணப் போட்டிகளில் இருந்து பிரேஸில் வெளியேற்றப்படுவதற்கான அறிகுறிதென்படுகிறது.

2002ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்திற்கான தகுதிகாண் போட்டிகளில் பரகுவே, சிலி, ஈக்குவாடோர் ஆகிய அணிகளிடம் பிரேஸில் தோல்வியுற்றது.

எதிர்வரும் ஜூலை 1ஆம் திகதி உருகுவே அணியுடன் பிரேஸில் மோதவுள்ளது. இதில் உருகுவே வெற்றி பெற்றால் பிரேஸிலின் நிலை மிகவும் சிக்கலாகிவிடும். இப்போட்டியின் பின்னர் பலம்மிக்க அணிகளான ஆர்ஜன்டீனா, பொலிவியா அணிகளுடன் பிரேஸில் மோதவுள்ளது.

இந்நிலையிலேயே புதிய பயிற்றுநராக ஸ்கொலாரியோ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்கொலாரியோ கடந்த 3 வருடங்களாக பிரேஸிலின் பல்மெய்ராஸ் அணியின் பயிற்றுநராக கடமையாற்றினார்.

கடந்த வருடம் இவர் பிரேஸில் பயிற்றுநராக பொறுப்பேற்கும்படி அழைக்கப்பட்ட போது அதற்கு அவர் மறுத்திருந்தார்.

பிரேஸிலிலுள்ள மிகவும் வெற்றிகரமான பயிற்றுநராக இவர் கருதப்படுகிறார்.

எனினும் இவரது அணுகுமுறை பற்றிப் பலரும் குறைகூறுகின்றனர்.

என்ன விலைகொடுத்தாவது வெற்றிபெற வேண்டும் என்ற கொள்கையுடையவர் இவர்.

போதுமான அளவு 'ஒழுங்கீனமாக' விளையாடவில்லை என்பதற்காக தனது அணி வீரர்களைப் பகிரங்கமாக கடிந்து கொண்டவர் ஸ்கொலாரி.

''நான் எவரதும் கால்களை முறிக்கும்படி கூறவில்லை. ஆனால் எமது கோல் அருகில் எதிரணியினர் வருவதைத் தடுப்பதற்காக மைதானத்தின் மத்தியில் சாதாரண தவறுகளை (ஃபௌல்) அதிகமாகச் செய்ய வேண்டும்.

சாதாரணமாக பிரேஸிலின் உள்ளூர் போட்டிகளில் 50,60 தவறுகள் இடம் பெறுகின்றன. மற்றவர்கள் பொய் சொல்லும் போது நான் உண்மை பேசுகிறேன்.'' இவ்வாறு ஸ்கொலாரியோ கூறுகிறார்.

''பல்மெய்ராஸ் அணியுடன் நாம் மோதும் போது ஸ்கொலாரியோவின் கட்டளைப் படி சிறுவர்கள் வேறு பந்துகளை மைதானத்தில் வீசி எமக்கு இடையூறு செய்வர்.'' இவ்வாறு பல எதிரணி வீரர்கள் ஏற்கனவே குற்றம் சுமத்தியுள்ளனர்.

பேலே போன்ற மதிப்புக்குரிய வீரர்கள் விளையாடிய அணிக்கு இத்தகைய ஒரு பயிற்றுநர் நியமிக்கப்பட்டிருப்பது பற்றி சிலர் விசனம் தெரிவித்துள்ளர்.

பெனையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

மனைவியருக்குப் பிரசவம்: ஆஸி. வீரர்களுக்கு ஓய்வு?

எதிர்வரும் செப்டம்பர் மாதம் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இக்காலப் பகுதியில் தமது மனைவியருக்குப் பிரசவம் இடம்பெறவிருப்பதால் முன்னணி வீரர்கள் மூவர் இப் போட்டிகளில் பங்குபற்றுவது நிச்சயமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவ் வோ

அணித்தலைவர் ஸ்ரீவ்வோ, கிளென் மெக்ராத், ஷேன் வோர்ன் ஆகியோரே இவ்வீரர்களாவர்.

''எனது மனைவி லினேட்டுக்கு செப்டம்பர் 20ஆம் திகதி பிரசவ தினம். ஆகையால் நான் விளையாடுவது நிச்சயமில்லை.

மெக்ராத்தின் மனைவி ஜேனிற்கு செப்டம்பர் 23ஆம் திகதியும் ஷேன்வோர்னின் மனைவி சிமோனிற்கு செப்டம்பர் இறுதியிலும் பிரசவ தினம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அவர்களும் விளையாடுவது சிக்கலானது.'' இவ்வாறு ஸ்ரீவ் வோ கூறியுள்ளார்.

இது பற்றி தற்போது ஐ.சி.சி மாநாட்டுக்காக லண்டன் சென்றுள்ள ஆஸி கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட்டுடன் பேசவுள்ளதாகவும் ஸ்ரீவ்வோ கூறினார்.

''வீரர்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஏற்கனவே ஆறு வார ஓய்வு வழங்கப்பட்டிருந்தது.'' இவ்வாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் முகாமையாளர் பிரண்டன் மெக்லமென்ட் கூறுகிறார்.

''பெருந்தொகையான பணம் கிரிக்கெட்டில் புரள்கிறது. பெருமளவு ஊதியம் வீரர்களுக்கு வழங்கப்படுகிறது.

தேவையானபோது அவர்கள் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும். இவை வீரர்கள் அறிந்த விடயங்களே.'' இவ்வாறு மல்கம் ஸ்பீட் கூறியுள்ளார்.

ஆஸி அணி தற்போது இங்கிலாந்தில் போட்டிகளில் பங்குபற்றுகிறது. செப்டம்பர் முதலாம் திகதியே மீண்டும் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பவுள்ளது.

செப்டம்பர் மாதம் 10, 12, 14ஆம் திகதிகளில் மெல்போர்னில் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டிகளில் அவ்வணி பங்குபற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதே காலப்பகுதியில் ஆசிய கிண்ணத்திற்கான டெஸ்ட் போட்டிகளும் நடைபெற விருக்கின்றன.

எனவே அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளில் இந்தியா நிச்சயமாக பங்குபற்றுமா என்பது குறித்து இந்திய அதிகாரிகளோடு மல்கம் ஸ்பீட் பேசவுள்ளார்.

இளம் கிரிக்கெட் வீரர் மலேரியாவால் மரணம்

ஸிம்பாப்வே அணியின் இளம் கிரிக்கெட் வீரர் ட்ரெவோர் மடோன்டோ கடந்த 11 ஆம் திகதி மலேரியா நோய் காரணமாக மரணமானார்.

24 வயதான மடோன்டோ கடந்த சில வாரங்களாக மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

மடோன்டோ

ஸிம்பாப்வே டெஸ்ட் அணியில் இடம்பெற்ற முதலாவது கறுப்பினத் துடுப்பாட்ட வீரர் இவரே.

கறுப்பினத்தவர்களான ஹென்ரி ஒலங்கா, பெங் குவா, எவர்ட்டன் மட்டாம்பனாட்ஸோ ஆகியோர் பந்துவீச்சாளர்களாக அவ்வணியில் ஏற்கனவே இடம்பெற்றிருந்தனர்.

1998ல் குயின்ஸ்பாக்கில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான டெஸ்ட் போட்டியின் மூலம் மடோன்டோ டெஸ்ட் களத்தில் பிரவேசித்தார்.

3 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் பங்குபற்றி 90 ஓட்டங்களைப் பெற்றவர் இவர்.

இறுதியாக 1999 டிசம்பரில் ஹராரேயில் நடைபெற்ற நியூஸிலாந்துடனான போட்டியில் பங்குபற்றினார். அதில் மடோன்டோ ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 13 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் இவர் பங்கு பற்றியுள்ளார்.

இறுதியாக இவ்வருட ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கார்ல்டன் அன்ட் யுனைட்டட் தொடரில் மேற்கிந்திய அணியுடனான போட்டியில் பங்குபற்றினார்.

மடோன்டோ ஒரு வணிகவியல் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலை பருவத்தில் ரகர் ஹொக்கி போட்டிகளிலும் இவர் விளையாடியுள்ளார்.

ஸிம்பாப்வே அணியில் விளையாடிய குறுகிய காலத்திற்குள் பிரகாசிக்க முடியாமல் போனாலும் திறமை மிக்க வீரர் என பலராலும் கருதப்பட்டார் மடோன்டோ.

'பீச் வொலிபோல் சம்மேளனம்' அமைப்பதற்கு அழைப்பு

இலங்கையில் பீச் வொலிபோல் சம்மேளனம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக, இலங்கையில் தற்போது பீச்வொலிபோல் விளையாடும் கழகங்கள் அல்லது இவ்விளையாட்டில் ஈடுபடவுள்ள கழகங்கள் தமது பெயர், முகவரி, நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் விவரங்களை பின் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

முகவரி: இலங்கை பீச் வொலிபோல் சம்மேளனம், மே/பா. இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம், இல. 2, ரீட் அவெனியூ, கொழும்பு 7.

விண்ணப்ப முடிவுத் தினம் ஜூன் 30ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

பித்தனின் பதில்கள்

கே. நிர்மலா, மட்டக்களப்பு.
கே : ஆண்கள் பல லட்சம் கேட்டு பெண்களைத் தண்டிக்கிறார்களே.
ப : அதற்காகத்தானே திருமணம் என்ற பெயரில் வாழ்நாள் முழுவதும் ஆண்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

ஆர். சுதாகர், நல்லூர்.
கே : சிலர் வாலிபராக இருந்தும் காதலிக்கப் பின்னடிப்பது ஏன்?
ப : Cost of Loving அதிகரித்து இருக்கலாம்.

பி. கண்ணன், வவுனியா.
கே : பித்தனே...! நாய்க்கு கல்லால் எறிந்து விட்டு ஓடினால் தொப்பை குறையுமாமே. உண்மையா?
ப : தொப்பை குறையாது. ஆனால் தொப்புளைச் சுற்றி ஊசி போட வேண்டி வரும்...

பி. மாதவன், உரும்பிராய்.
கே : பொன்னாசையா பெண் ஆசையா வலிமையுடையது?
ப : பத்து லட்சத்துக்காக காதலியையே கைவிடுகிறார்களே! இதிலிருந்து பொன்னாசை வலியது என்று தெரியவில்லையா?

ப. வேணுகோபால், சங்கானை.
கே : படையினரிடம் உள்ள பல்குழல் பீரங்கிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப : கட்டடங்கள் உடைக்க நல்ல சாமான். நம்பவில்லை என்றால் கைதடி, நாவற்குழி, சாவகச்சேரிப் பகுதிகளுக்கு போய்ப் பாருங்கள். அங்கே தான் கடைசியாக ஓடப் பண்ணி வேலை நடைபெற்றது.

வி. அருட்செல்வி, ஈச்சமோட்டை.
கே : சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள் கப்பலில் நான் வந்த போது ஒரே குலுக்கல், சத்தி. காசும் கொடுத்து இதுவும் வேணுமா?
ப : அப்ப 'சத்தி ஒவ் றிங்கோ' என்று சொல்லுங்கோவன்.

ஆர். நவ்பர், மருதானை.
கே : ஹாய் பித்தா! இலங்கை — இந்திய அரசியல் நிலைமைகள் எப்படி?
ப : அங்கே அல்லிராணி வென்று விட்டார். இங்கே அலரிராணி குன்றி விட்டார்.

ஆர். வத்சலா, தெஹிவளை.
கே : இணையத்தில் முத்தமிடும் வசதி அறிமுகமாகியுள்ளமை குறித்து....?
ப : பாவம் கணினி, கன்னி கழியப் போகிறது.

ரமணன், கோண்டாவில்.
கே : அஜித்குமாரின் 'சிட்டிஷன்' எதிர்பார்த்த அளவு இல்லையே?
ப : வேஷங்களில் கவனம் செலுத்திய அஜித் கதையில் கவனம் செலுத்த மறந்து விட்டார்.

எம்.ரி.எம். சிஹான், கொழும்பு – 14.
கே : என்னை ஒரு 'மிஸ்' ஏமாற்றி விட்டு தலைமறைவாகி விட்டார். என்ன காரணம் என்று தெரியவில்லை?
ப : மிஸ்ஸை, மிஸ்யூஸ் பண்ணி விட்டீர் போலும். அதனால் அவ மிஸ் ஆகிவிட்டா.

கே. சுஜந்தன், வெள்ளவத்தை.
கே : பெண்கள் இறுக்கமாக 'ரீ—ஷேர்ட்' அணிவது பற்றி என்ன நினைக்கிறீங்கள் ?
ப : உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உத்தமிகள்.

சுமதி, காரைநகர்.
கே : எனது மாமி பொல்லாதவராக இருக்கிறாரே!
ப : மம்மியைப் போல மாமியையும் மதியுங்கள்.

எஸ்.எஸ்.பாக்கிய நாதன், மானிப்பாய்.
கே : எரிக் சொல் ஹெய்மை இலங்கை விவகாரத்தில் இருந்து விலக்கியது குறித்து.....?
ப : Norway க்கு நம்நாட்டில் 'நோவே' No way என்பதை நாசூக்காக அரசபீடம் சொல்லியிருக்கிறது.

எம்.எம்.பைஸல், மருதானை.
கே : பித்தனே...! முஸ்லிம் காங்கிரஸுக்குள் அதிகாரப் போட்டி உச்சக் கட்டமாமே. கட்சி உடைந்து விடுமோ...?
ப : ஆமாம் கட்சிக்காகத் தலைவர் களா, தலைவர்களுக்காக கட்சியா? என்று முடிவெடுக்க வேண்டிய கட்டம் வந்து விட்டது.

ப.சந்திரகுமார், கண்டி.
கே : நேபாள அரச குடும்பப் படுகொலைகளுக்கான சூத்திரதாரி இளவரசர் திபேந்திரா என்று தெரிவித்த ஆணைக்குழு படுகொலைகளுக்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லையாமே.
ப : ஆணைக்குழுக்களை நியமிப்பதில் இலங்கை இன்று முன்னிலை வகிக்கிறது. ஆனால் அரைகுறை அறிக்கையை வெளியிட்டு நேபாளம் ஒருபடி மேலே சென்று விட்டது.

ஏ. ரஜீவ், பம்பலப்பிட்டி.
கே : பெண்களில் அழகான அங்கம் எது?
ப : மல்லிகையில் மணம் கூடிய இதழ் எது?

ராம் கார்த்திகேயன், சிலாபம்.
கே : தான் சொல்வதைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கேட்டால் ஓரிரவுக்குள் பிரச்சினை தீர்ந்து விடும் என்று அமைச்சர் டக்ளஸ் கூறி உள்ளாரே...!
ப : என்ன பிரச்சினை என்பது தான் கேள்வி.

ராஜி, திருகோணமலை.
கே : பித்தனே...! எனது அபிமான நடிகை சிம்ரன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?
ப : 'ஐலவ் யூடா' படத்துக்காக காதலர் ராஜா சுந்தரத்தை சீரியஸாக காதலித்துக் கொண்டிருக்கிறார்.

சின்னலெவ்வை, மருதானை.
கே : இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட பின்னரே கல்முனை தனி மாவட்டக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்று அமைச்சர் பௌஸி கூறுகிறாரே...!
ப : அப்ப கல்முனை தனி மாவட்டம் கானல் நீர் தானோ!

சுதன், மன்னார்.
கே : அழகான கண்கள் கொண்ட பெண்கள் ஆபத்தானவர்களா?
ப : கண்கள் தான் பெண்களின் Gun கள். அவற்றால் அவர்கள் எதையும் எளிதில் சாதித்து விடுவார்கள். கண்களால் அழகுணர்ச்சி காட்டினால் அபிநயம். அழிக்க நினைத்தால் பிரளயம்.

சுமதி, வத்தளை
கே : இன்றைய சூழ்நிலையில் புரியாத புதிராக யாரைக் கருதுகிறீர்கள்.
ப : யுத்தம் என்றால் சமாதானம் என்றும் சமாதானம் என்றால் யுத்தம் என்றும் மாறி மாறிக் கருத்து வெளியிடும் அம்மையாரைத்தான்!

பி. கோமதி, நாரஹேன்பிட்டி.
கே : பல்கலைக்கழகத்தில் ராக்கிங் நடக்கும் போது பைத்தியக்காரன் பார்த்தால் என்ன நினைப்பான்?
ப : தங்கள் ஆஸ்பத்திரியைவிட இங்கு சுதந்திரம் அதிகம் என்று.

கே.குமார், வத்தளை.
கே : பித்தனே, உங்களுக்குப் பிடித்த பெண் டைரக்டர் யார்?
ப : 'நெருப்பை' கிளப்பிய தீபா மேத்தாதான்!

ஜெகன், நல்லூர்.
கே : எனது படிப்புக்கு ஏற்ற சம்பளம் கிடைக்குதில்லை என்ன செய்யலாம் பித்தனே?
ப : இதற்கா யோசனை? அரசியல் வாதி ஆகி விட வேண்டியது தானே!

LINK-Salt to taste LINK-Salt to taste LINK-Salt to taste

சிறந்த தரத்திற்கான சர்வதேச விருதுபெற்ற லிங்க் அயடீன் கலந்த உப்பு

Link Imports & Exports (Pvt)Ltd.

86/1, Chatham Street, Colombo - 01.

Tel : 321085 TeleFax : 435959E-Mail :link@scienceland.lk

சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

நேரம்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
11.00-11.30						குட்டிச் சுட்டி	காலைக்கதிர் குட்டிச் சுட்டி
11.30-12.00							
12.00-12.30						சின்னச் சின்ன ஆசைகள்	
12.30-13.00							
13.00-13.30	சன் செய்திகள்	சன் செய்திகள்	சன் செய்திகள்	சன் செய்திகள்	சன் செய்திகள்	சக்தி வீக்கென்ட் மெட்னி	சக்தி வீக்கென்ட் மெட்னி
13.30-14.00	குலவிளக்கு	குலவிளக்கு	குலவிளக்கு	வணக்கம் தமிழகம்	வணக்கம் தமிழகம்		
14.00-14.30	சக்தி மெட்னி	சக்தி மெட்னி	சக்தி மெட்னி	சக்தி மெட்னி	சக்தி மெட்னி		
14.30-15.00							
15.30-16.00						நலந்தானா	திரைத்தென்றல்
16.00-16.30						டெஸ்ட் 10 மூவிஸ்	கோபி
16.30-17.00	சுப்பர் 10	கலைச்சோலை	நம்மநேரம்	மீண்டும் மீண்டும் சிரிப்பு	திரை விமர்சனம்	அரட்டை அரங்கம்	நீங்கள் கேட்ட பாடல்
17.00-17.30	தமிழ் கார்ட்டூன்	தில்லானா தில்லானா	தமிழ் கார்ட்டூன்	மலரும் மொட்டும்	தமிழ் கார்ட்டூன்	பூஞ்சோலை	சன் டி.வி நிகழ்ச்சிகள்
17.30-18.00	கிருஷ்ண தாசி	கிருஷ்ண தாசி	கிருஷ்ண தாசி	கிருஷ்ண தாசி	கிருஷ்ண தாசி	இளமை புதுமை	சன் டி.வி நிகழ்ச்சிகள்
18.00-18.30	கங்கா ஜமுனா..	கங்கா ஜமுனா..	கங்கா ஜமுனா..	பெப்ஸி உங்கள் சாய்ஸ்	காற்றாய் வருவேன்	ஆலோசனை நேரம்	இப்படிக்கு நீங்கள்
18.30-19.00	அர்ச்சனைப் பூக்கள்	அர்ச்சனைப் பூக்கள்	அர்ச்சனைப் பூக்கள்	அர்ச்சனைப் பூக்கள்	அர்ச்சனைப் பூக்கள்	புதுப்பாடல்	ஆனந்தபவன்
19.00-19.30	கோகிலா எங்கே போகிறாள்?	கோகிலா எங்கே போகிறாள்?	கோகிலா எங்கே போகிறாள்?	கோகிலா எங்கே போகிறாள்?	கோகிலா எங்கே போகிறாள்?	சாவித்ரி	சப்தஸ்வரம்
19.30-20.00	சின்னத்திரை	தித்திக்கும் ஓசை	புஷ்பாஞ்சலி	சீமான்களே சீமாட்டிகளே	பணம், பெண் பாசம்	இளையகானம்	பஞ்சவர்ணம்
20.00-20.30	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்	செய்திகள்
20.30-21.00	வாழ்க்கை	வாழ்க்கை	வாழ்க்கை	வாழ்க்கை	வாழ்க்கை	இயந்திரப்பறவை	ஜன்னல்

திருமணகால உலா வழிகாட்டி சிறப்பிதழ் -3

BRIDAL SEASON GUIDE

NEW DHIVIYA JEWELLERS

கலை நயத்துடன்
தங்கம், வைரம்,
நவரத்னம் பதித்த
அழகிய டிசைன்களில்
நகைகளை
உங்கள் மனம்
கவர்விதத்தில்
தெரிவு செய்ய
வெள்ளவத்தையில்
ஒரே இடம்.

42-C, Galle Road, Wellawatte,
Colombo-06. Tel : 508501, 505065
SPECIALIST IN 22KT GOLD JEWELLERY

SHALWAR PARADISE

வண்ண வண்ண டிசைன்களில் வனப்பான சல்வார்கள்

உடனே விரையுங்கள்

இந்தியாவிலிருந்து மிக
அண்மையில் இறக்குமதி செய்யப்
பட்ட சகல வைபவங்களுக்கும்
ஏற்ற கொட்டன் மற்றும் புஷ்
அப் சல்வார்களுக்கு உடனே
நாடுங்கள்

SHALWAR PARADISE
73C, Manning Place,
Wellawatta.
Tel: 072-410154

ஜூன் 15 முதல் 30 வரை
10% – 35% வரை

NEW DHIVIYA JEWELLERS

கலை நயத்துடன்
தங்கம், வைரம்,
நவரத்னம் பதித்த
அழகிய டிசைன்களில்
நகைகளை
உங்கள் மனம்
கவர்விதத்தில்
தெரிவு செய்ய
வெள்ளவத்தையில்
ஒரே இடம்.

42-C, Galle Road, Wellawatte,
Colombo-06. Tel : 508501, 505065
SPECIALIST IN 22KT GOLD JEWELLERY

HOTEL MAYURI

Vegitarian and Non Vegetarian food Centre
எவ்வித வைபவங்களானாலும்
உங்கள் விருந்தினர்களுக்கு சுவையான
சைவ, அசைவ உணவுகளை வழங்க வேண்டுமா!

அனுபவம் பெற்றவர்களால்
சுவையான உணவு வகைகளை
வழங்குவதில் என்றும்
முன்னோடிகள்

HOTEL MAYURI
No.451, Galle Road, Colombo-06. T.P:-502488

OASISS REST

தலைநகரில் தயக்கமின்றி
தங்கிச்செல்வதற்குத் தகுந்த இடம்

OASISS REST
LUXURY ROOMS & LODGING
135, Maliban Street,
Colombo - 11.
Tel: 338437, 323449, 433225.

UKAAYE

திருமணச் செலவுப்பட்ட நவீன அலங்கார முடைய
திருமணம் மற்றும் சுபவிதமான அலங்கார
வைபவங்களுக்குமான அலங்கரிப்பதற்கான
என்ன நகர்களுக்கும் ஏற்ற வகையில்
என்னத் தரங்களிலும்
பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

UKAAYE
190, 1st Floor, Bodhiraja Mawatha,
(Gas Work Street) Colombo - 11.
T.P : 075-370019, Fax : 075-370018.

EVERVISION

REPAIRS OF VIDEO CAMERAS
VIDEO DECKS & T.V
FOR VIDEO GRAPHY
PHOTO GRAPHY

385 1/3, J.T .Complex, Galle Road, Wellawatta,
Colombo-06. T.P : 596613

Gayee

HERBAL BEAUTY CARE

- Bridal Dressing (Hindu, Buddhist, Christian and Muslim)
- Hair Dressing
- Facial (Herbal)
- Waxing
- Eyebrow Threading
- Saree Pleating and
- Tussles knotting
- Manicure and Pedicure
- Hair and Sclap Treatment
- Tinting/ Highlights
- Permanent waving
- Straightning
- Make Up
- Classes
- Rich Cake

உங்கள் வாழ்வில் நிகழும் இனிய நிகழ்ச்சிகளை
தரமான முறையில் படமாக்க நாடுங்கள்

PHOTO & VIDEO

No.16, Silva Lane, Bambalapitiya, Colombo-04.
Tel: 597367, Mobile: 074-200084

DENSHI Video

CD FREE

டென்சி வீடியோ

VIDEO, PHOTO AND DIGITAL VISION (PVT) LTD

Computer Graphics and Animation for
T.V Commercial Photography and Album Makers,
Video Filming, Audio Dubbing, Computer Titling
And Mixing VHS (Video) to CD Transfer

No. 146-2/1, Galle Road, Wellawatte, Colombo-06.
Tel : 504224, 075-521808, Hot Line : 078-657317
New Branch:-
Noor Limpurg. Tegelen, Holland, Tel : 062-2194932

SALON DE JEEVA

- Pantene
- Head Massage
- Straigh Toner
- Hair Perming
- Face Massage
- Hair Trimming
- For Hair Styling
- Hair Tinting

Beauty Care For Gent's Ladies & Children
Hair Style And Hair Dressing
(Wella And Oriflame Agent)

No. 257B, Wellawatte Complex, Galle Road,
Wellawatte, Colombo-06. T.P:-593268

Jewell Craft

22Kt. Jewellers Gem Merchants
&
Pawning Centre.

உங்கள் இராசிகளிற்கு ஏற்ற சகல விதமான நவரத்தினக் கற்களையும்
தரமான விலையில் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

Show Room
403, Galle Road
Wellawatta
Colombo - 06.
Tel : 595338, 597230
596806

Office
Vijaya Jewellery
104, Main Street
Maskeliya.
Tel : 052-77205
052-77487

தேவி ஜுவலர்ஸ்

தலைநகரில் தனக்கென
முத்திரை பதித்து
தங்க நகைகளில் மங்கா புகழ் பெற்ற

Devi Jewellers

Buyers & Sellers of Bullion
(Gold, Silver, Platinum & Palladium)
Diamonds, Gems & Cubic Zicorium
AUTHORISED MONEY CHANGER
CUSTOM MADE JEWELLERY
No. 131, Sea Street, Colombo - 11, Sri Lanka.
Tel: 432502, Fax: 327101
E-mail: devi 131@visual.lk

நியூ அசோக்

வீடியோ புறொடக்ஷன்

உங்கள் நிகழ்வு எதுவானாலும் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் உங்கள் திருப்திக்கேற்ப நிறைவேற்றித் தருவதற்கு மிகுந்தரமான நிழற்படங்கள், வீடியோ படப்பிடிப்புகளில் கைதேர்ந்த நிபுணத்துவ சேவை.

298, 1/2, காலி வீதி,
கொழும்பு - 06, இலங்கை.
தொலைபேசி : 586240, 598599

இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் திருமண வைபவங்கள், பிறந்தநாள் நிகழ்வுகள் மற்றும் சமூக, வர்த்தக ரீதியிலான வைபவங்கள், விளையாட்டுத்துறை நிகழ்வுகள் என்பனவற்றை அற்புதமாக வீடியோபடமாக்கித் தருபவர்கள்.

VHS ல் இருந்து CD க்கு மாற்றுதல், கலர் ரிலீஸ் டேப் லாமிங்டன் மற்றும் ரிசன்ஸ் சேவை, ஆங்கில, தமிழ் CDக்களை வாடகைக்குப்பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

A ASHOK VIDEO PRODUCTION
298, 1/2, Galle Road, Colombo-06, Sri Lanka.
Tel : 586240, 597400, 598599

உங்கள் அழகுத் தேவைகள் அனைத்திற்கும்

AnushKa
Herbal Beauty Care

24-1/1, Hampden Lane, Wellawatte,
Colombo - 06. Tel : 556436

புதிதாகப் புத்தளம் மீது அரசாங்கத்தின் பார்வை!

பல வீதிகள் அபிவிருத்தி; பாலத் திறப்பு விழாவில் பௌஸி அறிவிப்பு

கடந்த பொதுத்தேர்தலில் புத்தளம் அரசாங்கத்தைக் கைவிட்டுவிட்டது. அங்கிருந்து ஓர் அரசாங்கக் கட்சி வேட்பாளர் கூட நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவில்லை. என்றாலும் அரசாங்கத்தின் பார்வை புத்தளம் மீது பதிந்துள்ளது. அபிவிருத்திப் பணிகள் பல மேற்கொள்ளப்பட இருக்கின்றன. முக்கியமாக வெகுவிரைவில் வீதி அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.


பௌஸி

கற்பிட்டி நாச்சிக்கல்லி பாலத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் பெருந்தெருக்கள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவையான உப உணவுப் பொருட்களில் சுமார் 20 சத வீதத்தைப் பூர்த்தி செய்யும் கற்பிட்டிப் பிரதேசத்தின் முக்கிய தேவைகளில் ஒன்றான நாச்சிக்கல்லி கிராமத்தின் பிரதான பாலம் கடந்த 12 ஆம் திகதி வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மரக்கறி, வெங்காயம், இறால், உப்பு, கருவாடு, தேங்காய் போன்ற உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு தினமும் சுமார் 150க்கு மேற்பட்ட லொறிகள் இப் பாலத்தின் ஊடாகவே வெளியிடங்களுக்குச் செல்கின்றன.

வடமேல் மாகாண போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சர் எம்.எச்.எம். நவவியின் அழைப்பை ஏற்று புத்தளத்துக்கு விஜயம் செய்த பெருந்தெருக்கள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி பாலத்தைத் திறந்து வைத்தார்.

சுமார் 1 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இப்பாலம் 26 மீற்றர் நீளம் கொண்டது.

திறப்பு விழா வைபவம் கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் என்.டி. தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அதிதிகளாக நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் முனிதாச பிரேமசந்திர, விவசாய பிரதியமைச்சர் டி.எம். தஸநாயக்கா, வடமேல் மாகாண அமைச்சர்கள் எம்.எச்.எம். நவவி, விக்டர் அன்ரனி பெரேரா, மன்னார் மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பீ.ஏ.ரிசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பௌஸி அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:—

''எமது நாட்டின் பாதை மற்றும் பாலங்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு குவைத் அரசு பெருமளவில் உதவியுள்ளது. சென்ற வருடம் குவைத் அரசின் உதவியுடன் 27 பாலங்கள் அமைக்கப்பட்டன.

''வெகுவிரைவில் மீண்டும் ஒருமுறை குவைத் அதிகாரிகள் இங்கு விஜயம் செய்யவுள்ளனர்.

''அவர்களால் வழங்கப்படவுள்ள நிதி யுதவி மூலம் நாட்டில் மேலும் 50 புதிய பாலங்கள் நிறுவப்படும். புத்தளம் — அநுராதபுரம் வீதி, மற்றும் பாலாவி — கற்பிட்டி வீதி என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு நவீன வீதிகளாக மாற்றம் செய்யப்படும். பாலங்களும் அமைக்கப்படும்.

''ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு பாதைகள் தான் மிகவும் முக்கியமானவை. சீரான பாதைகள் அமைந்தால் நாட்டின் அபிவிருத்தியும் பன் மடங்கு உயரும்.

''பல கோடி ரூபாய் செலவில் புத்தளம் தொகுதியில் அபிவிருத்திப் பணிகள் இடம் பெற்றும் கடந்த பொதுத் தேர்தலில் புத்தளம் தொகுதியில் அரச வேட்பாளர்கள் தோல்வியடைந்தது பெரும் வேதனையைத் தருகின்றது.!''

இப்படி அவர் கூறினார்

—ஏ. எஸ். புல்கி

புத்தளம் தேர்தல் தொகுதியிலுள்ள முஸ்லிம் கிராமமான கரைதீவுக் கிராமத்திலுள்ள அரசினர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புதிதாக கணினிப் பிரிவொன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வடமேல் மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவிக்கு பாடசாலை அதிபர் எம்.முக்தார் ஞாபகார்த்த பரிசொன்றை வழங்குகிறார்.

படம்: புத்தளம் நிருபர்

கற்பிட்டியில் மீலாத் விழா

நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தையொட்டி கற்பிட்டி வாழ் முஸ்லிம்கள் இம்மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மீலாத் விழாவை கொண்டாடுகின்றனர்.

கற்பிட்டி அல்—அக்ஸா தேசிய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விழா நிகழ்வுகள் இடம் பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கற்பிட்டி பிரமுகர்கள், மற்றும் நலன் விரும்பிகள் மத்தியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வைத்தே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

கலை இலக்கியப் போட்டி

புத்தளம் மாவட்ட பாடசாலை மட்டத்தில் சிந்தியா கலை இலக்கிய வட்டத்தினர், கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

தரப்படுத்தலின்படி தெரிவு செய்யப் படும் முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

அத்துடன் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று சிறந்த கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் ''சிந்தியா'' ஆண்டு மலரில் பிரசுரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

—எம்.எச்.எம்.சியாஜ்

முந்தல் அம்மன் உற்சவம்

புத்தளம் தொகுதியில் உள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற இந்து ஆலயங்களில் ஒன்றான முந்தல் அன்னை ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 தினங்கள் தொடர்ச்சியாக நடைபெறும்.

இறுதி நாளான ஜூலை 4 ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு தீ மிதிப்பு வைபவம் இடம் பெறும். ஆலய பிரதம குருவான பிரம்மஸ்ரீ ஷண்முக ரவிச்சந்திர குருக்கள் அனைத்து உற்சவ நிகழ்வுகளையும் நடத்துவார்.

நகர மைதானம் அபிவிருத்தி

புத்தளம் நகர சபையின் விளையாட்டு மைதானம் நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்பட உள்ளது. இதற்கு பத்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக, புத்தளம் நகரசபைத் தலைவர் கே. ஏ. பாயிஸ் நகர சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

விதவைப் பெண்களுக்கு வீடமைப்புக் காணிகள்

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து தற்பொழுது புத்தளம் மாவட்டத்தின் பல்வேறு நலன்புரி நிலையங்களிலும் வதியும் 170 விதவைப் பெண்களுக்கு அண்மையில் வீடமைப்புக் காணிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இலங்கை முஸ்லிம் பெண்கள் அமைப்பின் தலைவியான திருமதி அமினா முஸ்தாபாவின் முயற்சியினாலேயே வீடமைப்புக் காணிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

புத்தளம் தேர்தல் தொகுதியிலுள்ள வட்டக்கண்டல், இஸ்மாயில்புரம், புளிச்சாக்குளம், சலாமாபாத், நியூசிட்னி, தம்பண்ணி, ரஹ்மத் நகர் போன்ற இடங்களிலுள்ள நலன்புரி நிலையங்களில் வசிப்போருக்கே காணிகள் வழங்கப்பட்டன.

வன்னிமாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எஸ்.எம். கவுஸ், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் உதவித்திட்டப் பணிப்பாளர் ஏ. பதுர்தீன் ஆகியோரின் இடைவிடாத வற்புறுத்தல் காரணமாகவே, இலங்கை முஸ்லிம் பெண்களின் அமைப்பு வீடமைப்புக் காணிகளை வழங்க முன்வந்தது.

ரஹ்மத் நகர் நலன்புரி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் இக்காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் கையளிக்கப்பட்டன.

தமிழ் மொழியில் கருமமாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

''புத்தளம் தேர்தல் தொகுதியிலுள்ள நான்கு பிரதேச செயலகங்களான புத்தளம், கற்பிட்டி, முந்தல், வண்ணாத்திவில்லு ஆகியவற்றில் அரச கரும மொழியான தமிழையும் நடைமுறைப்படுத்த வேண்டும்''

மேற்கண்ட கோரிக்கையை புத்தளம் மக்கள் மன்றம் சார்பில் அதன் இணைச் செயலாளர்களில் ஒருவரான எஸ்.ஆர்.எம். முஹுசி விடுத்தார்.

வடபுலத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் புத்தளம் பகுதியில் வதியும் மக்களின் தேவைகளை கவனிக்க விசேட ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்யவும்—

இடம் பெயர்ந்த மக்களின் பல்வேறு குறைகளை நேரில் கண்டறியவும்— புத்தளம் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே மக்கள் மன்றத்தின் சார்பில் அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

மேற்படி கலந்துரையாடலுக்கு கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் கிராமிய வீடமைப்பு அபிவிருத்தித்துறை அமைச்சர் திருவாளர் பேரியல் அஷ்ரப் தலைமை வகித்தார்.

எஸ்.ஆர்.எம். முஹுசி மேலும் பேசுகையில் கூறியதாவது:—

''புத்தளத்தின் நான்கு பிரதேச செயலகங்களிலும் 101 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட 58 கிராம சேவையாளர் பிரிவுகளும், சிங்களம் பேசும் மக்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட 43 கிராம சேவையாளர் பிரிவுகளும் அடங்கும்.

''புத்தளம் மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவில் பெரும்பான்மையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றனர்.

''எனவே பிரதேச செயலகங்களில் பிரதேச, உதவி பிரதேச செயலாளர்களாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தோர் பணிபுரிவது விசேடமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

''நாளாந்தம் இங்கு வரும் பொதுமக்கள் மொழிப்பிரச்சினையால் தமது கருமங்களைப் பூரணமாக நிறைவேற்றிக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

''இது தவிர வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 12 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இப் பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே வாழ்கின்றனர். இவர்களது தேவைகளையும் இன்றுவரை இப்பிரதேச செயலகங்களே நிறைவேற்றி வருகின்றன.

''எனவே வடக்கு— கிழக்கு மாகாண விசேட ஆணையாளர் அலுவலகத்தை புத்தளத்தில் நிறுவி இடம் பெயர்ந்த தமிழ் பேசும் மக்களது தேவைகளை துரிதமாக கவனிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது போல உள்ளூரில் இடம்பெயர்ந்த தமிழ் பேசும் மக்கள் நன்மையடையும் விதத்தில் தமிழ் மொழியில் கருமங்கள் நடைபெற துரித நடவடிக்கை எடுக்க ஜனாதிபதிக்கு போதிய அழுத்தங்களை அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் ஏனைய உள்ளூர், இடம் பெயர்ந்த அரசியல் வாதிகளும் பிரயோகிக்க வேண்டும் என மக்கள் மன்றம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்!'' இப்படி அவர் கூறினார்.

நுரைச்சோலையில் மரக்கறிகளை பாதுகாக்க குளிரூட்டி இயந்திரம்

கற்பிட்டிப் பிரதேசத்தில் மரக்கறி வகைகளின் பிரதான ஏற்றுமதிக் கிராமமான நுரைச்சோலையில் மரக்கறி வகைகளை பழுதடையாமல் பாதுகாக்கும் குளிரூட்டி இயந்திரத்தைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதி விவசாய அமைச்சர் டி.எம். தஸநாயக்கா 'சுடர் ஒளி'க்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:— ''இப்பகுதியில் சேகரிக்கப்படும் பெருமளவு மரக்கறி வகைகள் வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

''அப்படியிருந்தும் சில வேளைகளில் பெருமளவு மரக்கறி வகைகள் மீதமாகின்றன. இப்படி மீதமாகும் மரக்கறி வகைகள் போதுமான குளிரூட்டி வசதிகள் இன்மையால் பழுதடையவும் செய்கின்றன.

''இதனை எனது கவனத்துக்குக் கொண்டு வந்த மாதான அமைச்சர் எம். எச். எம். நவவியின் ஆலோசனைக்கேற்ப குளிரூட்டி இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளன.

''சுமார் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் இந்தியாவிலிருந்து இதற்கென மூன்று பாரிய குளிரூட்டி இயந்திரங்கள் தருவிக்கப்படும். இவற்றில் இரண்டு நுரைச்சோலை, தம்புள்ள ஆகிய இடங்களில் பொருத்தப்படும். மற்றது மலை நாட்டின் நகர மொன்றில் பொருத்தப்படும்.

''இதன் மூலம் இப்பகுதி விவசாயிகளின் பெரும் குறை நன்று தீர்ந்து வைக்கப்படும்'' என்றார்.

போர்ப்பீதியை ஏற்படுத்திய காவத்தைமுனைச் சம்பவம்

புலிகளின் தாக்குதலுக்குப் பதிலாக படையினர் ஷெல் மாரி!!

மட்டக்களப்பு மாவட்டத்தின் காவத்தைமுனையில் இடம்பெற்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் சம்பவத்தை அடுத்து படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஒரு பொது மகன் உயிரிழந்தார். பதினாறு பொதுமக்கள் காயமடைந்தனர்.

அரசாங்கப்படையினர் மீதான தாக்குதலை நான்கு மாதகாலம் நிறுத்தியிருந்த விடுதலைப்புலிகள் அரசின் கடும் போக்கைத் தொடர்ந்து ஏப்ரல் 24 ஆம் திகதிக்கு பின்னர் தமது போர் நடவடிக்கைகளை மீண்டும் தீவிரப்படுத்தியிருந்தனர்.

எனினும் கிழக்கில்— குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில்— பெரிய அளவிலான தாக்குதல்கள் இடம் பெறவில்லை.

இவ்வாறான ஒரு சூழலில் காவத்தைமுனைச் சம்பவம் மீண்டும் மட்டக்களப்பு மக்களிடையே போர்ப் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலால் ஓர் அப்பாவி பலியானதுடன் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் இருந்து வடக்காக 32 கிலோ மீற்றர் தொலைவில் காவத்தைமுனை முஸ்லிம் கிராமம் உள்ளது.

ஓட்டமாவடிப் பாலத்தை அண்டிய பகுதியில் வாழைச்சேனை காகித ஆலை உள்ளது. அதற்கு சற்றுத் தள்ளித்தான் காவத்தை முனை இருக்கிறது.

வழமையாக இப்பிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் ஊடுருவல்கள், நடவடிக்கைகள் இடம் பெறுவதாக கருதும் படையினர் வீதிக்கண்காணிப்பு நடவடிக்கைகளை கடுமையான முறையில் தீவிரப்படுத்துவது வழக்கம்.

ஜூன் 4 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு விடுதலைப்புலிகள் இராணுவத்தினரின் காவலரண் நோக்கி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவம் பெரிய அளவில் இடம்பெறாததைத் தொடர்ந்து மறுநாள் காவல் கடமைக்கு சென்ற இராணுவத்தினர் தமது வழமையான கண்காணிப்பு பிரதேசத்தை விட்டு மேலும் சில யார் தூரம் முன்னேறிச் சென்றனர். அப்பொழுதே விடுதலைப்புலிகள் அணி படையினர் மீது அதிரடித் தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து படையினர் நாலாதிசைகளிலும் தாக்குதலை மேற்கொண்டனர். வாழைச்சேனை காகித ஆலை வளாகத்தில் வாழைச்சேனை பிரதேச இராணுவத்தினருக்கான 23—2 பிரிக்கேட் தலைமை அலுவலகம் அமைந்துள்ளது.

இந்த அலுவலகத்திலிருந்து விடுதலைப்புலிகள் உள்ள பகுதி உட்பட பல பகுதிகளை நோக்கியும் படையினரால் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

காலை 8 மணியளவில் ஆரம்பித்த தாக்குதல் பகல் பத்து மணி வரை நீடித்தது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து வாழைச்சேனை ஓட்டமாவடி ஊடான திருமலை வீதிப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன. கல்குடா தொகுதியெங்கும் ஒரே இடியோசை போன்று ஷெல் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன.

வீதிகளில் நின்ற பொதுமக்களும் மற்றும் தேவைகளுக்காக பயணம் செய்த பொதுமக்களும் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

தாக்குதல் ஓய்ந்த பின்னர் களமுனைத் தகவல்களின் படி ஆறு படையினர் பலியாகியிருந்தனர். பத்துப் படையினர் காயமடைந்திருந்தனர். இறந்த பொதுமகன் 24 வயதுடைய எம்.ஐ.சுபைர் என்னும் முஸ்லிம் இளைஞர்.

காவத்தை முனை முஸ்லிம்களின் வீடுகளும் ஷெல் தாக்குதலால் சேதமாக்கப்பட்டிருந்தன.

இச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு வட்டாரத்தின் தகவல்களின்படி, கோராவெளி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி கருணா வருவதாக கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மறைந்திருந்து தாக்குதல் நடத்தச் சென்ற படையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் மீது புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலின்போது பத்து ஷெல்கள் காவத்தை முனை முஸ்லிம்களின் வீடுகள் மீது விழுந்து வெடித்ததாகவும் படையினர் தெரிவித்தனர்.

ஆனால் காவத்தை முனையில் வீடுகள் சேதமாக்கப்பட்டதற்கும் முஸ்லிம்கள் காயமடைந்ததற்கும் படையினர் நடத்திய ஷெல் தாக்குதலே காரணம் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தை நேரில்கண்டதாக மக்கள் தெரிவித்த தாகவும் அவர் கூறினார்.

எது எப்படியோ மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் என்ற போர்வையில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் ஷெல் தாக்குதல்களில் ஒரு பொதுமகனின் உயிர் பலியானதுடன் 16 பேர் காயம் அடைந்துள்ளனர்.

அதே சமயம் கிரானுக்கு வடக்கேயுள்ள கோராவெளிக் கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் சென்று திரும்பிய பொதுமக்களை கிரான் பாலத்து சோதனைச் சாவடியில் வைத்து படையினர் துருவித் துருவி விசாரித்தனர். கடுமையான உடற் சோதனையையும் மேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வயற் பிரதேசத்தில் அமைந்திருக்கும் கோராவெளிக் கண்ணகை அம்மன் ஆலயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றது.

வருடாந்தம் இந்தஆலயத்தின் திருக்குளிர்த்தியில் கலந்துகொள்வதற்காக பெரும் திரளான மக்கள் சென்று வருவது வழமை.

இவ்வருடம் காவத்தைமுனை சம்பவத்தை வைத்தே படையினர் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருந்தனர்.

—சத்துருக்கன்

ஆனையிறவு வெற்றிக்குத் துணை நின்ற மட்டக்களப்புப் போராளிகள்

— கரிகாலன் புகழாரம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற கண்ணகை அம்மன் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் கோராவெளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி வைபவத்துக்கு இம்முறை பெரும் எண்ணிக்கையான் பக்தர்கள் வந்திருந்தனர்.

இவ்வருடம் நடைபெற்ற குளிர்த்தி இறுதிநாள் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

இவர் அங்கு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''மட்டக்களப்புப் போராளிகள் வன்னி மக்களால் போற்றப்படும் அளவுக்கு சாதனை படைத்தவர்கள். ஆனையிறவுச் சமரில் எமது போராளிகள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து மட்டக்களப்பு மண்ணுக்கு பெருமை தேடித் தந்தவர்கள்.

ஆனையிறவுச் சமருக்காக எமது போராளிகள் 18 மாத காலம் மழை, வெயில் பாராது பதுங்கு குழிகளில் இருந்துள்ளனர்.

அவ்வாறு இருக்கும் போது உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. வெங்குடாந்திப் பாம்புகளை அவர்கள் அப்பொழுது உணவாக உட்கொண்டார்கள்.

இறுதியாக எம்மவர்கள் ஊடுருவித் தாக்குதல் நடத்தி நாற்பதாயிரம் பேர் கொண்ட இராணுவத்தை ஓட்டம் காட்டினார்கள்.

தற்போது நான்காயிரம் படையினர் எமது மண்ணை ஆக்கிரமித்துள்ளனர்.

மாலை ஆறு மணிக்குப் பின்பு பொதுமக்கள் நடமாட முடியாத நிலைமை இங்கு இருக்கிறது.

பிரசவ வேதனையால் அவதியுறும் தாய்மாரைக் கூட சிகிச்சைக்காக அனுமதிக்க முடிவதில்லை. சொந்த மண்ணிலே எமது இனம் அடிமையாக்கப்பட்டுள்ளது. எனவே பஞ்சு மெத்தையில் இருந்துகொண்டு விடுதலை பெறமுடியாது''

இப்படி அவர் தெரிவித்தார்.

கல்முனை தமிழ் உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படாதது ஏன்?

கல்முனையில் தமிழ்ப்பிரிவுக்காக இயங்கிக் கொண்டிருக்கும் உப பிரதேசச் செயலகம் தன்னிடமிருந்த சில அதிகாரங்களையும் இழந்து வடக்கு — கிழக்கு மாகாண அரசு வழங்கும் நிதி ஒதுக்கீடும் நிறுத்தப்பட்ட நிலையில் மூடப்படும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளது என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பக் காலங்களில் கல்முனை பிரதேச தமிழ் — முஸ்லிம் மக்களுக்கென ஒரு பிரதேச செயலகமே (உதவி அரசாங்க அதிபர் பிரிவு) இயங்கி வந்தது. எதிர்காலத்தில் இது தமிழ் — முஸ்லிம் மக்களுக்கிடையே கருத்து முரண்பாடுகளையும், பிணக்குகளை யும் ஏற்படுத்தலாம்என்ற சந்தேகம் காரணமாக இரு பிரிவுகளாக் கப்பட்டது.

பிரிக்கப்பட்டதில் இருந்தே முஸ்லிம் பிரிவுக்கான உப—பிரதேச செயலகம் பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டது. காணி நிதி, அபிவிருத்தி உட்பட சகல அதிகாரங்களும் அதற்கு வழங்கப்பட்டன.

ஆனால் 1989 ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் ஹஜ்ரா வீதியில் உள்ள கச்சேரிக் கட்டடத்தில் இயங்கி வரும் தமிழ் பிரிவுக்கான உப—பிரதேச செயலகம் மாகாண சபையினால் பொறுப்பேற்கப் பட்டு நிதி உதவியும் பெற்று வந்தது. 1993 ஜூலை 28 ஆம் திகதி இதனை 'பிரதேச செயலகமாக' தரம் உயர்த்து வதற்கான அனுமதியினை அமைச்சரவை அளித்திருந்த போதிலும் இது வரை தரம் உயர்த்தப்படாது இருப்பதன் மர்மம் துலங்கவில்லை.

கல்முனை தமிழ் உப—பிரதேச செயலாளர் பிரிவில் 29 தமிழ் கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இவற்றில் வாழ்கின்றனர்.

ஆயினும் தரம் உயர்த்துவதற்கு பலரால் முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வருகின்றன. சந்தை, கடை வீதிகள் (பஸார்) சில முக்கிய வியாபார நிலையங்கள் தங்கள் கையை விட்டுப் போகும் என்ற அச்சம் சில அரசியல் தலைமைகளுக்கு இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க 2001 ஜனவரி முதல் பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்தப்பட்டு மத்திய அரசு இதனைப் பொறுப்பேற்கும் எனக் கூறப்பட்டதால், மாகாண அரசு நிதி ஒதுக்கீடு செய்வதை இடைநிறுத்தியது.

இதன் காரணமாக சம்பளப் பணம் உட்பட சகல விடயங்களுக்கும் முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகத்திடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நிதிப் பற்றாக்குறையினால் 'அபிவிருத்தி' செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது.

போகிற போக்கைப் பார்த்தால் எதிர்காலத்தில் இந்த செயலகப் பிரிவை இழுத்து மூட வேண்டிய ஆபத்தான நிலை ஏற்படலாம்.

இதே வேளை கல்முனையில் இருக்கும் (நகரோடு அண்டிய) தமிழர்களது விவசாயக் காணிகளைச் சுவீகரித்து நகர மயப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டு வருவது குறித்தும் விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

—மனோ

புலித் தடை நீங்கும் என்கிறார் பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருக்கும் தடை விரைவில் நீக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

இத்தகவலை இனவிவகார தேசிய நல்லிணக்கப் பிரதியமைச்சர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

''சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு புலிகள் மீதான தடை பிரதான முட்டுக்கட்டையாக இருக்கிறது. புலிகள் மீதான தடையினால் நன்மை ஏற்படாத நிலையில் அதனைத் தொடர்ந்தும் ஏன் வைத்திருக்கவேண்டும்?'' என்று அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

''ஆரம்பத்தில் புலிகள் இயக்கத்தின் மீதான தடை தற்காலிகமாக நீக்கப்படும். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சுமுகமான சூழ்நிலை ஏற்படும்போது நிரந்தரமாகத் தடையை நீக்கவே அரசாங்கம் விரும்புகிறது.

இன்னும் 2 வாரங்களில் இது தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

புலிகள் இயக்கத்தின் தடையை நீக்குவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் எமது அமைச்சு பிரதான பங்குவகிக்கிறது.

அண்மையில் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது யுத்தத்தினால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தினோம். மக்கள் பெரும் பாதிப்புகளை அனுபவித்து வருவதால் விரைவாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன் னெடுத்துச் செல்ல புலிகள் மீதான தடை நீக்கம் அவசியமாகிறது'' என்றார்.

நூலக வாரம் — 2001

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 'நூலக வாரம் — 2001' 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக கொழும்புப் பல்கலைக் கழகக் கல்விப்பீடப் பேராசிரியர் எஸ்.சந்திரசேகரன் கலந்து கொள்வார்.

நூலக வாரம் இடம்பெறும் மூன்று நாட்களிலும் பல அரிய நூல்கள் கண்காட்சிக்கு வைக்கப் படும்.

இதில் பிரபல எழுத்தாளர்களது நூல்கள், ஓலைச் சுவடிகள், மின்னியல் ஆவணங்கள், அரிய நூல்கள் ஆகியவை பார்வைக்கு வைக்கப்படும்.

(ற)

வீரமுனை ஆலய உற்சவம்

கிழக்கிலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்றதும் தொன்மை வாய்ந்ததுமான வீரமுனை ஸ்ரீ கிந்தா யாத்திரை பிள்ளையார் ஆலயம் 'சீர்பாத தேவி' எனும் மாதரசியினால் உருவாக்கப்பட்டது. இங்கு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்ட விக்னேஸ்வரப் பெருமானுக்கு 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகி 28ஆம் திகதி வியாழக்கிழமை ஆனி உத்தர தினத்தில் தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெற உள்ளது.

கருமாரம்பம், கிராம சாந்தி, கொடியேற்றம், வீதி வலம் வரல், வேட்டைத் திருவிழா, சித்திரத் தேர்த் திருவிழா உட்பட தீர்த்தோற்சவம், உற்சவ பிராயச்சித்தம் என்பன கிரியாகால முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

சித்தாந்த வித்தகர், முத்தமிழ் குருமணி, சிவாகம சிரோன்மணி, சிவப்பிரம்மஸ்ரீ சாம்பவசிவ சோமாஸ்கந்த சிவாச்சாரியார் (யாழ்— நல்லூர் சிவாச்சாரிய குரு பீடம்) உற்சவ பிரதம சிவாச்சாரியாராகக் கடமையாற்றுவார்.

வியாழ மாற்றம்

16-06-2001இல் நிகழும் வியாழ மாற்றப் பலாபலன்கள் திருக்கணித வெளியீடாக வெளிவந்துள்ளது.

விலை ரூபா 25.00

ஏகவிநியோகஸ்தர்

ட. முத்தையா அன்கம்பனி,
155/2, குமாரு வீதி,
கொழும்பு - 11.
தொலைபேசி: 555477

விசேஷ கொடுப்பனவுக்காக நோயாளரை வருத்தலாமா?

"எல்லாப் பிரச்சினைகளும் கடைசியிலை பொது சனத்தின்ரை தலையிலைதான் விழுகுது" இப்படிக் கூறிய படியே வந்த விநாசியர், மாஸ்டருடன் தேரடியில் அமர்ந்தார்.

"என்னண்ணை கோபத்திலை இருக்கிறீங்கள் போல இருக்கு" சிரித்தபடி கேட்டான் டானியல்.

"யாரோ பிழை விட்டு எங்கேயோ ஏற்பட்ட நட்டத்தை பொதுமக்களிடம் வசூலிக்க நினைக்கிறது பிழை யெல்லோ" விஷயத்தைச் சொல்லாமல் இழுத்தார் விநாசியர்.

"சூரியன் மேற்காலை உதிச்சாலும் இந்த ஆள் ஒருநாளும் நேரடியா விஷயத்தைச் சொல்லாது" சீறிய சின்னாச்சியை சமாதானப்படுத்த உடனடியாக விஷயத்துக்கு வந்தார் விநாசியர்.

"இலங்கை மின்சார சபை மின்சாரக் கட்டணத்தை 20 சதவீதம் அதிகரிச்சிருக்கு. இப்படிக் கட்டணத்தை அதிகரிச்சுக் கொண்டே போனால் கடைசியிலை ராஜாக்கள் ஆண்ட காலம்போல தீப்பந்தங்களோட திரியவேண்டியதுதான்."

"சும்மா புலம்பக் கூடாது. மின்சார சபைக்கு 800 கோடி ரூபா நட்டமாம். சபை செயற்படுவதற்கான செலவுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லையாம்." என்று தனது புத்திசாலித் தனத்தைக் காட்டினான் லோகன்.

விநாசியர் ஆரம்பித்தார்,

"'நட்டம் நல்லதம்பி, செலவு செல்லத் தம்பி' என்று கனக்கக் கதைகள் நாங்கள் கேள்விப்பட்டனாங்கள். கேட்கிறவன் கேணப்பயல் என்றால் அரிசி இயங்குவதற்கு எண்ணெய் ஊற்றின செலவென்றும் எங்கடை அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் கணக்கு எழுதுவினம்"

"அப்ப அண்ணை நட்டம் என்று சொன்னது பொய்யோ" அதிர்ச்சியாய்க் கேட்டான் லோகன்.

அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாத விநாசியர், "மின்சார சபையிலை அனல் மின்சாரம் தயாரிப்பில் பலகோடி ரூபா நட்டம் என்றும் மின்சார சபையில் பலகோடி ரூபா மோசடி, பிரதம நிறை வேற்று அதிகாரியும் பொது முகாமையாளரும் கட்டாய லீவில் அனுப்பப்பட்டனர் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன" என்றார்.

"ஓம்..... ஓம்..... நானும் பார்த்தனான்" என்றான் லோகன்.

"பிறகென்ன கூட்டிக் கழிச்சுப் பாரும் தம்பி, கணக்குச் சரியாக வரும். பல கோடி ரூபா மோசடி என்றால் இரண்டு பேர் மட்டுமே சம்பந்தப்பட்டிருப்பினம்? பெரிய கைகளும்தானே சம்பந்தப்பட்டிருப்பினம். ஆனால் அடிக்கிறதை அடிச்சுப் போட்டு இரண்டு அதிகாரிகளை மட்டும் கட்டாய லீவிலை அனுப்பியிருக்கினம், அவைக்கும் தண்டனை கிடைக்குமோ தெரியாது. ஆனால் பெரும் கைகளின் வங்கிக் கணக்குகளில் பணம் ஏறஏற இங்கு மின்சாரக் கட்டணமும் மக்களை வதைத்தபடி உயர்கிறது."

"அப்ப நட்டம்கிட்டம் என்று சொன்னது மோசடி நடந்த கணக்கை சமப்படுத்தத்தானோ?"

"அதுமட்டுமே யாழ்ப்பாணத்திலை மின்சாரக் கட்டணம் எவ்வளவு கட்டப்படுகுதோ அதே அளவு பணம் மண்ணெண்ணெய்க்கும் செலவாகுதாம். இதனால் மின்சாரத் தொடர்பு இருந்தாலும் மின்வெட்டு நேரம் மின்சாரம் கிடைக்கும் நேரம் என்று இரண்டும் ஒரே அளவாக இருப்பதால் செலவு இரண்டு மடங்காகுது"

விநாசியரின் விளக்கத்தால் அவசரப்பட்டு பேசியதற்கு வருந்தித் தலைகுனிந்தான் லோகன்.

அவனைச் சமாதானப்படுத்துவதுபோல் "எப்படியோ விசேட கொடுப்பனவுகள் பெறும் தங்களின் போராட்டத் தில் எங்கடை டாக்டர்கள் வெற்றி பெற்றிட்டினம்" என்று பேச்சைத் திசை மாற்றினான் டானியல்.

"அவை தங்கடை போராட்டத்திலை வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் பொதுமக்களை கஷ்டப்படுத்திப் போட்டினம்" என்றார் விநாசியர்.

"கொடுப்பனவுகளிலை இனப் பாரபட்சம் காட்டிறதுக்கு எதிராக மருத்துவர்கள் போராடினது பிழை என்று சொல்லுகிறீர்களா?" கேட்டான் லோகன்.

அதற்கு விநாசியர் பதில் சொல்லும் முன்னர் டானியல் குறுக்கிட்டான்.

"ஏன் மச்சான் எங்கடை பிரதமர் உனக்குச் சொந்தமோ?"

தேரடி அரட்டை

சம்பந்தமே இல்லாத கேள்வி புரியாமல் விழித்தான் லோகன்.

"இல்லை மச்சான் அடிமேல் அடி வாங்கியும் பட்டும் புத்தி வராத ஆள் போலை கதைக்கிறாய். முதலில் விநாசியண்ணை சொன்னது பிழை என்றாய் பிறகு சரி என்றாய் இப்பவும் அவர் சொன்னதை கேட்காமல் பிழையோ என்று கேட்கிறாய்."

"அதுக்கென்ன தம்பி தான் பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என்று பிடிவாதம் பிடிக்கிறவரைப் போல இல்லாமல் லோகன் சொன்னால் விளங்கிக் கொள்ளுதெல்லோ" என்றார் மாஸ்டர்.

"சரி நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கோ" என்றாள் சின்னாச்சி.

"மருத்துவர்கள் தங்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வேணும் என்று வேலை நிறுத்தம் செய்ய அதனால் நோய்க்கு மருந்தெடுக்க முடியாமல் நோய் அதிகரிக்கும் நிலை உருவானது.

அவசர சிகிச்சைப்பிரிவும், தீவிர சிகிச்சைப் பிரிவும் இயங்கும் என்று சப்பைக்கட்டு கட்டுகினம். அப்ப வெளி நோயாளர் பிரிவு தேவையில்லாத ஒன்றே." பொரிந்து தள்ளினார் விநாசியர்

"ஆனாலும் இவ்வளவு கஷ்டத்துக்குக் குள்ளேயும், சனம் கோபப்படாமல் சகிச்சுக் கொண்டு இருக்கிறதை மருத்துவர்கள் புரிந்துகொண்டு தங்கடை பக்கம் இருக்கிற தவறுகளுக்கு எதிராக, அவற்றை சரிசெய்ய முன்வந்தால் நல்லது" என்றார் மாஸ்டர்.

"தவறுகளை சொன்னால் தானே அவைக்கு விளங்கும்" தூண்டினான் டானியல்.

"வெளியிலை தனியார் கிளினிக்கில் நூறு ரூபா கொடுத்து தன்னிடம் காட்டின நோயாளிக்கு தான், அரச மருத்துவ மனையில் முதலிடம் கொடுத்து மருத்துவர்கள் கவனிக்கிறதாக ஏழை நோயாளிகள் முறையிடுகினம். தென்னிலங்கை மருத்துவர்கள் வடக்கு—கிழக்கில் இப்படி குறுக்காலை உழைக்க சந்தர்ப்பம் இல்லை.

அரசு இனப்பாரபட்சம் காட்டுவதாக தொண்டை கிழியக் கத்தி விசேட கொடுப்பனவு பெற்ற மருத்துவர்கள், தங்கடை இனத்தைத் தாங்களே சுரண்டுவது சரியா என்று யோசித்தால் எல்லோருக்கும் நல்லது" என்று முடித்தார் மாஸ்டர்.

"அதோடை இன்னொரு விஷயத்தையும் கவனிச்சா அவைக்கு நல்லது" என்ற சின்னாச்சி, மேலும் தொடர்ந்தாள்.

"ஒரு சில மருத்துவர்கள், சிகிச்சைக்கு வரும் பெண் நோயாளிகளிடம் தவறாக நடக்கிறதாக முறைப்பாடுகள் எழுவது வழக்கமாகியிருக்கு. அதை விட தவறான சிகிச்சைகள் காரணமாக நோயாளிகள் அநாவசியமாக இறக்க நேரிடுவது சிறிது அதிகரித்து வருகுதாம். இப்படி இறந்த நோயாளியின் மருத்துவ அறிக்கையை கேட்டால் பல காரணங்கள் கூறி மழுப்பப்படுகிறதாம். சில நேரங் களில் மருத்துவமனை நிர்வாகம் தர ஒப்புக் கொண்டாலும், மருத் துவ அறிக்கை மாயமாக மறைந்துவிடுகிறதாம். ஆனாலும் சனம் இதையெல்லாம் பொறுத்துக் கொண்டு இருக்குது. மருத்துவர்கள் தங்கடை வருமானம்தான் முக்கியம் என்று நடந்தால், சனமும் இவை இருந்தும் ஒன்று, இல்லாட்டிலும் ஒன்று, தென்னிலங்கை மருத்துவர்களே எங்களுக்குப் போதும் என்று முடிவெடுத்திடும்".

"என்ன செய்யிறது சின்னாச்சி, தமிழ் மருத்துவர்களில் ஒரு சிலர், கோடி ரூபா கொட்டித்தந்தாலும், வெளியிலை போக மாட் டேன், தமிழருக்குத்தான் சேவை செய்வேன் என்று இருக்கினம் தான். ஆனால் கன பேர் நாங்கள் இல்லாட்டி நீங்கள் செத்துப் போய் விடுவீர்கள் என்று பயம் காட்டி அட்டகாசம் செய்யினம். அவை திருந்திறது எப்ப என்றுதான் தெரியவில்லை" கூறினார் விநாசியர்.

"இலவசமாக மருத்துவப் படிப்பு முடிக்கிறவை, குறைந்தது 5 வருஷம் அரசாங்கம் சொல்லும் இடத்திலை சேவை செய்ய வேணும். பிறகுதான் சான்றிதழ் கையளிக்கப்படும் என்று சட்டம் போட்டா இந்தப் பிரச்சினை சுலபமாக முடியும் என்று நினைக்கிறன்" என்றான் டானியல்.

"சட்டம் போட விடுவினமோ? ஓசியிலை படிப்பும் வேணும், சனம் எக்கேடு கெட்டால் என்ன எங்களுக்கு காசு குவியவும் வேணும் என்று அதுக்கும் வேலை நிறுத்தம் செய்யினம்" என்றபடி கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி.

—ஏகலைவன்

திருமலை துறைமுக வருவாய் வெகுவாக குறைந்தது ஏன்?

மாற்றான்தாய் மனப்பான்மை காரணமா?

இயற்கை ஈன்றெடுத்த குழந்தையான திருகோணமலைத் துறைமுகத்தின் அபிவிருத்தி வருமானம் தற்பொழுது வெகுவாகக் குறைந்து வருகிறது.

ஏனைய துறைமுகங்களோடு ஒப்பிடுகையில், அபிவிருத்தி யினைப் பெறுவதற்கான தேவை உள்ளது இது. ஆயினும் தமிழர் பிரதேசத்தில் அமைந்திருக்கும் ஒரே குற்றத்துக்காக, அபிவிருத் திக்கான கதவுகள் யாவும் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

என்றோ ஒரு நாள் திருகோணமலைத் துறைமுகம் பறிபோகலாம் என்ற காரணத்தாலேயே ஆட்சிக்கு வரும் அரசுகள் 'மாற்றான் தாய்' மனப்பான்மையில் அபிவிருத்திசெய்யாது காலம் கடத்தி வருகின்றன.

இது போதாதென்று அங்கு கடமையாற்றும் அதிகாரிகளும், 'சுயநலம் கருதி' துறைமுகத்தின் வருமானத்தையும், அபிவிருத் தியையும் சீரழித்து வருகின்றனர் என்றும் அறியமுடிகிறது.

1967 — 1979ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் போர்ட் கொமிஷன் (Port Commission), போர்ட் ரெலி (Port Tally), போர்ட் கார்கோ கோப்பறேஷன் (Port Cargo Corporation) என இயங்கிய பிரிவுகளின் இணைப்பே 1979ஆம் ஆண்டு இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை என்ற ஒரு பலம் வாய்ந்த நிறுவனமாக மலர்ந்தது.

இன்று எமது நாட்டின் வருமானங்களை நிர்ணயிக்கும் பாரிய அமைப்புக்களில் ஒன்றாகவும் இது விளங்குகின்றது.

ஏனைய துறைமுகங்களோடு ஒப்பிடுகையில் திருமலைத் துறைமுகத்தின் 'இயங்குதல் பகுதி' வேறுபட்ட நடைமுறை யினைக் கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

1958ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சட்டத்துக்கு அமையவே இன்று வரை 'ஏற்றி இறக்கல்' வேலைகள் நடைபெற்று வருகின்றன.

1958ஆம் ஆண்டுக் காலப் பகுதியில், கப்பல் கரையில் தரித்து நிற்க முடியாததால் வத்தையில் பொதிகளைக் கொண்டு சென்று ஏற்ற வேண்டும். ஒரு மணித்தியாலத்திற்கு ஏழு தொன் என்று அப் பொழுது நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இப்போது எவ்வளவோ வசதிகள் வந்த பின்பும் திருமலைத் துறைமுகம் இம்முறையினை இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை.

ஆரம்பத்தில் இங்கு உயர் அதிகாரிகளாகக் கடமையாற்றியோர் பொருள் ஏற்றி இறக்கலில் ஏஜென்ட்டுகளாக இருந்ததால், துறை முகத்துக்குக் கட்ட வேண்டிய பணத்தில் மீதப்படுத்துவதற்காகக் கப்பல் மீதான ஒத்துப் பார்த்தல் அளவை எழுதுவினைஞர் (On Board Tally & Survey Clerk) போன்ற சில பதவிகளை அவசிய மற்றதாகக் காட்டி இல்லாது ஒழித்து விட்டனர்.

இதனால் துறைமுகத்துக்கான ஒருசில வருமானங்களும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன.

கப்பலில் பொருட்களை ஏற்றி இறக்கும் போது பகல் கடமைக்கு 91 தொன் எனும் இரவு கடமைக்கு 112 தொன் என்றும் அதற்கு மேலே எனில் மேலதிக கொடுப்பனவு என்றும் வரை யறுக்கப்பட்டிருந்தது. இதிலும் இன்றுவரை எதுவித மாற்றங்களும் நடைமுறைப்படுத்தப்படாதது வேடிக்கையாகவே உள்ளது.

இதனால் மூன்று அல்லது நான்கு மணித்தியாலங்களுள் வேலை முடிந்து விட்டது என்று கூறி ஊழியர்கள் வீடுகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். இவ்வாறான வேலைகளில் அமர்த்தப்படு வோர், தமது கடமையை முடித்துக் கொண்டு, வீட்டுத் தேவை

கப்பலில் மா ஏற்றப்படுகிறது.

களையும் ஆற அமரச் செய்யக்கூடிய பாக்கியசாலிகளாக உள்ளனர்.

ஒருவரை பதில் கடமைக்காக நியமித்தால் அவரை அதற்கு மேலே உள்ள இன்னுமொரு பதவிக்கு பதில் கடமைக்காக நியமிக்க முடியாது. ஆனால் திருமலைத் துறைமுகத்தில் இது நடைமுறையில் உள்ளது.

இவை தவிர, நேரடி விநியோகத்திற்கு பற்றுச் சீட்டு வழங்கு தல், ஒரே தரத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு வழங்கப் படும் மேலதிக கொடுப்பனவில் வேறுபாடு, 'டிலே' என்ற பெயரில், குறைவான வேலை செய்தல் என தொழில் ரீதியான பல அம்சங் களில் திருகோணமலைத் துறைமுகம் ஏனைய துறை முகங்களி லிருந்து வேறுபட்டு நிற்கின்றது.

உண்மையில் சொல்லப்போனால், திருமலைத் துறைமுக அதிகாரிகள், ஊழியர்களால் திருத்தி அமைக்கப்பட்ட "எழுதப்படாத சட்டங்கள்" என்றே தற்போதுள்ள நடைமுறையை நாம் கூற வேண்டும்.

திருகோணமலைத் துறைமுக ஊழியர்களுக்கு இன்னொரு வகையிலும் கெட்டகாலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இங்கு கடமை புரியும் ஊழியர்கள் பிறிமா மா ஆலையையும் டோக்கியோ சீமெந்து ஆலையையும் நம்பித்தான் வாழ்க்கையை ஓட்டுகின்றனர் என்பது தெரிந்த விடயம். அதிலும் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பிறிமா மா ஆலை நிர்வாகத்தினர் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் 1976ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தம் 25 வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டது.

இக்கால கட்டத்தில் இலங்கைத் துறைமுக அதிகார சபை ஊழியர்களையே கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டிருந்தது.

ஆனால் 1987, 1991ஆம் ஆண்டுகளில் துறைமுக அதிகாரசபை ஊழியர்களை வெளியேற்றுவதற்கு பிறிமா ஆலை நிர்வாகம் பல முயற்சிகளை மேற்கொண்டது. அப்போதைய ஊழியர் சங்கங்கள் நடத்திய போராட்டங்களால் இம்முயற்சியைத் தள்ளிப் போட வேண்டிய நிலை ஜே.ஆர்.ஜெயவர்தனாவுக்கு ஏற்பட்டது.

இவ்வருடம் மே மாதம் நடைபெற்ற ஒப்பந்தத்தின் பிரகாரம் துறைமுக ஊழியர்களைத் தூக்கி எறியக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

மீண்டும் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு பிறிமா ஆலையை நிர்வகிப்பதற்காக, 570 கோடி அமெரிக்க டொலர் கொடுத்து பழைய நிர்வாகம் வாங்கியிருக்கிறது.

இதுவரை காலமும், உணவு சந்தைப்படுத்தல் திணைக்களம் செய்த வேலையை இனிமேல் திருமலையில் பிறிமா ஆலை நிர்வாகம் மேற்கொள்ளக் கூடும்.

அவ்வாறு நிகழுமாயின், துறைமுக அதிகார சபைக்குக் குறிப் பிட்ட கட்டணத்தைக் கட்டிவிட்டு துறைமுக ஊழியர்கள் இனித் தேவை யில்லை. நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என பிறிமா ஆலை நிருவாகம் கூறினால், துறைமுக ஊழியர்களின் நிலை என்ன?

ஏற்கனவே இத்தகைய நடைமுறையினை டோக்கியோ சீமெந்து ஆலை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

180 தொன்னுக்கு மேல் வேலை செய்ய வேண்டும் என பிறிமா நிர்வாகம் கோரினால், அதற்கு திருமலைத் துறைமுக ஊழியர்கள் என்ன முடிவு எடுப்பார்கள்? இதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும்!

பிறிமா ஆலையின் ஆட்சி மேலோங்கினால் துறைமுக ஊழியர்பாடு திண்டாட்டம்தான்...!

— எஸ்.எஸ்.ஆர்

றப்பர் தோட்டங்களில் வாழ்க்கை போராட்டம்!

மலையகம் என்றதும் எல்லோருடைய கண்களிலும் தோன்றுவது செழித்து வளர்ந்த தேயிலைச் செடிகளும், சலசலக்கும் அருவிகளும், அழகான மாலைக்காட்சிகளும் மட்டுமே.

ஆனால் அந்த மலைச் சரிவுகளில் ஓங்கி வளர்ந்துள்ளறப்பர் மரங்களுக்கிடையில் குமுறிக் கொண்டிருக்கும் றப்பர் தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலை வெளி உலகத்துக்குத் தெரிவதில்லை.

சுத்தமான காற்றும், சூரிய வெளிச்சமும் இவர்களுக்குக் கிடைப்பது அபூர்வம். றப்பர் மரங்களுக்கிடையே அமைக்கப்பட்டுள்ள பெரும்பாலான லயன் அறைகளின் முன்பக்கச் சுவர்கள் அரைவாசியாகவே கட்டப்பட்டுள்ளன. காற்று கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

இந்த லயன் வீடுகள் இரண்டு அறைகளை மட்டும் கொண்டவை. முன் அறையைக் (வராந்தா) குசினியாகவும், பால் வெட்டக் கொண்டு செல்லும் வாளிகள், ஏணிகள், கத்திகள் மற்றும் விறகு என்பனவற்றையும் சேர்த்து வைக்கும் களஞ்சிய அறையாகவும் பயன்படுத்துகின்றனர்.

உள் அறையை வரவேற்பறையாகவும் படுக்கை அறையாகவும் பயன்படுத்துகின்றனர். இதிலேயே தாய் தந்தையுடன் குழந்தைகளும் , ஏன் வயதுக்கு வந்த ஆண், பெண் பிள்ளைகளும் மந்தைகள் போல் முடங்கிக் கொள்வர்.

ஒரு சில தோட்டங்களில் லயன்களுக்கு முன்னால் சிறு சிறு தற்காலிக குடில்களைக் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றையும் கூட தோட்ட நிர்வாகம் உடைக்கச் சொல்லும் போது உடைத்து விடுவோம் என எழுதிக் கொடுக்க வேண்டும்.

சுத்தமான குடி தண்ணீர் கிடைப்பது அரிது. றப்பர் தோட்டங்கள் மலைச்சரிவுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் இருப்பதால் 90 சதவீதமான தோட்டங்களில் கிணற்று நீரையே பயன் படுத்துகின்றனர்.

இந்த கிணறுகள் கூட சுற்று மதில்கள் இன்றி 4 அல்லது 5 அடி ஆழத்திற்குதோண்டப் பட்டு வெறும் கற்களால் கட்டப்பட்டவை.

றப்பர் மரங்களுக்கு அடிக்கப் படும் இரசாயன மருந்துகள், றப்பர் தொழிற் சாலைகளில் இருந்து வெளியாகும் கழிவு நீர், றப்பர் பால் சேகரிக்கும் வாளி களையும், பௌசர் களையும் கழுவி விடும் நீர் என்பன கசிந்து, இந்தக் கிணற்று நீருடன் கலந்து விடுகின்றன.

றப்பர் மரங்களில் இருந்து கொட்டும் இலைகளும் திறந்த கிணறுகளுக்குள் ளேயே விழுந்து அழுகிக் கிடக்கின்றன.

இந்த நீரைத் தான் இவர்கள் குடிக்கின்றனர். அதனால் வயிற்றோட்டம், வாந்திபேதி, சொறி, சிரங்கு போன்ற நோய்களினால் பாதிக்கப்படுகின்றனர்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடன் ஒப்பிடும் போது றப்பர் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வித் துறையில் கூடுதலாகப் பின்னடைந்துள்ளனர்.

தாயும், தந்தையும் பால் வெட்டச் செல்லும் போது அவர்களுடைய பிள்ளைகள் பால் வாளிகளைத் தூக்கிச் செல்லவும், பாலை கொண்டு செல்லவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

காரணம் அதிகாலை ஆறு மணிக்கு முன் அதாவது சூரிய ஒளி படுவதற்கு முன் சென்று பால் வெட்ட ஆரம்பிக்க வேண்டும்.

மரங்களின் பட்டைகளை சீவி விடுவதால் வடியும் பாலை சிரட்டைகளில் வடித்து வாளிகளில் சேகரித்துக் கொண்டு வந்து ஒப்படைக்க வேண் டும். இவர்கள் ஒவ்வொரு வரும் 200 தொடக்கம் 150 மரங்கள் வரை பட்டை சீவி 5 கிலோவுக்குக் குறையாமல் பால் சேகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் இவர்களுக்கு அரைச்சம்பளமே கொடுக்கப்படும்.

இவர்களுடைய முழு நாள் சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஆக 95 ரூபா மட்டுமே. 25 நாட்களுக்குக் குறையாமல் வேலை செய்தால் மட்டுமே நாளொன்றுக்கு 101 ரூபா சம்பளம் கிடைக்கும். வேறு எந்த விதமான சலுகைகளும் இல்லை. இவ்வாறு குறைந்த சம்பளத்தைப் பெற்று அவஸ்தைப்படும் இவர்களுக்கு அன்றாடம் கிடைப்பது அரைப் பட்டினியும் கால் வயிற்றுக் கஞ்சியும் தான்.

மழைகாலம் வந்துவிட்டால் இவர்கள் பாடு படு மோசமாகி விடுகிறது.

மழைகாலம் வந்தால் இவர்களுக்கு வேலை இல்லை ஈரம் கயாத மரங்களில் வடியும் பாலுடன் தண்ணீர் கலந்து விடும் என்பதால் வேலை வழங்கப்படுவதில்லை.

அண்மையில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் பல மாதங்கள் தொடர்ந்து வேலையற்று இருந்தனர். எந்த விதமான வருமானமும் இன்றி காது, கழுத்தில் உள்ள நகைகளை அடகு வைத்து சாப்பிடும் அவல நிலை காணப்பட்டது.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் இந்த அப்பாவி றப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்த விதமான நிவாரணங்களும் வழங்கப் படுவதில்லை.

''விவசாயிகள் பாதிக்கப்பட்டால் அரசு வரட்சி நிவாரணம் வழங்குகின்றது.

ஆனால் நாம் பாதிக்கப்படும் போது தட்டிக் கேட்க யாரும் இல்லை.

மழைகாலம் வந்துவிட்டாலோ எங்களுக்குத்தான் வயிற்றில் அடி, வாயிலே மண் என்கின்றனர் றப்பர் தோட்டத் தொழிலாளர்கள்.

இவர்களும் சாதாரணமானவர்கள் அல்லர். இன்று தேசிய வருமானத்தை ஈட்டித் தருவதில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ள றப்பர் உற்பத்தி தொழில் நாயகர்கள். ஆனால் இவர்களின் வாழ்க்கைத் தரமோ படு பாதாளத்தில்.

ஒரு வேதனைக்குரிய விடயம் என்ன தெரியுமா? இவர்களும் மாதா மாதம் தொழிற்சங்க சந்தா செலுத்தும் நிரந்தர அடிமைகள். இவர்களுக்கு விமோசனம் பெற்றுத் தருவது யார்? அது தான் கேள்வி.

மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

இரு நிபந்தனைகள்

அம்பாறை மாவட்டத்தில் அவர் சுயாதீன தமிழ் அரசியல்வாதி. அண்மையில் அவரைத் தனித்துவக் கட்சியின் அதிகார மன்ற உறுப்பினர் ஒருவர் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

அம்பாறையில் இந்தத் தமிழ் அரசியல் வாதியின் ஆதரவை தனித்துவக் கட்சியின் பிரதிநிதி கோரினாராம். நீங்கள் சரி என்றால் கரையோர மாவட்டம் பெறுவதில் உள்ள சிக்கல் குறையும் என்றாராம்.

ஆனால் அந்தத் தமிழ் அரசியல்வாதி ஆதரவளிக்க இரு நிபந்தனைகளை முன்வைத்தாராம். கல்முனைத் தமிழ் உதவி அரசாங்க பிரிவு, காரைதீவு உதவி அரசாங்கப் பிரிவு, வளத்தாப்பிட்டி உதவி அரசாங்கப் பிரிவு ஆகியவற்றை ஒன்றிணைத்து அப்பகுதியை பிரதேச சபை மட்டத்துக்குத் தரம் உயர்த்த வேண்டும். அத்தோடு பொத்துவிலில் தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கோரினாராம்.

இந்த இரு விடயங்களுக்கும் தனித்துவக் கட்சி ஆதரவு அளித்து அதனைச் செயற்படுத்த உதவுமானால் கல்முனை கரையோர மாவட்டம் உருவாக ஆதரவு அளிப்பதாக அந்தத் தமிழ் அரசியல் வாதி தெரிவித்தாராம்.

இந்தத் தமிழ் அரசியல்வாதியின் நிபந்தனைக்கு இன்னுமொரு தமிழ்க்கட்சியின் செயலாளரும் ஆதரவு தெரிவித்திருப்பதாகத் தகவல்.

சந்தேகம்

புலிகளுக்கு சிக்கல் என்றால் அவர்களுக்காகப் பேசுவது மட்டும் தமிழ்க் கட்சிகளின் இலக்காக இருக்கக் கூடாது என்பதில் முன்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தீவிரமாக இருக்கிறார்களாம்.

சித்தர் தரப்பு நீண்ட காலமாக ஒதுங்கியிருந்து விட்டு திடீரென்று கடைசியாக நடைபெற்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டது. இது ஒரு சில தமிழ் தலைவர்களுக்கு மகிழ்ச்சியாகவும் ஒருவிதத்தில் அதிர்ச்சியாகவும் இருந்ததாம்.

''தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை நாங்கள் அங்கீகரிப்பதில்லை. எங்கள் நிலைப்பாட்டுக்கு உங்களால் இணங்கி வரமுடிந்தால் மட்டுமே கூட்டமைப்புக் கூட்டங்களில் நாங்கள் கலந்து கொள்வோம் என்று சித்தர் தரப்பு நிபந்தனை போட்ட பின்பு தான் கூட்டத்தில் கலந்து கொள்ள முன் வந்ததாம்.

மலையகத்து முன்னணிக்காரர்களின் சில பேச்சுக்களும் அன்புச் சந்திரனாரின் பேச்சுக்களும் தற்பொழுது சற்று திசை திரும்பி இருக்கிறதாம். கடைசியாக நடைபெற்ற கூட்டமைப்புக் கூட்டத்தில் இணைப்புக் குழு ஒன்றை நியமிப்பது பற்றியும் பேசப்பட்டதாம்.

இந்த இணைப்புக் குழுதான் அடுத்த கூட்டத்தை நடத்த வேண்டும்.

அந்த வகையில் பழம் கட்சியினரே அடுத்த கூட்டத்தை நடத்தலாம் என்றும் ஒரு சாரார் கூறுகிறார்கள். எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் அக்கூட்டம் நடைபெறும் என்றும் அவர்கள் நம்புகிறார்களாம். ஆனால் வேறு கட்சிக்காரர்கள் சிலர் இதனை நம்பவில்லையாம். இணைப்புக் குழு அமைப்பது குறித்து அடுத்த கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்படும் என்று பழம் கட்சியின் சேனைராஜன் தெரிவித்திருப்பதாகவே வேறு கட்சிக்காரர்கள் நினைக்கிறார்கள்.

இதற்கிடையில் மாவட்ட மட்டத்தில் புலித் தடையை எதிர்த்து கருத்தரங்குகள் நடத்த அடைக்கலமானவர் தரப்பு விரும்புகிறதாம்.

எல்லையில்லாத வரம்

கரையோர நிலப்பரப்பு விவகாரத்தில் பெண் தலைவியின் நிலைப்பாடு அதிகார அம்மணிக்கு சார்பானதாக முற்றாக மாறிவிட்டிருக்கிறதாம்.

நிலப்பரப்புக்கு எல்லைகளை வகுத்து ஏற்கனவே தனித்துவத் தலைவர் தரப்பு உறுதியாக நிற்கும்போது பெண் தலைவியும், அவர் தரப்பினரும் கரையோர நிலப்பரப்புக்கு ஆதரவுதான் என்று வெளிப்படையாகக் கூறினாலும் இப்போது மாறிவிட்டார்களாம்.

நிலப்பரப்பு கோரிக்கையின் போது எல்லைகளை வரையறுத்து கூறக்கூடாது என்பதில் பெண் தலைவி உறுதியாக இருக்கிறாராம்.

எல்லை வரையறுக்காத கரையோர நிலப்பரப்பில் உள்ள தம்மின மக்களின் நலன்களைப் பேண ஓர் அலுவலக அமைப்புத் தான் சிறந்தது என்றும், அதனை அதிகார அம்மணியிடம் இருந்து பெறவும் முயற்சிகள் நடக்கிறதாம்.

அலுவலகம் ஒன்றைப் பெற்றுவிட்டால் அதிலிருந்து படிப்படியாக முன்னேறி உரிய இலக்கை அடைந்துவிட முடியும் என்று பெண் தலைவி தன் சார்பான முக்கியஸ்தர்களுக்கு விளக்கமும் அளித்து வருகிறாராம்.

ஆரூடம்

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டால் அதிகார அம்மணி தரப்புத்தான் நிச்சயம் வெல்லுமாம்.

வடபுலத்துத் தலைநகரில் யுத்தம் ஒன்று நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் மிக அதிகமாக இருக்கிறது. தம்பி தரப்பும், அதிகாரத்திலுள்ள படைத் தரப்பும் விட்டுக் கொடுக்காமல் செயற்படத் தயாராகின்றன.

இப்படி அடித்து ஆரூடம் கூறுகிறார் ஓர் அரசியல் சித்தர்.

வடபுலத்துக்கு விஜயம் செய்திருந்த சித்தர் அதிகாரமுள்ள இன்னொரு தமிழ்க்கட்சி முக்கியஸ்தரின் உஷாரான வேலைகளைக் கண்டு உற்சாகமாகப் பேசுகிறாராம்.

''அவர் உஷாராக வேலை செய்கிறார். எப்போது பார்த்தாலும் பிஸியாகவே இருக்கிறார். நியாயமான சனங்கள் வந்து சந்தித்துப் பேசி தங்கள் வேலைகளை முடித்துக் கொள்கிறார்கள் என்று சித்தர் புகழ்பாடுகிறார்.

ஆனால் கூடவே ஒரு சந்தேகம். அதிகார அம்மணி தரப்பு அக்கட்சிக்கு நிறையப் பணத்தை ஒதுக்கக் கூடும். பணத்தை ரிலீஸ் பண்ணுவதில் தடங்கல் செய்தால், எல்லாம் தடங்கலாகி விடுமே என்பதுதான் அவரது சந்தேகம்.

எல்லாம் அவன் செயல்

தனித்துவக் கட்சிக்கும், அதன் துணைக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலும், பொறுப்பு வாய்ந்த அமைச்சர் தனித்துவக் கட்சித் தலைவரைச் சாடுவதும் நல்லதற்காகவே அமைந்துவிட்டதாம். இதனால் சில பிரமுகர்கள் எல்லாப் புகழும் அவனுக்கே என்று இறைதுதி பாடுகிறார்களாம்.

தனித்துவக் கட்சியை விட்டு வெளியேறியவர்களும், வெளியேற்றப்பட்டவர்களும், இதைச் சாட்டாகக் கொண்டு கட்சிக்குள் நுழைய கடும் முயற்சி செய்கிறார்களாம். முயற்சி செய்த சிலருக்கு பலனும் கிடைத்துள்ளதாம்.

தனித்துவக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதனால் போட்டியாக இன்னுமொரு முஸ்லிம் கட்சியை ஸ்தாபித்த வரும், பின்பு பச்சைக் கட்சிக்கு மாறியவருமான ஒரு சட்டவாதி இப்போது பெண் தலைவி புகழ் பாடுகிறாராம். அவரது ஆட்கள் பெண் தலைவியின் கட்சிக்குள் மெல்லென இடம்பிடித்துள்ளார்களாம்.

அதேநேரம் நாட்டின் பிரதான பதவிக்கு போட்டியிட்ட இன்னுமொரு சட்டவாதி தனித்துவத் தலைவரின் பக்கம் இணைந்து செயற்படும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளாராம்.

நல்லதுக்காகவே எல்லாம் நடப்பதால் இன்னும் இன்னும் கட்சி பலம் பெற்று வருவதாக இறைதுதி பாடுவோர் தெரிவிக்கின்றனர்.

கதிரேசன் வீதிக்குழியால் பூதம் கிளம்பிய கதை!

குழி நிரப்பப்படவில்லை; தண்ணீர் விநியோகம்தான் நின்றது

''மிஸ்டர் க்றோ! உம்மைத்தான். அந்தோனியாருக்கே குழிபறிக்கிறார்கள் போல இருக்கிறதே! போய்ப் பாருமையா!'' என்று கத்தினார் ஆசிரியர்.

எங்கே ஏது என்று கேட்க மிஸ்டர் க்றோவுக்கு தைரியம் வரவில்லை. தலையைச் சொறிந்தார். ஆசிரியருக்கு விஷயம் விளங்கிவிட்டது. ''பெப்ரவரி 18ஆம் திகதி கடுர் ஒளியைப் பாரும். எல்லாம் புரியும்'' என்று அமைதியாகச் சொன்னார்.

அவசரமாகப் பத்திரிகையை ஒரு நோட்டம் விட்டதோடு போட்டோகிராபருக்கும் சிக்னல் கொடுத்துவிட்டுச் சிறகை விரித்தார் மிஸ்டர்க்றோ.

புதிய கதிரேசன் வீதி — மைலன் தியேட்டரடிச் சந்தியில் நேரே போய் இறங்கியதும் மிஸ்டர் க்றோவுக்குத் தன் கண்களை நம்பமுடியவில்லை.

பழைய குழி தென்படவில்லை. ஓரப்பார்வையில் பாதைப் பக்கமாக மண் நிரப்பப்பட்டிருந்தது தெரிந்தது. மேலே கொஞ்சப் பலகைகள் அடுக்கப்பட்டிருந்தன.

தவறி விழுந்தால் அதோ கதிதான்!

பக்கத்தில் இருந்த கட்டடங்களைப் பார்த்தால் ஒரே கண்ணாராவி. ஒரு பக்க அத்திவாரம் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. அதனடியில் குப்பைகள், அழுக்கு நீர்!

மிஸ்டர் க்றோ அதைப் பார்த்து மலைத்ததை அருகில் இருந்த 'ஹலோ' நிலையக்காரர் கண்டுவிட்டார். மிஸ்டர் க்றோவைக் கண்டதில் அவருக்கு ஒரே மகிழ்ச்சி. அழைத்தார். கேட்காமலே மர்மங்களை அவிழ்த்துவிட்டார்.

''பெப்ரவரி 18ஆம் திகதி சுடர் ஒளியில் இந்தப் பயங்கரக் குழி நிரப்பப்படாமல் இருப்பது பற்றி நீங்களே எழுதியிருந்தீர்கள்.

அதை அடுத்து —

இந்தக் குழியை நிரப்பும் வேலையை முனிசிபல் கவுன்ஸில் தனியார் கொந்தாரத்து நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைத்திருக்கிறது. அவர்களும் வேலையை ஆரம்பித்தார்கள். கொங்கிரீட் உருளைகளைப் போட்டார்கள்'' என்று அந்த ஹலோ நிலையக்காரர் கூறிக் கொண்டிருந்தார்.

''அப்படியானால் ஓரிரு நாட்களிலேயே வேலை முடிந்திருக்குமே'' என்று இடையில் மிஸ்டர் க்றோ குறுக்கிட்டபோது —

''எங்கே மிஸ்டர் க்றோ முடிந்தது? வேலைக்குத் தேவையான உபகரணங்கள் அவர்களிடம் இருக்கவில்லை. வேலை செய்ய ஆட்களும் இல்லை. அக்கம் பக்கத்தில் நின்றவர்களைத் தேடிப்பிடித்துத்தான் ஏதோ செய்து கொண்டிருந்தார்கள்'' என்றார்.

''அப்படியானால் இந்த மண், பலகை எல்லாம்.....?''

''அது ஒருநாள் கூத்து. மாலையில் புனித அந்தோனியார் ஊர்வலம் வரப்போகிறதே என்று தற்காலிக ஏற்பாடு இது'' என்று விளக்கமளித்தார்.

புனிதரின் திருப்பவனி அந்த இடத்தைக் கடந்தபோது பவனியில் சென்றோர் தவறி விழுந்து விடாதிருக்கப் பலர் கை கோத்து மனிதச் சங்கிலியாக நின்று உதவினர்.

ஏனெனில் அவர்களுக்கு அந்த ஒருநாள் கூத்தில் துளியும் நம்பிக்கை ஏற்படவில்லை.

சரி..... குழி இனி இப்படியேதான் இருக்கப்போகிறதா?

ஹலோ நிலையக்காரருக்கு எரிச்சல் வந்துவிட்டது.

''அந்தக் குழியை விடும் மிஸ்டர் க்றோ. மூன்ற வாரங்களுக்கு மேலாக இப்பகுதியில் தண்ணீர் விநியோகம் இல்லை. இந்த அநியாயத்தை யாருக்குச் சொல்வது?'' என்றார்.

அரைகுறையாக மூடப்பட்ட பாதாளக் குழி

''ஏன் ஏன் என்ன நடந்தது?''

''குழியை நிரப்பி திருத்தவேலைகளை மேற்கொள்ள வந்தவர்கள் தண்ணீர் சப்ளை லைனை உடைத்துவிட்டார்கள். சுமார் 30 வீடுகளுக்குத் தண்ணீர் இல்லை. முனிசிபல் கவுன்ஸிலிடம் சொன்னால் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குப் போ என்கிறார்கள். அங்கே போனால் அவர்கள் முனிசிபல் கவுன்ஸிலுக்குத் துரத்துகிறார்கள்.

இப்படியே இரண்டு தரப்பாரும் மாறி மாறி விரட்டுகிறார்கள். நாங்களோ தண்ணீர் இல்லாமல் தவிக்கிறோம்'' என்று மூச்சுவிடாமல் கூறி முடித்தார்.

கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல முக்கிய வீதியில் உள்ள பாதாளக் குழியை மூட முயன்று தண்ணீர் விநியோகம் இல்லாமல் போய்விட்டதே! முனிசிபல் கவுன்ஸில் நீர் வழங்கல் சபை இழுபறியால் அப்பாவி நகரவாசிகள் பாதிக்கப்படுவதா? மிஸ்டர் க்றோவுக்கு கண்களில் தீப்பொறி பறந்தது.

அதன் மத்தியிலும் போட்டோ கிராபரைப் பார்த்தார். படங்கள் ரெடி என்ற சிக்னல் கிடைத்தது. நேரே ஆபீஸுக்குச் சிறகடித்தார் மிஸ்டர் க்றோ.

(படங்கள்: த. வேலுச்சாமி)

காலியில் சந்நிதானம் அருளுரை

திருவாவடுதுறை ஆதீனம் இளைய சந்நிதானம் சீர்மிகு காசி விசுவநாத தேசிக சுவாமிகள் காலி சிவன் கோயிலுக்கு விஜயம் செய்து அங்கே பக்தர்களுக்கு அருளுரை நிகழ்த்தும் காட்சி.

GOLDEN TOWER APARTMENTS

இல.41, மகாவித்தியாலய மாவத்தை, கொழும்பு 13 இல் அமைக்கப்பட்டுள்ள

GOLDEN TOWER பெளர்ட்மெண்ட்ஸ்

சொகுசு மாடி வீடுகள்,

உங்கள் எதிர்காலக் கனவுகளை இன்றே நனவாக்கக் காத்திருங்கள்...!

- அதி நவீன வசதிகள்.
- தரமான நிர்மானம்.
- பலதலைமுறைகளுக்கு உறுதியுடன் விளங்கக்கூடிய வகையில் மேலைத்தேய உபகரணங்களின் அமைப்பு.
- பாடசாலைகள், சமய வழிபாட்டுத்தலங்கள், சந்தைகள், தபாலகம், வங்கிகள், பஸ் நிலையங்கள் ஆகியவற்றிற்கு அருகாமையில்.

குடிபுக தயார் நிலையில் 2—3 படுக்கை அறைகளைக் கொண்ட வீடுகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள, தரம்—பொழிவு—சுகாதாரம் அதிநவீன வசதிகள்—உறுதிப்பாடு.

நீங்கள் பார்த்து திருப்தியுடன் தீர்மானித்திட நேரில் வாருங்கள்.

தரத்தின் சிறப்பை உணருங்கள். உங்களுக்கான மாடிவீட்டை வாங்குங்கள்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

41, Mahavidhyalaya Mawatha,
Colombo - 13
Tel: 321722, 320279, 077-310251, 432502 Fax: 327101

Devi Property Development Pvt. Ltd.
No.131, Sea street, Colombo - 11. Sri Lanka. Tel: 432502, 452821,
Mobile No: 077-310251, Fax: 433178, E-mail: devi131@visual.lk